விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஹூ பங்குனி மீ 05-ம் உ | ஞாயிற்றுக்கிழமை | (18 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 20 | ஓசை 28

## அடுத்த சார்க் மகாநாடு மாலைதீவில், இலங்கையில் இல்லை.

(கொழும்பு)

1989 இல் கொழும்பில் நடைபெறவிருந்த தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு மகாநாடு (சார்க்), 1990 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் நடத்துவதாகப் பின் போடப்பட்டிருந்தது. தற்பொழுது இம் மகாநாட்டை ஏப்பிரல் மாதமும் இலங்கையில் நடத்துவதில்லை என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

நாளை திங்கட்கிழமை பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஜனாப் யாகுப்கான் கொழும்பு வரும் போது, அரசாங்கத்தின் முடிவு அவருக்குத் தெரிவிக்கப்படுமாம். தற்சமயம் சார்க் நாடுகளின் தலைமை பாகிஸ்தான் வசமுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் அமைதிபேண புலிகள் - அரசு உடன்பாடு!



## நினைவஞ்சலி கூட்டம்

(கரவெட்டி)

சடந்தாண் டுபருத்தித்துறையில் நடைபெற்ற இந்தியப்படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த இளம் புலிகள் றோசான் கரி.பவான் ஆகியோரின் ஓராண்டு நினைவையொட்டி அஞ்சலிக் கூட்டம் நடாத்த ஏற்பாடாகியுள்ளது.

எதிர் வரும் திங்கட்கிழமை

(4-ஆம் பக்கம் பார்க்க)

ஞாயிறு மலர் உள்ளே

## முப்படைத் தளபதிகளும் புலிகளும் நகரைச் சுற்றிப் பார்வையிட்டனர்

(திருக்கோணமலை)

நேற்றுக்காலை திருக்கோணமலை மாவட்டத்தில் குறிப்பாகத் திருமலை நகரில் அமைதியையும் பாதுகாப்பையும் பேணுவது சம்பந்தமாக விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை முப்படை அதிகாரிகளுக்கும் இடையில் ஒரு இணக்கம் காணப்பட்டுள்ளது. நேற்றுக்காலை திருமலை நகரிலுள்ள கடற்படைத் தலைமைக் காரியாலயத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளிற்கும் சிறிலங்கா பாதுகாப்புப்படை அதிகாரிகளுக்கும் மத்தியில் நடைபெற்ற மகாநாட்டின்போதே இந்த இணக்கம் ஏற்பட்டது.

இந்த சமரச மாநாட்டிற்கு உயர்கல்வி விஞ்ஞான அமைச்சர் திரு. ஏ. சி. எஸ். ஹமீத் தலைமை வகித்தார். விடுதலைப் புலிகள் இயக்கம் சார்பில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி, திரு. அன்ரன் பாலசிங்கம், திருக்கோணமலை மாவட்ட பிரதேசத் தளபதி திரு. பதுமன், திருக்கோணமலை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு றூபன் திரு. விக்கி, திரு தயா, திரு





அரசாங்கத்தின் சார்பில் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் ரணதுங்க, பொலிஸ் மா அதிபர் திரு. ஏர்ணஸ்ட் பெரோ, வடகிழக்கு மாகாண ஆளுனர் லெப்டினட் ஜெனரல் செனவிரத்தின மற்றும் இராணுவ கடற்படை, ஆகாயப்படை, பொலிஸ் படையைச் சேர்ந்த உயர் அதிகாரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசிய இராணுவம் அரிசி லொறி கடத்தல்!

(கொழும்பு)

தமிழ்த் தேசிய இராணுவத்தைச் சேர்ந்த மூன்று பேர் ஆயுதங்களுடன் அரிசி லொறியென்றைபுறக்கோட்டையில் புறக்கோட்டைக்கு வந்த போது பொலிஸாரின் வழிச் சோதனையில் அகப்பட்டனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## நான்கண்டு கேட்டறிந்த விடயங்கள் அதிர்ச்சியும் வேதனையும் தருகிறது

### நெடுமாறன் அறிக்கை

இந்தியப் படையின் துணையுடன் துரோக இயக்கங்கள் நடத்திய கொலைகளும், கொள்ளைகளும், கற்பழிப்புகளும் மனிதத்தன்மையற்றவை. எந்த நாகரீகச் சமூகமும் சகித்துக் கொள்ள முடியாதவை என வடக்குக் கிழக்குப் பகுதியில் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு நாடுதிரும்பும் போது தமிழர் தேசிய இயக்கத்தலைவர் நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்தார்.

மேலும் அவரது அறிக்கையில் கடந்த 25 நாட்களாகத் தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து, சகல தரப்பு மக்களையும் சந்தித்துப்பேசி, நான் கண்டு, கேட்டு அறிந்த விபரங்கள் அதிர்ச்சியும், வேதனையும்,

(4ஆம் பக்கம் பார்க்க)



பந்தமாக விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை முப்படை அதிகாரி களுக்கும் இடையில் ஒரு இணக்கம் காணப்பட்டுள்ளது. நேற்றுக் காலை திருமலை நகரிலுள்ள கடற்படைத் தலைமைக் காரியாலயத் தில் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளிற்கும் சிறிலங்கா பாதுகாப்புப்படை அதிகாரிகளுக்கும் மத்தியில் நடைபெற்ற மகாநாட் டின்போதே இந்த இணக்கம் ஏற்பட்டது.



இந்த சமரச மாநாட்டிற்கு உயர்கல்வி விஞ்ஞான அமைச்சர் திரு. ஏ. சி. எஸ். ஹமீத் தலைமை வகித்தார். விடுதலைப் புலிகள் இயக்கம் சார்பில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி, திரு. அன்ரன் பாலசிங்கம், திருக்கோணமலை மாவட்ட பிரதேசத் தளபதி திரு. பதுமன், திருக்கோணமலை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு றூபன் திரு. விக்கி, திரு தயா, திருமதி பாலசிங்கம், திரு. நடேசன் ஆகியோரும் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் ரணதுங்க, பொலிஸ் மா



அதிபர் திரு. ஏர்ணஸ்ட் பெரோ, வடகிழக்கு மாகாண ஆளுனர் லெப்டினட் ஜெனரல் செனவிரத்தின மற்றும் இராணுவ கடற்படை, ஆகாயப்படை, பொலிஸ் படையைச் சேர்ந்த உயர் அதிகாரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்த் தேசிய இராணுவம் அரிசி லொறி கடத்தல்!

(கொழும்பு)

தமிழ்த்தேசிய இராணுவத்தைச் சேர்ந்த மூன்று பேர் ஆயுதங்களுடன் அரிசி லொறியை வென்றைபுறக்கோட்டையில் வைத்து கடத்த எடுத்த முயற்சி பொலிஸாரால் முறியடிக்கப்பட்டது.

இவர்கள் இந்த லொறியை கொட்டாஞ்சேனைப் பகுதிக்கு கொண்டு சென்று அதிலிருந்த அரிசியை வேறு லொறிக்கு மாற்றியபின்னர் அந்த லொறியுடன் இருவர் மீண்டும் புறக்கோட்டைக்கு வந்தபோது பொலிஸாரின் வழிச் சோதனையில் அகப்பட்டனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# பாலசிங்கம் யாழ். நகரில்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை சென்றிருந்த விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவரது பாரியார் அடல் பாலசிங்கமும் நேற்று மாலை யாழ்ப்பாணம் திரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

களும் மனிதத்தன்மையற்றவை. எந்த நாகரீகச் சமூகமும் சகித்துக் கொள்ள முடியாதவை என வடக்குக் கிழக்குப் பகுதியில் சுற்றுப்

தேசிய இயக்கத்தலைவர் நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்தார்.

மேலும் அவரது அறிக்கையில் கடந்த 25 நாட்களாகத்

சகல தரப்பு மக்களையும் சந்தித்துப்பேசி, நான் கண்டு, கேட்டு அறிந்த விபரங்கள் அதிர்ச்சியும், வேதனையும்,

(4ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை தமிழ் நாடு அரசியல் தலைவர்களில் ஒருவரான திரு. ப. நெடுமாறன் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம். தலைவர் பிரபாகரனுடன் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) இரண்டு வருடங்களாகச் சிறையிலிருந்து சமீபத்தில் விடுதலையான திரு. நடேசு, கவிஞர் புதுவை இரத்தினதுரை ஆகியோர்ரும் படத்தில் காணப்படுகின்றனர்.

# மாகாண சபை செயற்படாததால் சம்பளம் தாமதமாகலாம்.

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாண சபையின் செயல்பாடுகள் ஸ்தம்பித நிலையில் காணப்படுவதால் மாகாணசபை ஊடாக சம்பளம் பெறும் அரச ஊழியர்களின் இம்மாத சம்பளம் தாமதமடையலாமென தெரிய வருகிறது.

திறைசேரி முன்பு திணைக்களத் தலைவர்களுக்கு நேரடியாக அனுப்பிய சம்பளக் கொடுப்பனவு கட்டளை தற்போது மாகாணசபை ஊடாகவே அனுப்பப்படுகிறது.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் அலுவலகங்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

# மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரி மட்டக்களப்பில் அமைகிறது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரி அமைக்கும் வேலைகள் நாவலடி என்ற இடத்தில் நடைபெற்றுவருகிறது

வடக்கு-கிழக்கு பகுதிகளில் மீண்டும் மீன்பிடிப்பயிற்சியை ஊக்குவிக்கும் நோக்குடன் மீன்பிடி அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

'நோராட்' உதவியுடன் நாற்பத்தைந்து லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் இக்கல்லூரியின் முதலாம், இரண்டாம் கட்ட வேலைகள்நடை பெறுகின்றன

( 4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். பத்திரிகைகளுக்கு மட்டுநகரில் தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொது நூலகத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் தினசரிப் பத்திரிகைகளுக்கும் ஈழத்து தமிழ் சஞ்சிகைகளுக்கும் தடை விதிக்கப் பட்டுள்ளது.

இந்திய பத்திரிகைகளான ''இந்து'' தினமணிக்கதிர் போன்ற பத்திரிகைகளை தருவிக்கும் பொது நூலக நிர்வாகம் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் தினசரிப் பத்திரிகைகள் கொள்வனவு செய்யாது அவற்றிற்கு தடைவிதித்துள்ளது.

அதேவேளை மல்லிகை போன்ற சஞ்சிகைகளுக்கும் இந்நூலகத்தில் தடைவிதிக்கப்பட்டுள்ளமை குறித்து வாசகர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

(39)

# மீண்டும் உள்ளக பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா

(கொழும்பு)

முழுநேர உள்ளக பட்டப்பின் படிப்பு, கல்வி டிப்ளோமா பயிற்சி நெறிகளை மீண்டும் கல்வியமைச்சு ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் ஆறாம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

சிங்கள, தமிழ் மொழிமூலமான பரீட்சைகள் அடுத்த மாதம் 28ஆம் திகதி நடைபெறும். பரீட்சார்த்திகள் இரண்டு வினாத்தாள்களுக்கு விடைதர வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்

(4-ஆம் பக்கம் பார்க்க)

# 24 ஆம் திகதி முற்றாக வெளியேறி விடுவோம்

(கொழும்பு)

திருக்கோணமலையிலுள்ள இந்திய இராணுவத்தின் கடைசிப்பிரிவு இம்மாதம் இருபத்தி

சுல்கட்

நான்காம் திகதியே அங்கிருந்து வெளியேறிவிடுவார்கள்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இராணுவ அதிகாரி சொல்கிறார்

# விடுதலைப் புலிகள் திறமையான மதிப்புப்பெற்ற போராளிகள்

(கரவெட்டி)

''தமிழீழ விடுதலைப் புலிகள் மிகவும் திறமை வாய்ந்தவர்கள். மக்கள் மதிப்பைப் பெற்றுள்ள சுதந்திரப் போராளிகள். இவர்களுடன் நாம்கடந்தகாலபகைமையை, கசப்புணர்வை மறந்து முழுமையான உறவை வளர்க்கவே விரும்புகின்றோம். இதனை புலிகளின் தலைவர்களிடம் தெரிவிக்க தாங்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.''

இவ்வாறு பலாலி ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரி லெப். கேணல் நமுனுகமவின் அழைப்பையேற்றுச் சென்ற வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுத்தலைவர் திரு. எஸ். செல்வேந்திரா, பிரஜைகள் குழுச்செயலாளர் திரு. என். ஆனந்தராசா ஆகியோரிடம் மேற்படி இராணுவ அதிகாரி வேண்டிக்கொண்டார்.

பலாலி இராணுவ முகாமில் நிகழ்ந்த மேற்படி சந்திப்பில் இராணுவ அதிகாரி மேலும் கூறுகையில்;

(4-ஆம் பக்கம் பார்க்க)

# நினைவுச் சித்திரம்

(அச்சுவேலி)

அண்மைக் கால இராணுவ நடவடிக்கைகளின் போது போராடி வீரமரணம் அடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை நினைவூட்டும் வகையில் அச்சுவேலியில் சங்கானை வீதி சந்தியில் நீண்ட தூரத்திற்கு ஞாபகார்த்த நினைவு சித்திரம் வரையப்பட்டுள்ளது. அதேவேளை இந்திய இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்ட நினைவு ஸ்தூபிகளும் புதிதாகத் திருத்தி அமைக்கப்படவுள்ளன.

# விவசாயிகளை நம்பியேவாழ்கிறோம் என்பதை நாம் மறக்கக்கூடாது

## கிளிநொச்சி அரசாங்க அதிபர்

(கிளிநொச்சி)

சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்த மிகக்குறைந்த அளவு நிலப்பரப்பை உடைய யாழ். மாவட்டத்துக்கு ஒரு வருடத்திற்கு எம். பிக்ள் மூன்றுகோடி ரூபாவுக்குமேல் ஒதுக்கீடு செய்கின்றனர். ஆனால் கிளிநொச்சி மாவட்டம் கூடிய நிலப்பரப்பைக் கொண்டிருந்தும்ஒதுக்கப்படும் நிதி மிகவும் குறைவே.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் கூறினார்.

கிளிநொச்சி கமநலசேவை நிலையத்திற்கு வழங்கப்பட்ட பதினொரு உழவுயந்திரங்கள் எட்டு கமநலச்சேவை நிலையங்களுக்கு வழங்கும் வைபவத்தில் அரசாங்க அதிபர் உரையாற்றினார்.

கிளிநொச்சி கமநலச்சேவை உதவி ஆணையாளர் திரு. இ. கு. தனிநாயகம் தலைமையில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அப்பளம் தயாரிப்பாளர்களுக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்ட ' உழுந்து மா, கிலோ 22/- படி பெற்றுக் கொள்ளலாம். M.G.M., No·777 K.K.S Rd, Jaffna.

### சேவை

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள், செற் சட்டிகள், தாச்சிச் சட்டிகள், றேகள், சோஸ்பான்கள். பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-202)

பவுசர் ராங்கி 2,600 லீட்டர் இங்கிலிஷ்தயாரிப்பு கறள் பிடியாது மூடி, பம்ப் உடன் ORIGINAL CONDITION. மலிவு விற்பனை பிண்டீர் மனை சந்தைச் சதுக்கம் சங்கானை (B-126)

### சேவை

பித்தளை, செப்புப்பொருட்கள் கார், சைக்கிள் பாகங்களுக்கு குறோமியம் மின்பூச்சுக்கள் செய்துகொடுக்கப்படும். ஆஷா எலக்றோ பிளேற்றர்ஸ் அன்ட் மெற்றல் இன்டஸ்றீஸ் 148, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (B 304)

### மணமகள் தேவை

யாழ். குருகுல கத்தோலிக்க பெற்றோர் லண்டனில் நீண்ட காலமாக வசிக்கும் மாதம் 70,000 ரூபா வேதனம் பெறும் 5' 4'' உயரமும் கவர்ச்சியும் உள்ள மகனுக்கு மணமகள் தேடுகின்றனர். ஓரளவு சீதனம் எதிர்பார்க்கப்படுகின்றது. நல்லொழுக்கம், ஆங்கில அறிவு, அழகு விரும்பப்படுகிறது. விரும்புவோர் சகல விபரங்களையும் அனுப்பி வைக்கவும். C/O ஈழநாதம், 31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். (B 132)

றபர்சில், வீட்டுப் பெயர் பதித்தல், திறப்புக் கோர்வை, விலாசங்கள், பள்ளிக்கூடச் சின்னங்கள், மெழுகு சீல், மோட்டார் சயிக்கிள் நம்பர்கள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

## 'மேவின்ஸ்'

91/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (B/297)

ஈழநாத மடலுக்கு எமது அன்பு கனிந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.

குளிர்சாதனப் பெட்டிகள் சம்பந்தமான பழுது பார்க்கும் வேலைகள், மின்சார உபகரணம் சம்பந்தமான பொருட்களை பழுது பார்ப்பதற்கும் நீங் நாடவேண்டிய இடம்.

## நோர்த் கூல் எஞ்ஜினியர்ஸ்

இல. 250, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (B/305)


### புடவைக் கடையில் ஓடுபிரித்து திருட்டு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு லக்ஷ்மி புடவைக் கடையில் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு நேரம் ஓடுகளைப் பிரித்து உள்ளே புகுந்த கொள்ளையர் பல லட்சம் ரூபா பெறுமதியான புடவைகளைக் கொள்ளையடித்துள்ளனர்,

இச் சம்பவம் குறித்து விடுதலைப் புலிகளிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.


24 மணி நேரத்திற்குள் உங்களுக்கு கீழ் கண்டவற்றை ஓடருக்கு செய்து கொடுப்பதற்கு, காத்திருக்கிறார்கள்.

## நியூ கிறீன் பீக்கிங் பலஸ்

69, 4ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்.

நூடில்ஸ், புரியாணி, சாப்பாட்டுப் பார்சல்கள், கோழி இறைச்சி, மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, றால், சிங்கறால், நண்டு, பற்றிஸ், கட்லட், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள் நீங்கள் எடுத்துச் செல்வதற்கும் அங்கிருந்து உண்பதற்கும் சேவை செய்யக் காத்திருக்கின்றார்கள்.

## நியூ கிறீன் பீக்கிங் பலஸ்

69, 4ஆம் குறுக்குத்தெரு சின்னக்கடை, யாழ்ப்பாணம். (B/295)

பல வருடகால சேவையில் உன்னதமானதும், உயிர் ஊட்டும் சத்து நிரம்பியதும்.

## தோலகட்டி நெல்லிரசம்

வாங்கிப் பருகுங்கள்.

## தோலகட்டி ஆச்சிரமம்

வசாவிளான்

குறிப்பு: போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள் மூடியைப்பார்த்து வேண்டவும் சிவப்பு மூடியிலான வெள்ளை மார்க் பதியப்பட்டுள்ளது.

மறவாதீர்கள்

## தோலகட்டி product ஆச்சிரமம்

(B.294)

## PERSONAL CLASSES

B. M. C. Front Lane, JAFFNA.

90 A/L திங்கள் தொடக்கம் வெள்ளி வரை

நாளை புதியபிரிவுகள் ஆரம்பமாகின்றது.

| | | |
|---|---|---|
| PHY<br>சத்தியசீலன் | 8·30 a. m.<br>9-30 a. m.<br>4-30 p. m | ஒலியியல்<br>ஒட்டமின்னியல்<br>நீர்நிலையியல் |
| CHE<br>செல்வா | 6-30 a. m.<br>5-30 p. m. | இரசாயன இயக்கவியல்<br>சேதனச் சேர்வைகள் |
| ZOO<br>ஈஸ்வரதாசன் | 6-30 a. m. | சூழலியல் / குருதித்தொகுதி மீட்டல் |
| | 3-00 p. m. | பொருளாதார விலங்கியல் (திங்கள் / புதன்/வெள்ளி)<br>அசஞ்சுரக்கும் தொகுதி (செவ்வாய் / புதன்) |
| BOT<br>செல்வநேசன் | 10-30 a. m.<br>3-45 p. m. | மீட்டல் வினாவிடை<br>தாவர இராட்சியப் பிரிவு (திங்கள் / புதன் / வெள்ளி)<br>பிறப்புரிமையியல் (செவ்வாய். வியாழன்) |
| PURE / APP.<br>விஜயகுமார் | 3-01 p. m.<br>3-45 p. m. | தொகையீடு<br>உராய்வு |

90 A/L, 91 A/L சனி, ஞாயிறு வகுப்புக்கள்
09 A/L வினாவிடை வகுப்புகள் நடைபெறுகின்றன. (B-306)


நயினாதீவில்

### விவசாய கூட்டுறவு ஸ்தாபனம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நயினாதீவுக்கு விஜயம் செய்த கமத்தொழில் திணைக்கள அதிகாரிகள் அங்கு விவசாயிகள் கூட்டுறவு ஸ்தாபனம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கு ஆவன நடவடிக்கைகள் யாவும் எடுக்கப்பட்டதாக கமத்தொழில் திணைக்கள தலைமை அதிகாரி தெரிவிக்கிறார்.

நயினாதீவு மக்களுக்கு ஒரு இரண்டு சக்கர உளவு இயந்திரமும் வழங்கப்பட்டதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார். (லோ)

### ரம்ழான் மாதத்தில் பேரிச்சம்பழம் பகிர்ந்தளிக்கப்படும்

(கொழும்பு)

ரம்ழான் மாதத்தில் இலங்கை முஸ்லீம்கள் மத்தியில் விநியோகிக்கப்படவென சவூதிஅரேபிய மன்னரால்அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்பட்ட பேரிச்சம்பழம் 24 மாவட்டங்களுக்கும், அங்குள்ள முஸ்லீங்களின் செறிவிற்கேற்ப பகிர்ந்தளிக்கப்படும்.

### அஸாமில் 5 பொலிசார் கொலை

(கௌவுத்தி)

சுதந்திர அஸாம் தேசத்துக்காகப் போராடும் கம்யூனிஸ்ட் போராளிகள் ஐந்து பேரைக் கொலை செய்துள்ளார்கள் என்று பொலிஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன,

அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த போராளிகள் செவ்வாயன்று இரவு மறைந்திருந்து, ஒரு காரில் மேற்கொண்ட தாக்குதலில் பொலிஸ் மெய்ப்பாதுகாவலர் உட்பட ஐந்து பேர் இறந்துள்ளார்கள்.

கௌவுத்திக்கு 250 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கோபூலில் காங்கிரஸ் கட்சித் தலைவரான கோஸ்வாமி என்பவரைப் போராளிகள் சுட்டுக் கொன்றனர்.


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

80 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
## கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
## மனிதன்
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
## நாயகன்
(கலர்)

லிடோ (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
## பூ- பூவா பூத்திருக்கு
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
## ராஜாதி ராஜா
(கலர்)

12ஆவது வாரம்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
## வருஷம் 16
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
## அவள் ஒரு தொடர்கதை

வின்சர் - யாழ்
10.30 2.30 6.30
மோகன் - சுகாஷினி
## நெஞ்சத்தைக் கிள்ளாதே

நாம் கடந்த ஓடிய மாதங்களை எமது கண்ணோட்டத்தில் எடுத்துப் பார்த்தால் நிம்மதியற்ற வாழ்வு நிரந்தரமற்ற வீடுகள், நியாய தீர்வுக்கு மாறான சர்வதிகாரம். ஆனால் இன்று மக்களுக்காக இரவு பகலாய் அன்பு உபசரிப்புடனும், அன்புள்ளத்துடனும் எமது வீரவேங்கைகள் மக்கள் மத்தியில் ஒன்று சேர்ந்து வருவது மிகவும் வரவேற்கத்தக்கது வாழ்க இவர்கள் பணி. வெல்க தமிழீழம்!

## சுப்பையா அன் கோ

மின்சார லைய வீதி, யாழ்ப்பாணம்.

## உடனடித் தேவை

இலங்கை மின்சார சபையின் வடமாகாண பிரதி பொது முகாமையாளர் அலுவலகத்திற்காக, ஆகக் குறைந்தது 4000 சதுர அடி கொண்ட சகல வசதிகளையும் உள்ளடக்கிய பொதுமக்கள் இலகுவாகத் தொடர்பு கொள்ளக் கூடிய யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்த வீடு அல்லது கட்டடம் உடனடியாக வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ தேவைப்படுகின்றது.

## கௌரி றேட் சென்ரர்

டும். ஆஷா எலக்றோ பிளேற் றர்ஸ் அன்ட் மெற்றல் இன் டஸ்றீஸ் 148, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(B 304)

யாழ்ப்பாணம்.

(B/305)

சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

(B/295)

| | | |
|---|---|---|
| BOT<br>செல்வநேசன் | 10-30 a. m.<br>3-45 p. m. | மீட்டல் வினாவிடை<br>தாவர இராட்சியப் பிரிவு<br>(திங்கள் / புதன் / வெள்ளி)<br>பிறப்புரிமையியல்<br>(செவ்வாய். வியாழன்) |
| PURE / APP.<br>விஜயகுமார் | 3-00 p. m.<br>3-45 p. m. | தொகையீடு<br>உராய்வு |

**90 A/L, 91 A/L** சனி, ஞாயிறு வகுப்புக்கள்
**09 A/L** வினாவிடை வகுப்புகள் நடைபெறுகின்றன.

(B- 306)

போராளிகள் செவ்வாயன்று இரவு மறைந்திருந்து, ஒரு காரில் மேற்கொண்ட தாக்குதலில் பொலிஸ் மெய்ப்பாதுகாவலர் உட்பட ஐந்து பேர் இறந்துள்ளார்கள்.

கௌவுத்திக்கு 250 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கோபூலில் காங்கிரஸ் கட்சித் தலைவரான கோஸ்வாமி என்பவரைப் போராளிகள் சுட்டுக் கொன்றனர்.

**ஸ்ரீதர் (யாழ்)**
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா

## அவள் ஒரு தொடர்கதை

## மணமகள் தேவை

யாழ். குருகுல கத்தோலிக்க பெற்றோர் லண்டனில் நீண்ட காலமாக வசிக்கும் மாதம் 70,000 ரூபா வேதனம் பெறும் 5' 4'' உயரமும் கவர்ச்சியும் உள்ள மகனுக்கு மணமகள் தேடுகின்றனர். ஓரளவு சீதனம் எதிர்பார்க்கப்படுகின்றது. நல்லொழுக்கம், ஆங்கில அறிவு, அழகு விரும்பப்படுகிறது. விரும்புவோர் சகல விபரங்களையும் அனுப்பி வைக்கவும். C/O ஈழநாதம், 31, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

(B 132)

## சிற்ப ஓவிய கண்காட்சி

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவில் சிற்ப ஓவியக் கண்காட்சி யொன்று இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாம் கடந்த ஒடிய மாதங்களை எமது கண்ணோட்டத்தில் எடுத்துப் பார்த்தால் நிம்மதியற்ற வாழ்வு நிரந்தரமற்ற வீடுகள், நியாய தீர்வுக்கு மாறான சர்வதிகாரம். ஆனால் இன்று மக்களுக்காக இரவு பகலாய் அன்பு உபசரிப்புடனும், அன்புள்ளத்துடனும் எமது வீரவேங்கைகள் மக்கள் மத்தியில் ஒன்று சேர்ந்து வருவது மிகவும் வரவேற்கத்தக்கது வாழ்க இவர்கள் பணி. வெல்க தமிழீழம்!

# சுப்பையா அன் கோ

மின்சார லைய வீதி, யாழ்ப்பாணம்.

உள்நாட்டு, வெளிநாட்டு
மதுபான விற்பனையாளர்கள்
மொத்த விற்பனையாளரும்,
சில்லறை விற்பனையாளரும்

-(263)

## உடனடித் தேவை

இலங்கை மின்சார சபையின் வடமாகாண பிரதி பொது முகாமையாளர் அலுவலகத்திற்காக, ஆகக் குறைந்தது 4000 சதுர அடி கொண்ட சகல வசதிகளையும் உள்ளடக்கிய பொதுமக்கள் இலகுவாகத் தொடர்பு கொள்ளக் கூடிய யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்த வீடு அல்லது கட்டடம் உடனடியாக வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ தேவைப்படுகின்றது.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :
பிரதிமுகாமையாளர்
இலங்கை மின்சாரசபை
இல. 52, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
1990 - 03 - 15

(B/299)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

**வின்சர் - யாழ்**
10.30 2.30 6.30
மோகன் - சுகாஷினி

## நெஞ்சத்தைக் கிள்ளாதே

# கௌரி றேட் சென்ரர்

பாதணிகள், அழகுசாதனப் பொருட்கள் வியாபாரிகள்.

5, ஆஸ்பத்திரி வீதி,
நவீன சந்தை.
யாழ்ப்பாணம்

(B 303)

# வலி-கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி

எம்மிடம் மலிவான விலையிலும், தரமான முறையிலும் நுகர்ச்சிப் பொருட்கள், கட்டிடப் பொருட்கள், புடவை வகைகள் விவசாய உற்பத்திக்கு தேவையான கிருமி நாசினிகள், உர வகைகள் என்பவற்றை பெற்றுக்கொள்ளலாம்.

வாடகைக் கதிரைகளை தேவையான நேரம் பெறவும், குறைந்த கட்டணத்தில் பதிவுசெய்து ஒழுங்கு செய்யலாம்.

எமது லொறிகளை கொழும்பு சேவைக்கும், உள்ளூர் சேவைக்கும் உட்படுத்த பதிவுசெய்து ஒழுங்கு செய்யலாம்.

எனவே இச் சேவைகளுக்கு எம்மை நாடுங்கள், கூடவே ஆலோசியுங்கள். — பொது முகாமையாளர். (B. 293)

ஈழநாதத்தின் சேவை வாழ்க! வளர்க!
**தமிழ் ஈழத்தின் தரமான பிஸ்கற் உற்பத்தியாளர்கள்**

# லீலா பேக் ஹவுஸ்

**மாக்கற் சதுக்கம், சங்கானை.**

கிளை:
சிரணி, சண்டிலிப்பாய்.

**தரமான உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு தாரீர்!**

(B - 278)

# ஒரு இனத்தின் தனித்துவத்தைக் காட்டுவது அதன் கலாசாரமே

ஒரு இனத்தின் தனித்துவத்தை. அந்த இனத்தின் தேசியத் தன்மையை எடுத்துக் காட்டுவது அந்த இனத்தின் தனித்துவமான கலாசாரமே. தனித்துவமான கலாசாரம் எனும்போது இதற்கு உயிர் நாடியாக இருப்பவைகள் கலை வடிவங்கள்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நாம் சொல்கிறோம் தமிழர் ஒரு தேசிய இனம் என்று. அந்த தேசிய இனத்தின் ஆன்மாவாக இருப்பது கலாசாரம்தான். எனவே இன்றைய காலகட்டத்தில் கலாசாரத்தின் தூண்களாக நித்தம் கலைவடிவங்களை அழிந்துபோக விட்டோமானால் எமது இனத்தின் தேசியத் தன்மையும் குன்றிப் போவதுடன் அவ்வினமும் சீரழிந்து விட வாய்ப்புகளுண்டு.

கூடுதலாக மேற்கத்தைய நிழ்வுகளையே ஆனால் எங்கள் மண்பற்றி இந்த மண்ணின் வரலாறு பற்றி இந்த மண்ணின் கலாசாரம் பற்றி எந்தக் கல்விக் கூடத்திலும் கற்பிக்கப் படுவதில்லை இதுவும் கலாச்சார சீரழிவையே ஏற்படுத்துகிறது.

> **10-3-90 அன்று கிளிநொச்சி மாவட்ட கலை கலாசார அவையினரின் கவின்கலைக் கல்லூரி திறப்புவிழாவின் போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா (மாத்தயா) அவர்கள் ஆற்றிய உரை.**

எமது இயக்கத்தின் நோக் யாக செய்யவேண்டும். கங்களில் ஒன்று தமிழ் கலா கலையில் மிகுந்த ஆர்வம் சாரத்தை வளர்ப்பதும், உள்ளவர்கள் கூட பயிற்சி

அடித்தளமாக இக்கலைக் கூடத்தை பயன்படுத்தி அழிந்து கொண்டிருக்கும் கலைவடிவங்களுக்கு புது மலர்ச்சியை கொடுக்கிறோம். இதற்கு கலைஞர்கள் கலையார்வம் கொண்டவர்கள் பொதுமக்கள் அனைவருமே தங்கள் பங்களிப்பை முழுமை

சாரம் மறுமலர்ச்சி பெற்றிட வேண்டும் அப்போதுதான் நாம் ஒரு தனித்துவமான இனம் எமக்கென்று தனியான கலைகலாச்சாரம் உண்டு என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் தமிழர் ஒரு தேசிய இனம் என்பது பாதுகாக்கப் படும் இதற்கான அத்திவாரமே இன்று ஆரம்பிக்கப்பட்ட கவின் கலைக்கூடம்.

ஒரு இனத்தின் கலாசாரம் எனும் போது அவ் இனத்தால் பாரம்பரியமாக தொடர்ந்து கொண்டு வந்த வழக்க முறைகளும் சேர்ந்து கொள்ளும். இவ்வாறு நோக்கின் கலாசாரம் எனும் போது அந்த நல்ல அம்சங்களும் தீய அம்சங்களும் சேர்ந்திருக்கும். உதாரணமாக கலாசாரத்தோடு சேர்ந்த சில தீய சமூக வழக்கங்கள் இன்றும் உள்ளன. சீதனமுறை, சாதிமுறை பெண் அடிமை முறை, மூடநம்பிக்கைகள் என்பனவாகும். உண்மையிலே இவைகளை எமது கலாசாரம் என்று சொல்லா விட்டாலும் எங்கள் பண்பாட்டோடு சமூக வழக்காக வந்து விட்ட இவைகளை தூக்கி எறிந்து தான் ஆக வேண்டும். அத்தோடு உண்மையான கலாசாரத்தை வளர்க்க வேண்டும் அதற்கான பணியை இக் கலைக்கூடம் செய்தல் வேண்டும். சிறந்த முற்போக்கான கலை வடிவங்கள் மூலமாக கலாச்சாரத்தில் உள்ள தீய அம்சங்களை அகற்றலாம். அதற்கு தகுந்தாற் போல் இக்கலைக் கூடத்தின் பயிற்சிகளும் இங்கு தயாரிக்கும் கலை வடிவங்களும் இருத்தல் வேண்டும் அப்போதுதான் நல்ல அம்சங்களை வெளிக்கொண்டு வரக்கூடிய கலாசாரம் புத்துயிர் பெறும் மறுமலர்ச்சி பெறும்.

நாங்கள் புத்துயிர் கொடுக்க நினைக்கின்ற கலை வடிவங்கள் எதுவென்று பார்க்கின் இன்று உள்ள பல கலைவடிவங்கள் நிலப்பிரபுத்துவம்




கிளிநொச்சி கவின்கலைக் கல்லூரி திறப்பு விழாவின்போது விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் உரையாற்றியபோது எடுக்கப்பட்ட படம்.

தமிழருக்கு என தனித்துவமான கலை கலாசாரம் உண்டு. என்பதை நீங்கள் அறிவீர்கள். முதலில் தமிழ் சமூகம் பாரம்பரியமாகப் பேணிவரும் கலைவடிவங்களை அல்லது அம்சங்களை நோக்குவோமாயின் இசை, நடனம், நாடகம், ஓவியம், இலக்கியம் என்பன முக்கியமானவைகள். ஆனால் இன்று இந்தக் கலை வடிவங்கள் அழிந்து போகும் நிலையில் உள்ளது என்பதைக் காண்கின்றோம்.

ஒரு இனத்தின், ஒரு சமூகத்தின், ஒரு தனிமனிதனின் வாழ்வை மேம்படுத்துவதற்கும் மனித [illegible] களை

அதற்கு புத்துயிர் அளிப்பது மாகும். இந்தக் கலைக்கூடம் இதற்கு ஒரு ஆரம்பமாக அமைகிறது. இதற்கு கலாசார மறுமலர்ச்சியை தோற்றுவித்தல் என்று கூறலாம். ஏனெனில் நீண்டகால அடிமை வாழ்வு நீண்டகாலயுத்தம் மற்றும் அன்னியப் படைகளின்

இன்மையால் அல்லது பயிலக் கூடிய வசதிமிக்க கலைக் கூடங்கள் இல்லாமையினால் தங்களின் பங்களிப்பை இந்த சமூகத்துக்கு ஆற்ற முடியாமல் இருந்திருப்பீர்கள். அவர்களுக்கு இந்தக் கலைக்கூடம் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று நம்புகிறேன்.



மட்டக்களப்பு மாவட்டத்தில்

## நிவாரணம் பெறுபவர் பெயர் விபரங்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களில் புனர்வாழ்வு நிவாரணக் கொடுப்பனவுகள் பெற தகுதியானவர்களின் பெயர் பட்டியல் உதவி அரச அதிபர் அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

மேற்படி கொடுப்பனவு தொடர்பான ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டால் அது தொடர்பான விசாரணை முடியும்வரை ஆட்சேபனைக்குரிய விண்ணப்பதாரியின் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.

இக்கொடுப்பனவு தொடர்பான ஊழல், மோசடிகள் தடுப்பதற்காகவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாக செயலக புனர்வாழ்வுதுறை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ள புனர்வாழ்வு தொடர்பான கொடுப்பனவுகள் அடுத்த மாதம் முதல் வழங்கப்படும் என்று புனர்வாழ்வுத்துறை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதற்கான கொடுப்பனவுகளுக்கான நிதியும் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (37)

## சுதுமலையில் ஹெலி

(சுதுமலை)

நேற்று நண்பகல் அளவில் சுதுமலை அம்மன் கோவிலை அண்மித்த சில பகுதிகளை இலங்கை அரசுக்கு சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று மிகத் தாளப்பறந்து பல தடவைகள் சுற்றி வந்தது அவதானிக்கப் பட்டுள்ளது. (19)

## உழவு இயந்திரத்தில் இருந்து விழுந்து காயம்

(யாழ்ப்பாணம்)

ஓடிக்கொண்டிருந்த உழவு யந்திரத்திலிருந்து விழுந்து ரத்தினம் தயாபரன் (வயது 18) காயங்களுக்குள்ளானார்

கட்டுடையைச் சேர்ந்த இவர் யாழ். வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனார். (தி)

## யாழ்ப்பாணத்தில் மரவள்ளி உற்பத்தி அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கடந்த காலத்தை விட இம் முறை மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி ஐந்நூறுகெக்டேரை கடந்துள்ளதாக வடக்கு கிழக்கு மாகாண விவசாயஅபிவிருத்தி ஆராச்சிகள் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்தகாலங்களில் இந்திய இராணுவம் ஓரடிக்கு மேல் உள்ள பயிர்கள் எதுவும் நடக்கூடாது என குறிப்பாக வலிகாமம் பகுதியில் உத்தரவிட டிருந் து இதனால் மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி பெரிதும் வளர்ச்சி கண்டு [illegible]

## வி. பி. சிங், ராஜீவ் ஒரே விமானத்தில் பயணம்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் வி. பி. சிங்கும். முன்னாள் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவருமான



ராஜீவ் காந்தியும் ஒரே விமானத்தில் வெளிநாடு பயணமாகவுள்ளனர்.

இம்மாதம் 20 ஆம் திகதி நமீபியாவின் சுதந்திர தினம் நடை பெறவுள்ளதால் இவர்களுக்கு அழைப்பு விடுக்கப் பட்டுளளது.



இதனையடுத்து 19 ஆம் திகதி இருவரும் ஒரே விமானத்தில் செல்கின்றனர். பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் ஒரே விமானத்தில் வெளிநாடு செல்வது இதுவே முதல் தடவையாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில்

## தனியார் பஸ் சேவைகள் புதிய முறையில் நடைபெறும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தனியார் பஸ் சண்டக்டர்களாக 16 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களை அனுமதிக்ப் போவதில்லையென மாவட்ட தனியார் பஸ் சங்கம் தீர்மானித் ள்ளது.

மேற்படி சங்கத்தின் அ[illegible]

★ பயணிகளை மேலதிகமாக ஏற்றிச் செல்வதில்லை.

★ பயணிகள் பஸ்ஸில் நிறையும் வரை காத்திருக்ாமல் குறிப்பிட்ட நேரத்தில் புறப்பட்டு, குறிப்பிட்ட நேரம் சென்றடை ல்.

★ வீதி பாவனைக்கு உதவாத வாகனங்கள் சேவை[illegible]

நமீபியாவின் சுதந்திர தினம் நடை பெறவுள்ளதால் இவர் நாடு செல்வது இதுவே முதல் தடவையாகும்.

கிளிநொச்சி கவின்கலைக் கல்லூரி திறப்பு விழாவின்போது விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் உரையாற்றியபோது எடுக்கப்பட்ட படம்.

தமிழருக்கு என தனித்துவமான கலை கலாசாரம் உண்டு. என்பதை நீங்கள் அறிவீர்கள். முதலில் தமிழ் சமூகம் பாரம்பரியமாகப் பேணிவரும் கலைவடிவங்களை அல்லது அம்சங்களை நோக்குவோமாயின் இசை, நடனம், நாடகம், ஓவியம், இலக்கியம் என்பன முக்கியமானவைகள். ஆனால் இன்று இந்தக் கலை வடிவங்கள் அழிந்து போகும் நிலையில் உள்ளது என்பதைக் காண்கின்றோம்.

ஒரு இனத்தின், ஒரு சமூகத்தின், ஒரு தனிமனிதனின் வாழ்வை மேம்படுத்துவதற்கும் மனித [illegible]ங்களை வளர்ப்பதற்கும், சிந்தனையைத் தூண்டுவதற்கும், ஒரு சமுதாயத்தில் தொன்று தொட்டு பேணப்பட்டுவரும் கலை வடிவங்கள்தான் காரணம் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.


இன்று நீண்டகாலப் போர், நீண்டகால அடிமை வாழ்வு, அன்னியப் படையெடுப்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்புகள், உல்லாசப் பயணிகள் வருகை போன்றவற்றாலும் இன்னும் பல்வேறு வழிகளிலும் கலாசார சீரழிவு ஏற்பட்டுள்ளது. இன்னமும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இவ்வாறே கல்வி முறையிலும் இந்த மண்ணின் கலாசாரக் கல்வி என்பது எந்தப் பாடசாலைகளிலும் கிடையாது. உதாரணமாக ஒன்றை நோக்கின் எமது மாணவர்களுக்கு வரலாறு என்று கற்பிக்கப்படுவது

அதற்கு புத்துயிர் அளிப்பதுமாகும். இந்தக் கலைக்கூடம் இதற்கு ஒரு ஆரம்பமாக அமைகிறது. இதற்கு கலாசார மறுமலர்ச்சியை தோற்றுவித்தல் என்று கூறலாம். ஏனெனில் நீண்டகால அடிமை வாழ்வு நீண்டகாலயுத்தம் மற்றும் அன்னியப் படைகளின்

இன்மையால் அல்லது பயிலக் கூடிய வசதிமிக்க கலைக் கூடங்கள் இல்லாமையினால் தங்களின் பங்களிப்பை இந்த சமூகத்துக்கு ஆற்ற முடியாமல் இருந்திருப்பீர்கள். அவர்களுக்கு இந்தக் கலைக்கூடம் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று நம்புகிறேன்.

அதற்கு தகுந்தாற் போல் இக்கலைக் கூடத்தின் பயிற்சிகளும் இங்கு தயாரிக்கும் கலை வடிவங்களும் இருத்தல் வேண்டும்அப்போதுதான்நல்ல அம்சங்களை வெளிக்கொண்டு வரக்கூடிய கலாசாரம் புத்துயிர் பெறும் மறுமலர்ச்சி பெறும்.

நாங்கள் புத்துயிர் கொடுக்க நினைக்கின்ற கலைவடிவங்கள் எதுவென்று பாற்கின் இன்று உள்ள பல கலைவடிவங்கள் நிலப்பிரபுத்துவம்



மேற்படி கல்லூரி திறப்பு விழாவின்போது விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி பொதுச்செயலாளர் யோகி உரையாற்றிய போது எடுக்கப்பட்ட படம்.

ஊடுருவல்களுக்கு மத்தியில் கலைகளை வளர்பதற்கான எமது கலாச்சாரத்தை பாதுகாப்பதற்கான அமைதிநிலை இருக்கவில்லை. இப்போதும் எமது அடிமை வாழ்வு நீங்கிவிடவோ அல்லது அமைதியோ ஏற்பட்டு விடவில்லை. எனவே இன்றைய நிலையில் ஒரு

இந்த கலைச்கூடத்தை பராமரிப்பதும் இதை வளர்த்து எடுப்பதும் மக்கள் ஆகிய உங்கள் கரங்களிலே உளளது.

நாம் இன்று செய்ய வேண்டியது எமது சமுகத்தின் கலை வடிவங்களுக்கு மீண்டும் புத்துயிர் அளித்திடல் ஆகும். இதன் வாயிலாக எமது கலா

பெண் அடிமைத்தனம், சீதன முறை, சாதிமுறை, போன்றவற்றின் சின்னங்களாகவே திகழ்கின்றன. இவ்வாறில்லாமல் மூட நம்பிக்கைகள் அற்றதும் கலாசாரத்துக்கு புத்துயிர் அளிக்கக்கூடியதும் மனித வாழ்க்கையை முன்றேற்றக் கூடியதும் மனிதனின் சிந்தனைத் திறனை வளர்க்க கூடியதுமான கலை வடிவங்கள் வாயிலாகவே மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வைவிடுதலை உணர்வை ஏற்படுத்தலாம். புரட்சிகரமான கருத்துக்கள் போன்றவற்றை மக்களுக்குள் உருவாக்கலாம் இக் கலைக் கூடத்தின் கலையம்சங்கள் பொழுதுபோக்கிற்காக மட்டும் மக்கள் முன் காட்சி தராமல் மக்கள் மனதில் நல்ல கருத்துக்களை புரியக் கூடியவகையில் விதைத்து விடக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

என்றைக்கும் கலை என்பது மக்களுக்காக என்றே இருத்தல் வேண்டும். கலை வியாபாரத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதாக இருத்தல்கூடாது. கலைகலைக்காக என்னும் வாதம் இன்றும் சிலரால் முன்வைக்கப் படுகின்றது. இங்கேதான்நிலப்பிரபுத்துவமும், மூடநம்பிக்கைகளும் நிறைந்து காணப்படும். இதுதான் இதுகாலவரை நாம்

கண்ட வரலாறும் அதனால் கலை மக்களுக்காக எனும் வாதமே இன்று முற்போககாளர் மத்தியில் உரத்து ஒலிக்கிறது. இந்தமூடநம்பிக்கைகளும், பிற்போக்குத் தனங்களும் அற்று மனித வளர்ச்சியே முக்கியத்துவம் பெறுகிறது. நாமும் இந்தக் கவின்கலைக் கூடத்தை கலை மக்களுக்காக என்னும் சித்தாந்தத்திலேயே இயக்க வேண்டும்.

இறுதியாக உங்களிடம் சொல்லிக் கொள்வது என்னவென்றால் இந்தக் கவின் கலைக்கூடம் உங்களுக்காக உங்களில் பலரினதும் முயற்சியால் இன்று தொடக்கப்பட்டுள்ளது. இதை மேலும் வளர்ச்சிபெற உங்களால் ஆன அனைத்தையும் செய்தல் வேண்டும். அனைத்துக் கலைஞர்களும் உங்கள் பணியால் தான் எமது கலாசாரம் பேணப்படும், என்ற உறுதியுடனும் ஒவ்வொரு மனிதனையும் வளர்ச்சிபெற வைக்க வேண்டும், என்ற வைராக்கியத்துடனும் செயல்பட வேண்டும் என்று கூறி விடை பெறுகிறேன்.



இதே கல்லூரி திறப்பு விழாவின் போது கவிஞர் காசி ஆனந்தன் உரையாற்றும்போது எடுக்கப்பட்ட படம்.

## யாழ்ப்பாணத்தில் மரவள்ளி உற்பத்தி அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கடந்த காலத்தை விட இம் முறை மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி ஐந்நூறுகெக்டேரை கடந்துள்ளதாக வடக்கு கிழக்கு மாகாண விவசாயஅபிவிருத்தி ஆராச்சிகள் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்தகாலங்களில் இந்திய இராணுவம் ஓரடிக்கு மேல் உள்ள பயிர்கள் எதுவும் நடக்கூடாது என குறிப்பாக வலிகாமம் பகுதியில் உத்தரவிட்டிருந்து இதனால் மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி பெரிதும் வளர்ச்சி கண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்

(லோ)

## நினைவு தூபி

(விசேட நிருபர்)

1987இல் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு எதிராக நடைபெற்ற போரில் களப்பலியான தமிழீழ விடுதலைப் புலிகள் இரண்டாவது லெப்டினன்ட் தீஸ் விசயானந்தன் பெரியதம்பி (ஜீவா) நினைவுத்தூபி ஒன்று இன்று திறந்துவைக்கப்படவுள்ளது.

யாழ். பிரதான வீதி 6ஆம் குறுக்கு வீதிச் சந்தியில் டாக்டர் பிலிப்ஸ் வாட்டுக்கு அண்மையில் அமைக்கப்பட்டிருக்கும் தூபியை அவரது தந்தையார் பெரியதம்பி திறந்து வைப்பார். (21)

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

## தனியார் பஸ் சேவைகள் புதிய முறையில் நடைபெறும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தனியார் பஸ் கண்டக்டர்களாக 16 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களை அனுமதிக்கப் போவதில்லையென மாவட்ட தனியார் பஸ் சங்கம் தீர்மானித்துள்ளது.

மேற்படி சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு;

★ பயணிகளை மேலதிகமாக ஏற்றிச் செல்வதில்லை.

★ பயணிகள் பஸ்ஸில் நிறையும் வரை காத்திருக்காமல் குறிப்பிட்ட நேரத்தில் புறப்பட்டு, குறிப்பிட்ட நேரம் சென்றடைதல்.

★ வீதி பாவனைக்கு உதவாத வாகனங்கள் சேவையில் ஈடுபடுவதை நிறுத்துதல்.

★ பயணிகளைப் பாதிக்காத வகையில் சேவையில் ஈடுபடல் (37)


எமது

நேற்றைய புதிய வெளியீடுகள்!

விடியோ ரசிகர்களின் வேண்டுகோளுக் கிணங்க விசேடமாகத் தருவிக்கப்பட்ட ஒறிஜினல் பிரதிகள்

விஜயகாந்த்

சோபனா

S. S. சந்திரன்

வழங்கும்

புலன் விசாரணை

பிரபு

ரம்யா

செந்தில்

நல்லகாலம் பொறந்தாச்சு

ஜெமினி

சாவித்திரி

தங்கவேலு

ஸ்ரீகிருஷ்ண பலராமன் கதை

குணம்

வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

B/312

ஈழநாதம்

### இந்திய செஞ்சிலுவைச் சங்கம்

# உலக செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுமதி இன்றியே இலங்கைவந்தது

(கிளிநொச்சி)

இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு இந்திய செஞ்சிலுவைச் சங்கம் தலைமைச் சங்கத்தின் அனுமதியைப் பெறாமல் வந்துள்ளது என உலக செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதியான திரு கொக்காவா கூறினார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற செஞ்சிலுவைச்சங்க கூட்டத்தில் அவர் உரையாற்றினார். இக்கூட்டத்திற்கு கிளிநொச்சி செஞ்சிலுவைச்சங்கத் தலைவர் வண. எஸ். ஜெயநேசன் தலைமை வகித்தார்.

கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கத்தை இதுவரை காலமும் இருந்ததுபோல யாழ்ப்பாணத்தின் கீழ் இயங்காது தனியாக இயங்க அனுமதி கோரப்பட்டது.

கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரிக்கு கதிர் இயக்க இயந்திரம் தேவைஎன்றும் இரணைதீவு போன்ற பின்தங்கிய பகுதிக்கு ஒரு அம்புலன்ஸ் படகு தேவை என்றும், இரத்த வங்கி நிறுவப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டது.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக கொழும்பிலுள்ள செஞ்சிலுவைச் சங்க தலைமைப்பீடத்துடன் தொடர்பு கொண்டு ஆவண செய்வதாக திரு. கொக்காவா கூறினார்.

கிளிநொச்சி செஞ்சிலுவை சங்கம் முறையாக இயங்கி திறமையான சேவையைச் செய்தால், இங்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவது கடினமல்ல.

செஞ்சிலுவைச் சங்கம் குறுகிய ஒரு வட்டத்திற்குள் நின்று செயல்படக்கூடாது. இதில் பல பகுதிகளையும், பல இன மொழியைச் சேர்ந்தவர்களும் குறிப்பாகப் பெண்களையும் சேர்த்து செயல்பட வேண்டும்

யப்பான் நாட்டில் மட்டும் 70 மில்லியன் மக்கள் செஞ்சிலுவைச் சங்கத்தில் அங்கத்தவர்களாக இருக்கிறார்கள். 149 நாடுகளில் எமது சங்கம் இருக்கிறது. 250 மில்லியன் மக்கள் இதில் அங்கத்தவர்களாக இருக்கிறார்கள். 125 வருடங்கள் பழமை வாய்ந்தது இச்சங்கம் அங்கத்தவர்கள் வழங்கும் சந்தாப் பணத்தைக் கொண்டும், நன்கொடைகளைக் கொண்டுமே உலகில் வாழுகின்ற பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாரிய உதவிகளைச் செய்து வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (4)


## அன்னை பூபதி நினைவு நாள் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு

(மாட்டக்களப்பு)

மட்டக்களப்பு- அம் பாறை மாவட்ட அன்னையர் முன்னணியின் உறுப்பினராகஇருந்து முப்பத்திரண்டு நாட்கள் உண்ணா நோன்பு இருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் நினவு நாள் வெகு விமர்சயாகக் கொண்டாட விரிவாக ஏற்பாடுகள்செய்யப்பட்டு வருகின்றது.

அன்னை பூபதியின் நினைவு விழா வடகிழக்கில்உள்ளஎட்டு மாவட்டங்களிலும்எதிர் வரும் 19ஆம் திகதி முதல் பல நிகழ்ச்சிகளாக நடைபெறவுள்ளதாக அன்னை பூபதியின்நினைவுப் பணிமன்றத்தினர் தெரிவித்தனர்.

அடையாளஉண்ணாவிரதங்கள், பேச்சுக்கள், சிரமதானங்கள், விசேட பூசைகள் என்பன நடைபெறவுள்ளன. நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் பங்கேற்று சிறப்பாக நடைபெற ஒத்துழைக்க வேண்டுமென்றுநினைவுப் பணி மன்றத்தினர் வேண்டுகோள் விடுக்கின்றனர்.




## யாழ் - மட்டுநகர் இரவு பஸ்சேவை ஆரம்பமாகிறது

(மட்டக்களப்பு)

யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு இரவு பஸ்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும்என மட்டக்ளப்பு பிரயாணிகள் சங்கம் வடக்கு-கிழக்குப் பிராந்தியப் போக்குவரத்துச் சபையைக் கேட்டுள்ளது.

தற்பொழுது தினசரி மட்டக்களப்பிலிருந்து விசேட பஸ்சேவை ஒன்றும் சாதாரண பஸ் சேவை ஒன்றும் நடத்தப்படுகின்ற போதிலும் இடநெருக்கடி காரணமாக தினமும் பல பிரயாணிகள் தமது பிரயாணத்தை தொடர முடியாது பல கஸ்டங்களை எதிர் நோக்குகின்றனர்.

இரவு பஸ்சேவையும் ஆரம்பிக்கப்படுமாயின் பிரயாணிகளின் நெருக்கடியை தவிர்த்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது. (39)

### மீண்டும் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டத்துடன் அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் அரசாங்க பாடசாலை ஒன்றில் அல்லது கல்விப் பீடத்தில் மூன்று வருடங்களுக்கு குறையாத பூரண அனுபவம் உடையவர்கள் இதற்கு தோற்ற வேண்டும்.

ஆசிரிய சேவையில் சேர்ந்த பின்னர் பட்டம் பெற்றவர்கள் ஐந்து வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

### நினைவாஞ்சலி . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அல்வாய கிழக்கு தில்லையம்பல் பிள்ளையார் ஆலய முன்றலில் நடை பெறவுள்ள இவ்வைபவத்திற்கு திசி ஜீ. தரிசன்ம் தலமைவகிப்பார்.

### பாலசிங்கம் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பினார்கள். விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி விஸ்வமடுவிலுள்ள தலைமை அலுவலகத்துக்கு திரும்பியுள்ளார்.

### திருமலையில்.. ,.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களும் இம் மகா நாட்டில் கலந்துகொண்டனர்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பாதுகாப்புப் பிரச்சினைகள் பற்றியும் தமிழ் மக்களிற்கு ஏற்பட்டுவரும் அச்சங்கள் சந்தேகங்கள் பற்றியும் விடுதலைப் புலி பிரதிநிதிகள் எடுத்து விளக்கினார். சிங்கள ஆயுதப் படைகளுக்கும் விடுதலைப் புலி வீரர்களுக்கும் மத்தியில் மோதலேற்படுவதைத் தவிர்த்து சமாதான சூழ்நிலையை உருவாக்குவது பற்றியும் விடுதலைப் புலிகள் சில யோசனைகளைத் தெரிவித்தார்கள். இந்த யோசனைகள் சம்பந்தமாக இரு தரப்பினருக்கும் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் வேண்டுகோளின் பேரில் அமைச்சர் ஹமீதும் ஏனைய அதிகாரிகளும் திருகோணமலை நகரைச் சுற்றிப் பார்வையிட்டனர்.

## "எல்லோரும் ஆங்கில ஆசிரியராக முடியாது"

(கொழும்பு)

எல்லாரையும் ஆங்கில ஆசிரியர்களாக அபிவிருத்தி செய்ய முடியாது - இவ்வாறு தேசிய மொழிகள், சமூகக் கல்வி நிறுவனப் பொருப்பாளர் நிகால் ஜி கூறே தெரிவித்தார்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரணம்) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி பெறுபவர்கள் ஆங்கில ஆசிரியர்களாக இன்று நியமனம் பெறுகிறார்கள். இப்படியான கல்வித் தகமை மாத்திரம் உடையவர்கள் சிலரை ஆங்கில ஆசிரியர்களாக வளர்த்தெடுக்க முடியாது. இவ்வாறு நேற்று முன்தினம் பாடவிதான வடிவமைப்பு, அபிவிருத்தி நிலையத்தில் நடந்த செயல் அமர்வொன்றில் பேசும் போது நிகால் கூறே கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

ஆங்கிலத்தில் தேசிய தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது ஜீ சி.ஈ. (உயர் தரம்) இரண்டு பாடங்களில் சித்தியடைந்தவர்களை நியமித்துப் பயிற்சி வழங்கி நல்ல ஆங்கில ஆசிரியர்களாக வளர்த்தெடுக்கலாம். மாணவர்கள் கற்கை தொடர்பான அளவீடும் மதிப்பீடும் குறைவாகவே நடைபெறுகின்றன. ஆகவே, ஆங்கில ஆசிரியர்கள் வினாத்தாழ்களைத் தயாரித்தும் பரீட்சைகள் நடத்தி மாணவர்களைத் தயார் படுத்த வேண்டும்.

கல்வி அதிகாரிகள் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று ஆசிரியர்களோடு சேர்ந்தகற்பித்தல் தொழிலில் ஈடுபட வேண்டும் என்றும், இன்று எவராலும் கவனிக்கப்படாத நிலையில் ஆங்கிலத்தில் பெறுபேறுகள் குறைவாகவே உள்ளன என்றார்.



### நான் கண்டு கேட் . . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

துயரமும் நிறைந்தவையாகும்.

அமைதிப்படை என்ற பெயரால் இங்கு வந்த இந்தியப் படை, அழிவுப் படையாக மாறி, தமிழீழத்தில் ஏராளமான நாசத்தை விளைவித்து விட்டது. ஏராளமான குடும்பங்கள் சீர்குலைக்கப் பட்டுவிட்டன. வீடுகளும். தோட்டங்களும் அழிக்கப்பட்டுள்ளன. பல்லாயிரக்கணக்

### அடுத்த சார்க் . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, கொழும்புக்கு விஜயத்தை மேற் கொண்ட மாலைதீவு வெளியுறவு அமைச்சர் யமீல் இருபத்தைந்தாவது தேசிய தினமான நவம்பர் மாதத்தில் தேசிய தினத்துடன் சார்க் மகா நாட்டை அங்கு நடாத்த விருப்பம் தெரிவித்ததினால், ஏப்பிரல் 1990 இல் கொழும்பில் நடக்க இருக்கும் சார்க் மகா நாட்டைக் கைவிடும்படி இலங்கை அரசைக் கேட்டுள்ளார்.

மாலைதீவு எமது நட்புறவு நாடு அவர்கள் கோரிக்கையை ஏற்மால் கட்டிக் கலிக்க மு

### 24ஆந் திகதி . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறை, பலாலி ஆகிய பகுதிகளில் இந்திய இராணுவத்தின் சில பிரிவுகள் தங்கியிருப்பதாகவும், இன்னும் சில தினங்களில் அவர்களும் நாடு திரும்புவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய இராணுவ அதிகாரிகள் ஆறுபேருக்கு கொழும்பில் இலங்கை இராணுவத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா அளித்த பிரியாவிடையின்போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

என்று ஜெனரல் ஏ. ஸ்.

கலந்துகொண்டனர்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பாதுகாப்புப் பிரச்சினைகள் பற்றியும் தமிழ் மக்களிற்கு ஏற்பட்டுவரும் அச்சங்கள் சந்தேகங்கள் பற்றியும் விடுதலைப் புலி பிரதிநிதிகள் எடுத்து விளக்கினார். சிங்கள ஆயுதப் படைகளுக்கும் விடுதலைப் புலி வீரர்களுக்கும் மத்தியில் மோதலேற்படுவதைத் தவிர்த்து சமாதான சூழ்நிலையை உருவாக்குவது பற்றியும் விடுதலைப் புலிகள் சில யோசனைகளைத் தெரிவித்தார்கள். இந்த யோசனைகள் சம்பந்தமாக இரு தரப்பினருக்கும் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் வேண்டுகோளின் பேரில் அமைச்சர் ஹமீதும் ஏனைய அதிகாரிகளும் திருகோணமலை நகரைச் சுற்றிப் பார்வையிட்டனர்.

## விடுதலைப்..... .

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

''தாங்கள் எங்களுக்கு விடுத்த வேண்டுகோளையடுத்து கடந்த 5 ஆண்டுகளாக பொதுமக்கள் வீடுகளில் வசித்த இராணுவத்தை வெளியேற்றியுள்ளோம்.

நீண்டகாலமாக பொதுமக்கள் பாவனைக்கு தடை விதிக்கப்பட்ட வல்வை-தொண்டமானாறு வீதி மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது. பொதுமக்கள் இவ்வீதியை எந்நேரமும் உபயோகிக்கலாம்'' என்றார்.

இராணுவத்தினர் தங்கியிருந்து சேதமாக்கப்பட்ட வீடுகளுக்கு ஏனையோருக்கு வழங்குவதைவிட விசேட நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென வல்வைப் பிரஜைகள் குழுவினர் வேண்டியபோது; அரசாங்கம் புனர்வாழ்வு, புனர் நிர்மாண வேலைகளுக்கு பெருந்தொகையான பணத்தை உலக நாடுகளின் உதவியுடன் வழங்கியுள்ளது. இதனை உங்களது உதவி அரசாங்க அதிபர், அரசாங்க அதிபர் ஆகியோரே முழுப்பொறுப்பு எனவும் அவர்களிடமே மேற்படி புனர்நிர்மாணப் பணத்தைப் பெற முடியுமெனவும் மேற்படி இராணுவ அதிகாரி பதிலளித்தார்.

பிரஜைகள் குழுவினர் ஊரிக்காடு சிதம்பராக் கல்லூரியின் மைதானம் முழுமையாக எமக்குத் தரப்பட்டு இங்குள்ள இராணுவத்தினர் வெளியேற வேண்டுமென வேண்டியபோது இது தொடர்பாக நாம் ஆவன செய்வதாகவும் அந்த இராணுவ அதிகாரி உறுதியளித்துள்ளார். (18)

# முடியாது"

(கொழும்பு)

எல்லாரையும் ஆங்கில ஆசிரியர்களாக அபிவிருத்தி செய்ய முடியாது - இவ்வாறு தேசிய மொழிகள், சமூகக் கல்வி நிறுவனப் பொருப்பாளர் நிகால் ஜி கூறே தெரிவித்தார்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரணம்) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி பெறுபவர்கள் ஆங்கில ஆசிரியர்களாக இன்று நியமனம் பெறுகிறார்கள். இப்படியான கல்வித் தகமை மாத்திரம் உடையவர்கள் சிலரை ஆங்கில ஆசிரியர்களாக வளர்த்தெடுக்க முடியாது. இவ்வாறு நேற்று முன்தினம் பாடவிதான வடிவமைப்பு, அபிவிருத்தி நிலையத்தில் நடந்த செயல் அமர்வொன்றில் பேசும் போது நிகால் கூறே கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

ஆங்கிலத்தில் தேசிய தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது ஜீ சி.ஈ. (உயர்தரம்) இரண்டு பாடங்களில் சித்தியடைந்தவர்களை நியமித்துப் பயிற்சி வழங்கி நல்ல ஆங்கில ஆசிரியர்களாக வளர்த்தெடுக்கலாம். மாணவர்கள் பற்கை தொடர்பான அளவீடு மதிப்பீடும் குறைவாகவே நடைபெறுகின்றன. ஆகவே ஆங்கில ஆசிரியர்கள் வினாத்தாழ்களைத் தயாரித்தும் பரீட்சைகள் நடத்தி மாணவர்களைத் தயார் படுத்த வேண்டும்.

கல்வி அதிகாரிகள் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று ஆசிரியர்களோடு சேர்ந்தகற்பித்தல் தொழிலில் ஈடுபட வேண்டும் என்றும், இன்று எவராலும் கவனிக்கப்படாத நிலையில் ஆங்கிலத்தில் பெறுபேறுகள் குறைவாகவே உள்ளன என்றார்.



திரு. நெடுமாறன் தமது இலங்கைச் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு திரும்புவதற்கு முன் தமிழீழத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனையும் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜாவையும் சந்தித்தபோது எடுத்த படம்

## மாகாண சபை . . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

இயங்காத நிலையில் தற்போது இது ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. இதனால் உயரதிகாரிகள் உட்பட ஊழியர்கள் விடுமுறையில் சென்றுள்ளார்கள்.

இந்நிலையில் அலுவல்கள் ஸ்தம்பிதமாகியுள்ளதால் தான் சம்பளம் தாமதமாகலாமென கூறப்படுகிறது.

## மீன்பிடிப் . . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

விரிவுரை மண்டபம், நிர்வாகச்செயலகம், பொறியியல் பிரிவு, விடுதி உட்பட சகல வசதிகளும் இங்கு அமைக்கப்படுகிறது.

இதன் வேலைகள் முடிவுற்றதும் இப்பகுதி இளைஞர்களுக்கு மீன்பிடித்துறையில் பயிற்சி வழங்கப்படும். (37)

## தமிழ்த் தேசிய . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

இதனையடுத்துபொலிஸார் மற்றைய நபரையும் அவர் கொண்டுசென்ற அரிசி மூடைகளையும் லொறியையும் மோதரையில் வைத்துப் பிடித்தனர்.

# தையல் பயிற்சி வகுப்புகள்

(சுதுமலை)

கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தினரால் தையல் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது சுமார் எழுபத்தைந்து மகளிர் வரை இப்பயிற்சியை மேற்கொண்டு வருகிறார்கள். இரண்டு பயிற்சி ஆசிரியைகள் மூலம் நடைபெற்று வரும் பயிற்சி வகுப்புகளுக்கு பலர் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர்.

## விவசாயிகளுக்கு . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ் வைபவம் நடைபெற்றது. தொடர்ந்து பேசிய அரசாங்க அதிபர் ஒருவர் உயர்ந்த பதவியை வகித்து வந்தாலும் விவசாயியை நம்பியே எவரும் இருக்கவேண்டி உள்ளது. அத்தகைய விவசாயிகளின் இரு கண்களான விவசாயத் திணைக்களத்துக்கும், கமநல சேவை நிலையங்களுக்கும் என்னாலான சேவைகளைச் செய்வேன் என்றார்.

கமநலச்சேவை திணைக்கள உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் தமது உரையில் உதவி வழங்கும் நாடுகளான யப்பான், ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஆகியவை 60 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதி வாய்ந்த உழவுயந்திரங்களையும், உதிரிப்பாகங்களையும் எமக்கு வழங்கியுள்ளன.

இவற்றை அதிகாரிகள் அவதானமாகப் பாவித்து இதில் இருந்துவரும் வருமானத்தைக் கொண்டுநல் முறையில் இந்த நிலையங்களை நடாத்தி விவசாயிகளுக்கு சேவை செய்ய முன்வரவேண்டும் என்றார்.

கமநலச்சேவை நிலையங்கள் விவசாயிகளின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்த முன்வரவேண்டும். அத்துடன் உரம், கிருமி நாசினி மண்வெட்டி போன்றவற்றையும் பெற்று வழங்க வேண்டும் என்றார்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பினார்கள். விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி விஸ்வமடுவிலுள்ள தலைமை அலுவலகத்துக்கு திரும்பியுள்ளார்.

## நான் கண்டு கேட் . . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

துயரமும் நிறைந்தவையாகும்.

அமைதிப்படை என்ற பெயரால் இங்கு வந்த இந்தியப் படை, அழிவுப் படையாக மாறி, தமிழீழத்தில் ஏராளமான நாசத்தை விளைவித்து விட்டது. ஏராளமான குடும்பங்கள் சீர்குலைக்கப் பட்டுவிட்டன. வீடுகளும். தோட்டங்களும் அழிக்கப்பட்டுள்ளன. பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்திருக்கிறார்கள்.

இஇந்த அட்டூழியங்களில் விருந்து மக்களைக் காக்க வீடுதலைப் புலிகள் நடத்திய எரஞ்செறிந்த போராட்டம் தனை மெய்சிலிர்க்க வைத்து. இந்திய வல்லரசின் படைகளை எதிர்த்து விடுதலைப் புலிகளும், மக்களும் இணைந்து நடத்திய போராட்டம் உலக வரலாற்றில் தனியொரு இடத்தினைப் பெற்றுவிட்டது. விடுதலைப் புலிகளுக்குத் துணையாக மக்கள் புரிந்த தியாகத்திற்குத் தலைவணங்குகின்றேன்.

கடந்த 2 ஆண்டு காலப் போராட்டத்தின் விளைவாக தமிழீழ மக்களின் தன்னிகரற்றத் தேசியத் தலைவராக பிரபாகரன் திகழுகிறார். தமிழீழ மக்களின் ஒரே காவலனாக விடுதலைப் புலிகள் இயக்கம் திகழுகிறது. மக்களும் மாறாத மனவுறுதி கொண்டவர்களாகத் திகழுகிறார்கள். எதிர்காலத்தில் வெற்றி உறுதி என்பது கல்லின் மேல் எழுத்தாக விளங்குகிறது.

தமிழீழத்தில் நான் அறிந்த செய்திகளை இந்திய மக்களுக்குக், குறிப்பாகத் தமிழக மக்களுக்குத் தெரிவிப்பேன். அவர்களின் ஆதரவைத் திரட்டுவேன்.

தலைவர் பிரபாகரன் தலைமையில் தமிழீழ மக்கள் நடத்தும் போராட்டத்திற்கு உலகத் தமிழினம் என்றும் துணை நிற்கும் என உறுதி கூறி விடை பெறுகிறேன்.

அல்லாய் கிழக்கு இல்லையம் பல் பிள்ளையார் ஆலய முன்றலில் நடை பெறவுள்ள இவ்வைபவத்திற்கு திசி ஜீ. தரிசனம் தலைமைவகிப்பார்.

## அடுத்த சார்க் . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, கொழும்புக்கு விஜயத்தை மேற்கொண்ட மாலைதீவு வெளியுறவு அமைச்சர் யமீல் இருபத்தைந்தாவது தேசிய தினமான நவம்பர் மாதத்தில் தேசிய தினத்துடன் சார்க் மகாநாட்டை அங்கு நடாத்த விருப்பம் தெரிவித்ததினால், ஏப்பிரல் 1990 இல் கொழும்பில் நடக்க இருக்கும் சார்க் மகாநாட்டைக் கைவிடும்படி இலங்கை அரசைக் கேட்டுள்ளார்.

மாலைதீவு எமது நட்புறவு நாடு அவர்கள் கோரிக்கையை எம்மால் தட்டிக் களிக்க முடியாது. ஆவே இவ் வருடம் ஏப்பிரலில் நடக்க இருக்கும் சார்க் உச்சி மகாநாட்டை நாம் கை விடுகிறோம். இவ்வாறு உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ளின் நெருக்கடியை தவிர்த்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது. (39)

## 24ஆந் திகதி . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)


காங்கேசன்துறை, பலாலி ஆகிய பகுதிகளில் இந்திய இராணுவத்தின் சில பிரிவுகள் தங்கியிருப்பதாகவும், இன்னும் சில தினங்களில் அவர்களும் நாடு திரும்புவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய இராணுவ அதிகாரிகள் ஆறுபேருக்கு கொழும்பில் இலங்கை இராணுவத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா அளித்த பிரியாவிடையின்போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

என்று ஜெனரல் ஏ. ஸ். கல்கட் தெரிவித்துள்ளார்.

முன்னர் அறிவிக்கப்பட்டது போல இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக ஒரு வாரம் முன்னரே படையினர் வெளியேறி விடுவார்கள் எனவும் அவர் கூறினார்.

# காலமானார்



## திருமதி இராஜேஸ்வரி வியாகேசர்

(ஆசிரியை)

நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை (நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி) திருமதி இராஜேஸ்வரி வியாகேசர் 90. 3. 17 அன்று காலமானார்.

இவர் க.வை.வியாகேசர் (இளைப்பாறிய உப அதிபர் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி பங்கஜவல்லி குணநாதன், நாகரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும் இ. குணநாதன் (ஆசிரியர் கொ/முகத்துவாரம் தமிழ் வித்தியாலயம்), திருமதி இரஞ்சிதமலர் நாகரத்தினம் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி வடக்கு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் முதலான ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

க. வை. வியாகேசர்
(கணவர்)

நீர்வேலி மத்தி
நீர்வேலி.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது




வாழ்வு குறுகியது. எமக்கு முன்னால் எமது மண்ணுக்கும் மக்களுக்கும் ஆற்றவேண்டிய கடமைகள் வளர்ந்துகொண்டே போகின்றன. அவைகளே எம்மை ஆக்கிரமிக்கின்றன, சிறையிடுகின்றன.. எனினும் இது ஒரு சந்தோஷகரமான சிறைவாழ்வு... இதிலிருந்து வரலாறு மட்டுமே எம்மை விடுதலை செய்யமுடியும்.

- பிடெல் காஸ்ட்ரோ





# உலகாள வைப்போம்!

எதிர்காலத் தமிழீழம் இவர் கையில் சிரிக்கும்

இதை நாங்கள் பயிராக்கத் தியாகத்தைக் குவிப்போம்

கதிர் வீச்சு போல் பாயும் ஞானத்தைத் தரிப்போம்

இடர் நீக்கித் தமிழீழம் உலகாள வைப்போம்.

— கண்ணுதல்

☐

☐ 'மனம்' மனிதனை வழிநடத்தும் மூல இயந்திரம்.

☐ அதனை நெறிப்படுத்துவது என்பது ஒரு மகத்தான கலை.

☐ மனிதனை நெறிப்படுத்தும் 'மன'த்தை நெறிப்படுத்துவதும் மனிதனே என்பதுதான் இதில் ஆச்சரியமான விஷயம்.

☐ நல்ல நூல்கள் நல்ல சிந்தனை, நல்ல நண்பர்கள், நல்ல சூழல் இப்படிப் பல விடயங்களுடன் மன நெறிப்படுத்தல் சம்பந்தப்பட்டுள்ளது.

☐ மேல் நாடுகளில் 'Mental Dicipline' ஒருபாடமாகவே இளைய தினருக்கு பயிற்றுவிக்கப்படுகிறது. இதன்மூலம் ஆரோக்கியமான ஓர் சமூக அமைப்பினை ஏற்படுத்தலாமென்பது உளவியல் நிபுணர்களின் கருத்து.

☐

# மனநெறி

மனம் என்றால் என்ன? ஞானிகளும் இந்த ''மனசை'' ரொம்பவும் சிலாகித்துச் சொல்லி இருக்கிறார்கள். மனம், வாக்கு, காயம் என வரும் வரிசையிலும் முதலிடத்திலே இருநிற்கின்றது. மனம் என்றால் உள்ளம். அப்படியானால் நினைவுக்கு இருப்பிடமானதுதானே. இந்த மனசு தான் மனிதனின் மகோன்னதமான எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணியாகிறது. இந்த மனசைக் கட்டிப்போடுகிற கெட்டித் தனத்தைத்தான் மன நெறி (Mental Dicipline) என்கின்றோம்.

திருவள்ளுவர் அடக்கம் உடைமையை அதிகார வைப்பு முறைமையை விளக்கும் பரிமேலழகர் இந்த நெறியைத்தான் ''மெய்மொழி, மனங்கள் தீநெறிக் கண் செல்லாது அடங்குதல் உடையன் ஆதல்'' எனக் குறிப்பிடுகின்றார் எனக் கருதக் கிடக்கின்றது. அஃதாவது இங்கு ஒவ்வொருவனும் உடலாலும், உரையாலும், உள்ளத்தாலும் நெறிப்பட வேண்டும் என்கின்றார். உடலாலே நற்செயலையும் — செம்மையையும். உரையாலே வாய்மையையும் — சத்தியத்தையும், உள்ளத்தலே வாக்குறுதியையும் — உண்மையையும் ஒழுக்காறாகக் கொள்ளுதல் இதனையே நன்னெறி எனத் தொகுத்துரைத்தனர் போலும் ஆன்றோர்.

இந்த மனம் தான் ஏனையவற்றை நெறிப்படுத்தலில் முதன்மை வகிக்கிறது. மனமே பொய்யையோ, மெய்யையோ பேசத்தூண்டுகின்றது. மனமே நல்ல செயலையோ கெட்ட செயலையோ செய்ய வைக்கிறது. ஆகவே ஏனையவற்றுக்குத் தலைமை தாங்கும் பக்குவந்தை மனம் பெற்றிருப்பதனை விளங்கிக் கொள்ளலாம். மனத்தை வசப்படுத்துகின்ற ஆற்றலை நாம் பெற்றுவிட்டோமானால் அரிய பெரிய காரியங்கள் பலவற்றைச் செய்து விட முடியும்.

''மனம்எனும் தோணி பற்றி மதியெனும் கோலை ஊன்றி சினம் எனும் சரக்கையேற்றி'' என வரும் தேவாரப் பாடல் மனத்தோணியை எத்துணைச்சிறப்புடையதென்பதனை விளக்குகின்றது.

மனிதமனம் பால் போன்றது. பால் அதிக சத்துக்கள் நிறைந்திருந்தாலும் பழுதடைந்துவிட்டால் அதனைப் போன்ற நஞ்சுவேறில்லை அதேபோல் மனத்தால் வாழ்வை மேம்படுத்துகின்றவன் மனிதன். இந்த மனிதமனம் கெட்டால் இந்த உலகம் முழுவதுமே கெட்டுப்போகும். இதனால் இரண்டு பெரும் நட்டம். ஒன்று உலகம் கெட்டுப் போகிறது; மற்றையது நாமும் கெட்டழிந்து போய் விடுகின்றோம்.

## நந்தா

மனித மனத்திலிருந்து தான் எல்லாமே ஆக்கப்படுகின்றன. கேடுகள் கூட அப்படித்தான். இவை பூமியிலிருந்து முளைத்தோ ஆகாயத்திலிருந்து பழுத்தோ விழுவதில்லை. பேராசை, சுயநலம், பொறாமை முதலியனவே கேடுகளை வளர்த்தெடுக்கின்றன.

மனிதன் புனிதமான மனத்தோடு நற்குணசீலனாக வாழ்ந்தால் சலகமோ, கலக்கமோ இருக்க மாட்டா. அதற்கு இந்த மனத்தைக் கட்டிப் போட வேண்டும். மனத்தைக்கட்ட நல்ல நூல்களும், நல்லார் இணக்கமும், தியானமும் நல்ல பலமான கயிறுகளாக அமைகின்றன.

மனநெறிப்பட்டு வாழுகின்ற வாழ்க்கை தான் பூரண ஆனந்தத்தையும் கூடுதலான திருப்தியையும், பரம சௌக்கியத்தையும் முன்னேற்றத்தையும் தரும்.

நெறிப்பட்ட மனம் நில்லென்றால் நிற்கும். எக்கருமத்தையும் முறையாக நிறைவேற்றும் எல்லார்க்கும் இயன்ற செயல் இது. ☐

## 27 - 01 - 1990 அன்று இரவு விடுதலைப் புலிகள் நகரில் நுழைந்தனர் அதன்பின்னரே,....

# நாமிருக்கும் நாடு நமது என்பதை அறிந்தோம்

**இன்றைய யாழ்ப்பாணத்து தமிழ் மக்களது மனஉணர்வுகளை யாழ் நகரை வலம் வந்த எமது சிறப்புச் செய்தியாளர் சித்தரித்துக் காட்டுகின்றார்.**

**இ. பத்மநாதன் யாழ் வைத்தியசாலை நிர்வாக அதிகாரி**

நாங்கள் இலங்கை இராணுவம் கோட்டைக்குள் இருந்த சமயம் சரியாக கஷ்டப்பட்டோம். தினமும் ஷெல் அடிப்பாங்கள். நோயாளிகளை கவனிக்கமுடியாத நிலைமை இருந்தது. பலரை ஷெல் தாக்குதல்களில் பலிகொடுத்தோம்.

பின்பு இந்தியஇராணுவம் நகரைக்கைப்பற்றும்போது எம்மை அழித்தது. நாம் ஓர் இயக்க வீதமான வைத்திய சேவையையே பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. ஆனால் இப்பொழுது ஒவ்வொரு வைத்தியர்களாக திரும்பி வருகின்றனர். இதனால் தற்போது எழுபது தொடக்கம் எண்பது சதவீதமான சேவையை நாம் செய்யக்கூடியதாக உள்ளது. அத்துடன் புதிய தொலைத் தொடர்பு கருவிகள் எம்மிடம் உள்ளது. இது எமது உள்ளக தொலைத்தொடர்புக்கு பெரும் உதவி செய்கின்றது. கடந்த காலங்களில் ஒரு அறை

இப்ப எங்களுக்கு உரிய மரியாதைகள் அனைத்தும் கிடைக்கின்றன இவர்கள் விடுதலைப் புலிகள் அன்பாக எங்களுடன் பழகுகின்றனர். அதோட எங்களுக்கு இது வரைக்கும் எவித முறைப்பாடுகளும் வரவில்லை அவர்களுடைய குறை

தெரிந்தது கொள்வதற்கு ஒண்டும் இல்லை வான் ஒண்டை கொண்டுவந்து நிப்பாட்டிப் போட்டு படம் நடந்து கொண்டிருக்க லைற்றைப் போட்டுட்டு பெடியனைப் பிடிப்பாங்கள், படம் ஓடிக்கொண்டிருக்கேக்க வலோற்காரமாய் பேப்ப

டுத்து அவர்களுடைய வாழ்க்கையையே பாதிக்கச் செய்துவிட்டார்கள் எத்தனையோ உயர்தர சாதாரணதர பரீட்சைகள் எடுக்கவேண்டிய மாணவர்கள் இதனால் சீரழிந்துபோனார்கள்.

ஆனால் இன்றயகாலகட்டம் நாம் சுதந்திரமாய் தொழிலாற்ற கூடியநிலைக்கு கொண்டு வந்துள்ளது. பாடசாலைக்கு தாய் தந்தையர் தமது பிள்ளைகளை விடும் போது ஒரு அசம்பாவிதம் நடக்காது என்ற நம்பிக்கையுடன தமது பிள்ளைகளை வழியனுப்பி வைக்கின்றனர்.

நாம் வீட்டில் இருக்கும் போதுகூட ஆறு மணிக்குப் பிறகும் கதவுகளைத் திறந்து போட்டு இருக்கக் கூடியதாய் உள்ளது.

இந்நிலை தொடர்ந்து வளர வேண்டும், எமது மாணவர்களின் எதிர்காலம் சுபீட்சமாய் இருக்க எல்லா வழிகளும் வாய்ப்பாய் அமைய வேண்டும் எனபதே எமது விருப்பம்.

**P. N. சார்ள்ஸ் மின் பொறியிலர்அலுவலர்**

நோமலாக இருக்கேக்க இந்தியன் ஆமி வர்ரதுக்குமுதல் நாங்கள் செல்லுக்குப் பயந்து ஆரியகுளம் சந்தியில இருந்தனாங்கள் செல் பரச்சனையை தவிர மற்றும்படி நோமலாக எங்கட வேலையைப் பார்த்துக்கொண்டுதான் இருந்தம்.

பிறகு ஐ. பி. கே. எப் வந்தாப்பிறகுதான் எமக்கு கரச்சல் தொடங்கியது ஒவ்வொரு அமைப்புகள் ஒவ்வொரு கட்டளை போடும் வேலைகாரர் எல்லாரும் பயந்து வெளிநாட்க்கு போயிட்டாங்கள் இருக்கிற தொழிலாளரையும் ஒரு கட்டுக்கோப்பில வைத்திருக்கமுடியாத நிலை இருந்தது.

அதோட இந்த அலுவலத்துக்கு முன்னால் இருந்த ஈ. பி. ஆர். எல் எவ் காம்பில இருந்து இருபத்திநாலு மணி நேரமும் எங்களுக்கு கரச்சல் கொடுத்துக் கொண்டுதான் இப்பாங்கள்.

ஆனால் இப்ப ஒருத்தரை தலையீடும் இல்லை நாங்களும் மேலதிகாரிகளின்ரை கட்டுப்பாட்டின் கீழ் வேலை செய்யக் கூடியதாக இருக்கு. இப்ப நாங்கள் டஸ் நிலயப் பகுதிகள் எல்லாம் ரியூப் பல்ப் பூட்டியுள்ளோம். அதோட வெளிநாட்டு உதவியளும் அடிக்கடி எங்களுக்குக் கிடைப்பதால இந்த அமைதி நிலை தொடர்ந்து நீடிக்குமானால் நாங்கள் இந்த யாழ்ப்பாண நகரத்தை நவீனமயப்படுத்தி விடுவோம் என்பதற்கு உத்தரவாதம் தருகிறேன்.

12ம் பக்கம் பார்க்க

சார்பானவர்களோ அல்லது ஒரு கட்சி சார்பானவர்களோ அல்ல. அப்படி இருந்தும் அடிக்கடி கடந்த காலத்தில் இங்கே இருந்த இரண்டு இயக்கங்களால் துன்புறுத்தப்பட்டோம். எமது தொழிலாளர்கள் அந்த நேரங்களில் வேலைக்கு சமூகம் தரவில்லை. இருந்தும் அவர்களை கண்டிக்கவோ தட்டிக் கேட்கவோ முடியாது இருந்தது. ஏனென்றால் அவர்கள் வாழும் பகுதி சுற்றிவளைக்கப்பட்டிருக்கும் அல்லது திடீரென பிரச்சினைகள் தோன்றி இருக்கும். எந்நேரமும் வைத்தியசாலைத் தொழிலாளர்கள் ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலையை உணர்ந்ததால் அவர்களை நிர்வகிப்பதில் பெரும் சிரமம் இருந்தது.

அதுமாத்திரம் அல்லாது பார்வையிடும் நேரம் தவிர ஏனைய நேரங்களில் வைத்தியசாலை நடைபாதையில் ஒருவர் உலாவினால் அவரை விசாரிக்க ஊழியர்கள் பயப்பட்டனர். அப்படியான காலகட்டமும் இருந்தது.

ஆனால் இப்பொழுது எமக்கு புதிதாக ஒரு பாதுகாப்பு உணர்வு, நிச்சயத்தன்மை ஏற்பட்டுள்ளது. ஊழியர்கள் அதிகாலை இங்கு வந்து இரவு வீடு போகக் கூடியதாக ஒரு நிலமை உள்ளது. இதனால் எமது நிர்வாகத்தை சரிவர பார்க்கக் கூடியதாக இருக்கிறது. நாட்டுப் பிரச்சினைக்காக கடந்த காலங்களில் வைத்தியர்கள் பலர் வெளிநாடு சென்றமையால் ஐம்பது

யில் என்ன நடைபெறுகிறது என்று அடுத்த அறைக்குத் தெரியாது. தொடர்புசாதனம் இல்லாததால் நாம் மிகக் கஷ்டப்பட்டோம்.

**திரு. S. P. ஜெயராஜன் பொலீஸ்அத்தியட்சகர் கோட்டை**

இந்திய இராணுவம் இருந்த காலகட்டத்தில் நாம் எமது அன்றாட அலுவல்களைப் பார்த்துக்கொள்வதற்கே மிகவும் கடினமாய் இருந்தது. பலவந்தமாக ஈ.பி. ஆர்.எல்.எவ்.காரர்பத்திரிகைகளை நிறுத்தியபோது எல்லா பத்திரிகைகாரங்களும் வந்து என்னிடம் முறையிட்டனர். நானும் உடனே வரதராஜப் பெருமாளோடே தொடர்பு கொண்டேன். பலதடவை எடுத்துச் சொல்லியும் எதுவித நடவடிக்கையும் அவர்கள் எடுக்கவில்லை. அவர்கள் எம்மை எப்பவும் ஒரு ஐமிச்ச பார்வையுடன் தான் பார்ப்பார்கள். அவர்களோட ஒரு கதை கதைக்கேலாது. மரியாதை எண்டது துப்பரவாய் கிடைக்காது. மூக்சம் தெரியாதவர்கள். வெளியால போய்வாற (கோட்டைக்கு) எம்முடைய உத்தியோகஸ்தரிடம் மரியாதைக்குறைவாக நடந்து கொள்வார்கள் அவர்கள் வந்து எம்மிடம் முறையிடுவார்கள்.

அதோட அந்த நேரங்களில் கொலைகள் களவுகள் ஏராளம் நடந்தது ஆனால் மக்கள் வந்து எங்களிடம் முறையிட பயந்து, தமக்கு என்ன நடக்குமோ என்றுபயந்து இங்குவந்து முறைப்பாடு செய்வதும் இல்லை பாடுகளை இவர்கள் தீர்த்து வைக்கிறார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். பொலீஸ் காரங்களுக்கும் எந்த தொல்லையும் இல்லை

இப்படியே அமைதி நிலவி இந்த நாட்டு மக்களின் எதிர்காலத்தில் இனிமேல் எதுவிதபிரச்சினையும் வராது, அவர்கள் சுயமாக சிந்தனை செய்து சுயமாக வாழ்வு நடந்த வேண்டும் இதுவே எமது நினைப்பு.

அத்துடன் இலங்கை ராணுவம் இருந்த காலகட்டம் பற்றி நான் எதுவும் கூறவிரும்பவில்லை.

ரை கொண்டுவந்து விடுவாங்கள். நாங்கள் ஒண்டும் பேசேலாது. பேசினால் எங்களுக்கு என்ன நடக்கும் எண்டு சொல்ல ஏவாது.

இப்படி ஒண்டிரண்டு பிரச்சினை இல்லை, ஏராளம்.

ஆனால் இப்ப நாம் மிகவும் சந்தோசமாய் இருக்கிறோம். என்றும் இல்லாதவகையில் எமது பகல் காட்சிகளுக்கு நல்ல சனம் வருகிறது அதால எங்கடை வருவாயும் பெருகி கொண்டு போகுத இப்படியே நாடு முன்னேறி கொண்டு போக வேணும் அதுக்கேற்ற வகையில அமைதிநிலவ வேண்டும் அப்படியெண்டால்த்தான நாமும் இந்தநாடும் முன்னேறலாம்.

## தேசாந்திரி

**D. துரைராஜா திரைப்படமாளிகை இயக்குனர்**

நாம் கடந்த சிவராத்திரியுடன் எமது இரவுப் படக்காட்சிகளை தொடங்கி உள்ளோம் தொடர்ந்து எமது மாலைக் காட்சிகள் மட்டும் நடந்து வருகிறது நகர்ப்புற மக்கள் மட்டும் வந்து படம் பார்த்துவிட்டு போகிறார்கள் ஆனால் பஸ் எல்லாம் இரவுபத்து மணிவரைக்கும் ஓடுமாகவிருந்தால் நாம் ஆறுமணிக்காட்சியையும் தொடங்குவோம் அத்துடன் சாப்பாட்டுக்கடைகளும் திறந்திருக்குமாய் இருந்தால் நள்ளிரவு காட்சிகளும் தொடர்ந்து நடக்கும்.

ஆனால் இந்திய இராணுவமும் ஈ. பி. ஆர். எல். எப். இம் இருந்த காலத்தில நாம் மிகவும் கஷ்டப்பட்டோம் என்பது நாங்கள் சொல்லி

**ந. ராஜரட்ணம் அதிபர் யாழ். மத்திய கல்லூரி**

எண்பத்தாறாம் எண்பத்தேழாம் ஆண்டுகளில் நாங்கள் ஷெல் அடிக்கும் துவக்குச் சூட்டுக்கும் பயந்து பாடசாலையை ஒழுங்காக நடத்தமுடியாத ஒரு நிலையில் இருந்து உயிரை கையில் வைத்து கொண்டுதான் பிள்ளைகள் பாடசாலையில் படித்தார்கள்.

அதன் பின்பு இந்திய ராணுவமும் அவாகளை சார்ந்த பெடியங்களும் வந்தார்கள் இவர்கள் வலோற்காரமாய் மாணவர்களைக் கல்லூரிக்குத் தெரியாமலே பிடித்து இராணுவப்பயிற்சி கொ

## சிறுகதை

கிட்டத்தட்ட இரண்டு வருடங்களுக்குப் பின்பு இப்போதுதான் விசுவமடு கிராமத்து மண்ணில் தனது கால் பாதங்களை பதியவைக்கிறான் வாசுதேவன். காலை நேரத்து பனிக் குளிரில் விறைத்துப் போய் சில்லிட்டு நிற்கும் புற்களின் மீது, அவனது பாதங்கள் பட்டதும் ஊடுருவிச் செல்லும் குளிர் அவனது உடலை சிலிர்த்துக் கொள்ள வைக்கிறது.

இததான் இரண்டு வருடங்களுக்கு முன்பு இருந்த விசுவமடுச் சந்தி என்பதை ஏற்றுக் கொள்ள வாசுதேவனின் மனம் மறுத்துக்கொள்கிறது. காலத்தின் கோலங்கள் கடுகளவும் பிசகவில்லை. கண்ணெதிரே தோன்றும்... விரக்தி படர்ந்து வெறுமையாகிப் போய்விட்ட மனித இதயங்களையும், அழிவுகளே வருங்காலச்சந்ததிக்கு நினைவு வழிகாட்டியாக.... அங்கொன்றும் இங்கொன்றுமாக தோன்றும் எரிந்துபோன . சிதைந்து போன .. கடைகளும், வீடுகளும் காட்சிக்கு ஒரு பொருளாகி கண் மூடிக் கிடக்கின்றன. கூடவே அன்னிய இராணுவத்தின் இராணுவ முகாம்கள்.

இரண்டு வருடத்துக்குள் எவ்வளவோ மாற்றங்கள். மாற்றங்கள் மண்ணில் மட்டுமா ? அந்தக்கிராமத்து மக்கள் மனதிலும் மாறுதல்கள் தோன்றி விட்டன. கையிலே தொங்குகிற பிரயாணப் பொதியின் சுமையைவிட மனதை அழுத்துகின்ற சுமை தான் எவ்வளவோ தாக்கமாக இருக்கிறது அவனுக்கு.

நினைவுகள் கல்லெறியப்பட்ட நீர் அலைகள் போல் ஆடத்தொடங்குகின்றன. விசுவமடுச்சந்தியில் சுப்பையாவின் பால்கடை அதிகாலையிலே களைகட்டத் தொடங்கி விடும் என்றால், அதைத்தொடர்ந்து பரமசிவத்தின் தேனீர்க்கடை, பொன்னுத்துரையின் பலசரக்குக்கடை, சலூன், மரக்கறிக்கடைகள், இறைச்சிக்கடை, மீன் வியாபாரிகள், பஸ் பயணிகளின் வரவை எதிர்பார்த்து கச்சான், கொய்யாப் பழம் முதலியவற்றை விற்பதற்குக் காத்திருக்கும் சிறுவர் கூட்டங்கள்... என படிப்படியாகச் சன நடமாட்டம் அதிகரித்துக் கொள்ளும் வேளை, விசுவமடுவாழ் கிராம விவசாயிகள் கிளிநொச்சிச் சந்தைக்கு தங்கள் தானியப்பொருட்களை விற்பனைக்குக் கொண்டு செல்வதற்காக வாகனங்களின் வரவை எதிர்பார்த்து நிற்பார்கள்.

யாழ்ப்பாணச் சூழலில் பிறந்து வளர்ந்த வாசுதேவன் படித்து விட்டு அரசாங்கத்தில் வேலை கிடைக்கும் என நம்பியிருக்கவில்லை. அவன் இந்த விசுவமடு கிராமத்துக்கு வந்து ஒருவரிடம் ஒரு ஏக்கர் நிலம் குத்தகைக்கு வாங்கி நிலக்கடலையை பயிரிட்டான் தன்னை நம்பி வந்தவர்களை அந்தக் கிராமமண் மோசம் செய்ததில்லை வாசுதேவனே எதிர்பாராத அளவுக்கு நிலக்கடலை அமோக விளைச்சலைக் கொடுத்ததைக் கண்டதும், அவனுக்கு வாழ் கையில் புதியதொரு நம்பிக்கை தோன்ற ஆரம்பித்தது.

அவனோடு கூடப்பிறந்த சகோதரிகள் மூவர் நல்லதெ இடங்களில் வாழ்க்கைப் பட்டார்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது, சிறிய கல் வீடு நவீன முறையில் திருத்தியமைக்கப்பட்டதுமல்லாமல், எந்த மண்ணில் அவன் நன்கு பாடுபட்டானோ அந்த மண்ணே அவனுக்குப் பின்பு சொந்தமாகி விட்டது.

வாசுதேவன் பெரும்பாலும் தனது தோட்டத்திலேயே பொழுதை கழிப்பதுண்டு. உழைப்பின் பயனை அந்த மண் அவனுக்கு உணர்த்திய நாளிலிருந்து அவன் சும்மா இருப்பதில்லை. அந்த மண்ணோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டான்.

ஒரு நாள் 'தந்தைக்கு சுகயீனம் ' என ஊரில் இருந்து தந்தி வந்ததும் அவன் அவசரமாக யாழ்ப்பாணம் புறப்பட்டான். ஊரிலே அவன் தங்கி நின்ற போது, ஒரு மாதம் கூட அதிகமாகச் செல்லவில்லை. நாடு அமைதியை இழக்கத் தொடங்கியது.

ஒரு நாளா...? இரண்டு நாளா ..?

ஒருவாறு இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன. உயிருக்குப் பயந்த நிலையில் வாசுதேவனின் பெற்றோர் அவனை விசுவமடுவுக்கு அனுப்பி வைக்க விரும்பவில்லை. அவனது பெற்றோரின் நோக்கம் வேறு விதமாக இருந்தது. விசுவமடுவில் உள்ள தோட்டக்காணியினை விற்றுவிட்டு, யாழ்ப்பாணத்திலே பலசரக்குக் கடை ஒன்றினை வைத்து நடத்துவதென, அவர்கள் தங்கள் அபிப்பிராயத்தை மகனிடம் கூறிய போது வாசுதேவன் எரிமலையானான்.

''என்ன தம்பி திடீர் என வந்திருக்கிறியள்...?

நினைவலைகள் அறுபட்டுக் கொள்ள திடுக்கிட்டுத் திரும்பிய வாசுதேவன் நரைத்துப் போன பரட்டைத்தலையுடன் வெற்றிலைக்காவி படிந்த பற்களுமாய்சிரித்துக் கொண்டு நின்ற தாமோதரத்தைக் கண்டான்.

''என்ன பெரியவர் சுகமாக இருக்கிறியளா...?''

''ம்... ஏதோ இருக்கிறம்...'' என்றவாறே ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டு அவனுடன் நடக்க ஆரம்பித்தார் தாமோதரம். இருவரும் பிரதான வீதியில் சில யார் தூரம் சென்றபின் குறுக்கே செல்லும் ஒரு கிறவல் ஒழுங்கையில் தங்கள் நடையைத் திருப்பினார்கள்.

''தம்பி... வாழ்க்கையிலை நாங்கள் சந்தித்த மனிசர்களை இப்ப நேருக்குநேர் காணுற போதுதான் ஆர்...எவன் உயிரோடை இருக்கிறான்... எண்டு தெரிய வருகுது. இவ்வளவுகாலமும் உம்மை இங்கு காணாததாலை, யாழ்ப்பாணத்திலை நடந்த பிரச்சினையில் நீங்களும் செத்துப் போய் விட்டீர்களாக்கும் எண்டுதான் நினைச்சன்...?'' என்று கூறிவிட்டு தாமோதரம் சிரித்த போது அவரோடு சேர்ந்து வாசுதேவனும் சிரித்தான்.

''தம்பி இஞ்சாலை பிரச்சினை குறைந்தமாதிரி இல்லை. இப்ப ஏன் வந்தனியள்...? பொடியள் தரவளி இஞ்சை திரியுறது ரொம்ப ஆபத்தாகக் கிடக்கு...''

'பிரச்சினைகள் எண்டு எத்தனை காலத்திற்கு தான் நாம் ஒதுங்கிபோக முடியும். இரண்டில் ஒன்று பார்க்க வேணும் என்டால்...' என்று கூறிய வாசுதேவனை அர்த்தத்தோடு நிமிர்ந்து நோக்கினார் தாமோதரம்.

இளம் இரத்தம் நல்லாத்தான் துடிக்குது...' என மனதுக்குள் நினைத்துக் கொண்ட தாமோதரம் வாசுதேவனிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு வேறு ஒரு ஒற்றையடிப்பாதையூடாக நடக்கத் தொடங்கினார்.

சுடுகாட்டு அமைதியை விட மோசமானதொரு மௌன அடக்கம் அந்தச் சூழலில் குடிகொண்டிருப்பதை அவதானித்தவாறே தனது தோட்டத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தான் வாசுதேவன் திடீரென பாதையின் முன்னால் உள்ள பாரிய கிடங்கொன்று அவனது சிந்தனையைத் தட்டியது. துவிச்சக்கர வண்டியில் புழுதி பறக்க ஓடிதிரிந்தபாதையில், இப்படியொருபடுகுழி ஏற்பட என்ன காரணம்...? என அவன் சுற்றும் முற்றும் பார்த்த போது ஒரு வாகனத்தின உதிரிப்பாகங்கள் சின்னாபின்னமாக்கி அங்கொன்றும் இங்கொன்றுமாக சிதறிக்கிடப்பதைக் கண்டான்.

அதற்குப் பக்கத்தில் உள்ள சிவசம்புவின் நாலு ஏக்கர் வாழைத் தோட்டத்தில் வாழைகள் யாவும் அரைகுறை நிலையில் வெட்டப்பட்டு சின்னா பின்னப் படுத்தப்பட்டிருந்தன.

'எப்படித்தான் எங்கள் இனத்தை வெட்டியழித்தாலும், நாங்கள்எப்போதும் முளைவிட்டே வளர்வோம்...? என்னுமாப் போல் வெட்டப்பட்ட இடத்தில் இருந்து வாழைக்குருத்துக்கள் முளைவிட்டெழுந்து, இந்த உலகத்தைப் பார்த்தவாறே மென்காற்றின் இசைவிற்கு தலையாட்டிக் கொண்டிருந்தன.

வாசுதேவனுக்கு என்ன நடந்ததென்பது ஓரளவு விளங்கிவிட்டது. பாரிய கிடங்கும், பக்கத்தில் கிடந்த வாகன உதிரிப்பாகத் துண்டுகளுக்கும் பதில் நடவடிக்கையே, சிவசம்புவின் வாழைத் தோட்டம் அழிந்ததற்கு காரணம் எனப் புரிந்து கொண்டான்.

வாசுதேவனுக்கு வயிறெல்லாம் பற்றி எரிந்தது. இந்த மண்ணில் முளைவிட்டெழுந்த வாழை மரங்களுக்கே இந்த நிலைமை என்றால், இந்த மண்ணின் பெருமையை நம்பி வாழ்ந்த மக்களின் உயிரும் உடைமைகளும் என்ன பாடுபட்டிருக்கும்.

அவனால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. அவனது இதயத்தில் வன்ம வெறி குடியேற மௌனமாக சூழ்நிலைகளை சுற்று முற்றும் அவதானித்தவாறே நடந்துகொண்டிருந்தான் தூரத்தே அவன் வழக்கமாக... வாடிக்கையாக..சாமான்கள் வாங்கவரும் 'கமலனிஸ்டோர்' சதா எந்த நேரமும் சனம் நிரம்பிவழியும் அந்தக் கடை இப்போது இருந்த இடம் தெரியவில்லை. மாறாக இடிந்து விழுந்த சுவர்களும் எரிந்து போன கூரைத்தடிகளும் தான் அங்கு எஞ்சியிருந்தன. சுற்றிவர நாயுண்ணிப்பற்றை நன்றாக வளர்ந்து முயல்களுக்கு குடில்களாக நின்று கொண்டிருந்தது.

அந்தக்கடையினையே சில நிமிடம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் வாசுதேவன். ஆனால் அந்தக் கடையினை வைத்து நடத்திய விசுவலிங்கம் அன்னிய இராணுவத்தால் கடையோடு எரிந்து சாம்பலாகி, மண்ணோடு இரண்டறக் கலந்து விட்டான் என்பது வாசுதேவனுக்கு தெரிந்திருக்கநியாயமில்லை.

உழைப்பே உயிரின் மூலதனம்... என்ற கொள்கையோடு வாழ்ந்த அந்த மண்ணின் வாழ்மக்களின் வசந்தகால சுகங்கள் இனிமேலும் வாழ்க்கையில் திரும்பக்கிடைக்குமா...? என்பது சந்தேகமே.

அந்தக் கிராமத்தில் அவனோடுபழகியவர்கள் பாதிப்பேர் இப்போது உயிரோடில்லை. பாதங்களை பதித்து நடந்த இடமெல்லாம். தொட்டாச்சுருங்கி செடிகள் தொடர் விட்டுப்படர்ந்

11 ஆம் பக்கம் பார்க்க

ஆர். அலெக்ஸ் பரந்தாமன்



# புகழ்பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் எமிலி ஸோலா பற்றிய கட்டுரை

பலமுள்ள அரசாங்கத்துக்கும் ஒரு தனி மனிதனுக்கும் போராட்டம்.

''ராணுவத்தின் கெளரவம் பெரிதா? அல்லது நாட்டின் நீதி பெரிதா? என்பதில் அறிஞர்களுக்குள் போராட்டம்.

கத்தியின் முனைக்கும் பேனாவின் முனைக்கும் போராட்டம்.

வஞ்சகனுக்கும் நிரபராதிக்கும் போராட்டம்.

தலைவனின் உத்தரவுக்கும் மனச்சாட்சிக்கும் போராட்டம்.

சுதந்திரத்திற்கும் அடக்குமுறைக்கும் போராட்டம்.

இப் போராட்டங்கள் ஒரு தனி மனிதனின் வாழ்க்கையிலே சில சம்பவங்களாக உருக்கொள்கின்றன.

சத்தியத்தில் நம்பிக்கையுடைய ஒரு மனிதர், நாட்டின் பெருமையையும், நீதியையும் நிலைநாட்டுவதற்காகத் தம் வாழ்க்கையை அர்ப்பணம் செய்கிறார்.

இவர் யார்?

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பிரெஞ்சு நாட்டிலே தோன்றிய எமிலி ஸோலா என்னும் சிறந்த எழுதத்தாளர் - பல நூல்களை எழுதிய உன்னதமான நாட்டுப் பற்றுள்ள ஆசிரியர்.

இவருடைய வாழ்க்கையைச் சிறந்த சினிமாப் படமாக, மகாத்மா காந்தி திரைப்படம் போல, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு தயாரித்து வெளியிட்டார்கள்.

கீழ்த்தரமான துப்பறியும் கதைகளில் கவனம் செலுத்தி வந்த மக்கள், அறிஞர்கள் எழுதிய புதிய புத்தகங்களில், சிறப்பாக உன்னதமான மனிதர்களின் வாழ்க்கைச் சரித்திரங்களில் கவனம் செலுத்துவதற்கு அப்போது உலகில் ஒரு புரட்சியே நடைபெற்றது.

இந்தப் புரட்சி, புத்தக உலகில் மட்டுமல்ல, சினிமா உலகிலும் ஏற்படப் பாடுபட்டார்கள்.

அதன் விளைவாக ஒப்பற்ற ஒரு தனிமனிதரின வாழ்க்கைச் சரித்திரம், சினிமாவாகச் சிறந்த முறையில் படம் ஆக்சப்பட்டு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு திரை உலகுக்கு வந்தது. அது மக்கள் மத்தியில் மகத்தான வரவேற்பையும் பெற்றது.

மக்களுக்குளப்போதுமே அறிவுத்தாகம்தான் அதைப் பத்திரிகை உலகமும், சினிமா உலகமும் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை. உலகில் மகான்களின் வாக்குகளும், அவர்களின் வரலாறுகளும் தான் நின்று புதிய தலைமுறைக்கும் இன்றும் வழிகாட்டிக் கொண்டு இருக்கின்றன.

அந்தக் காலத்தில் அதாவது 1937 ஆம் ஆண்டு நியூயார்க் நகரிலுள்ள மிகப் பெரிய தியேட்டர் ஒன்றில் 'எமிலி ஸோலா' படம் ஓடிக் கொண்டு இருந்தது. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அமைதியாக உட்கார்ந்து இந்தப் படத்தைப் பார்க்கின்றனர். தியேட்டரில் நிசப்தம் நிலவுகிறது.

எமிலிஸோலாவின் ஒவ்வொரு வார்த்தையையும் தியேட்டரில் உள்ள மக்கள் ஆர்வத்தோடு கேட்கின்றனர்.

பல சமயங்களில் படம் பார்க்கும் மக்களின் கண்களில் நீர் ததும்புகின்றது.

சில சமயம் துக்கத்தினால் தங்களை மறந்து விம்முகிறார்கள். இப்படி இரண்டு மணிநேரம் எமிலி ஸோலாவின், வாழ்க்கை வரலாற்றுப் படத்தைக் கண்டு வியப்படைந்தனர்.

சாதாரணமாக ஒரு ஆங்கிலப் படம் 60 முதல் 75 நிமிஷம் வரை தான் காட்டப்படும்.

இந்தப் படத்தின் தன்மையைக் கருதி இதனுடைய அளவை அந்த நாளில் இரட்டித்து வெளியிட்டார்கள்.

இந்தப்படம் திரையில் 130 நிமிஷங்கள் ஓடியது.

> ''வாழ்க்கையில் எண்ணற்ற கஷ்டங்களை அனுபவித்தேன். இப்பொழுது போதிய செல்வம் கிடைத்திருக்கிறது. உண்மையை அஞ்சாது கூறுவதில் என் வாழ்க்கையின் பெரும்பகுதியைச் செலவிட்டேன்.

இந்த 130 நிமிஷங்களில் ஒரு வினாடியாவது மக்கள் சோர்வோ; ஆயாசமோ அடையவில்லை. இது கற்பனை அல்ல, உண்மை. இதை அந்த நாளில் வெளிவந்த எமிலிஸோலா படத்தின் விமர்சனத்தைப் பத்திரிகைகளில் படித்தவர்கள் உணர்ந்திருப்பார்கள்.

மீண்டும் மீண்டும் அந்த சத்தியபுருஷரின் வாழ்க்கை வரலாற்றுப் படத்தைப் பார்த்துப் பார்த்து பரவசப்பட்டார்கள்.

வறுமைக்கும் அறிவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டல்லவா? அறிஞர் எமிலிஸோலா வறுமையிலே பிறந்து வறுமையிலே சிறிது காலம் வாழ்ந்தார்.

இவர் 1840 ஆம் ஆண்டு எய்கஸ் என்னும் ஊரில் பிறந்தார்.

தந்தை, இத்தாலியனுக்கும் கிரேக்கப் பெண்ணுக்கும் பிறந்தவர். தாய் பிரஞ்சுக்காரி.

எமிலிஸோலா இளமையிலேயே தம் தந்தையை இழந்தார்.

தாய், கஷ்டப்பட்டு வேலை செய்து மகனை வளர்த்தாள்.

குடும்பத்தில் அரைக்காசு கூடக் கிடையாது. அன்றாட வேலையின் மூலம் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டுதான் வாழ்க்கை நடத்த வேண்டும். வேலை கிடைக்காவிட்டால் நாள் முழுதும் அந்தக் குடும்பம் பட்டினியில் தான் கிடக்க வேண்டும்.

பாரிசுக்குச் சென்றால் பிழைக்க வழியுண்டு என்று நினைத்தான் வாலிபன் எமிலிஸோலா.

பட்டணத்திற்குச் செல்பவர்கள் எல்லாம் பணக்காரர் ஆவதில்லை அல்லவா?

சிறிய குடிசையிலே தன் நண்பன் ஒருவனோடு வசித்தார் எமிலி ஸோலா.

இந்தச் சிறு குடிசைக்கான தம் பங்குக்கு உரிய வாடகையைக் கூட கொடுக்க முடியாமல் எமிலி பட்ட கஷ்டங்கள் பல.

சில மாதங்களுக்குப் பிறகு ஒரு புத்தகக் கம்பனியில் சிறு வேலை கிடைத்தது.

அந்தக் கம்பெனி எமிலி ஸோலாவின் முதலாவது புத்தகத்தை வெளியிட ஒப்புக் கொண்டது. புத்தகம் வெளியாயிற்று. ஆனால் விற்பனை மிகக் குறைவு.

இந்தப் புத்தகம் இராணுவத்தினரின் ஊழல்களை வெளிப்படுத்தியும் தாக்கியும் அமைந்திருந்தது. அதனால் இராணுவ அதிகாரிகள் தங்கள் செல்வாக்கை உபயோகப்படுத்தி எமிலி ஸோலாவுக்கு இன்னல் விளைவித்தனர்,

புத்தகக் கம்பெனியின் முதலாளி ஸோலாவை வேலையினின்று நீக்கிவிட்டார்.

புத்தகம் வெளியிட வழியில்லாததால் பத்திரிகைகளுக்கு எழுத ஆரம்பித்தார் ஸோலா.

அந்தநாளில் பிரான்சு குடியரசாகத்தான் இருந்தது. ஆனாலும் ராணுவத்தினர் அதிகாரம் கட்டுக்கு மீறி இருந்தது. ராணுவம் புரிந்த கொடுமைகளுக்கு அளவேயில்லை.

உண்மையை வெளியிட ஒரு சிறிதும் அஞ்சாத ஸோலா, இராணுவத்தின் தன்மையைக் குறித்துப் பல கட்டுரைகள் எழுதினார்.

இந்தக் கட்டுரைகளில் உண்மையும், உணர்ச்சியும், தேசபக்தியும் சத்தியச் சுடராக ஒளிவிட்டுத் ததும்பின.

நாட்டின் உயிர்நாடியான விவசாயிகளுக்குத் தீங்கிழைத்தவர்களை அவர்கள் இராணுவ அதிகாரிகளாயிருந்தாலும் சரி, பணக்காரர்களாயிருந்தாலும் சரி, சுயநலங்கொண்ட அறிஞர்களாக இருந்தாலும் சரி, சிறிதும் அஞ்சாமலும், சலிக்காமலும் ஸோலாவின் பேனா முனை தாக்கிற்று.

ஸோலாவை உலகறியச் செய்தநூல் 'நானா' என்பது இந்த நூல் இராணுவத்தின் ஊழல்களைப் பச்சையாகக் கூறுவது.

இப்புத்தகத்தின் மூலம் ஸோலாவுக்கு லட்சக்கணக்கான பணம் வந்தது. இந்தப் பணத்தைக் கண்டு ஆரம்பத்தில் எமிலிஸோலா பிரமாதமாக மகிழ்ச்சியடையவில்லை. அதுகாரணமாக சோம்பேறியாகவும் இருக்கவில்லை.

முன்பைவிட உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் பத்திரிகைகளுக்கு எழுதுவதையும் புதியபுத்தகங்கள் வெளியிடுவதையும் எமிலி ஸோலா தொடர்ந்து செய்தார்.

## துப்பாக்கிகளை விட சக்திவாய்ந்தது பேனா....

பகீரதன்

பணம், புகழ் இவையிரண்டும் எமிலிஸோலாவிடம் வந்து குவியத் தொடங்கின. இதனால் எத்தகைய சிறந்த மனிதனும் சிறிதாவது மாறுவது இயற்கையல்லவா?

தம் செல்வத்தைக் கண்டு இப்போது பெருமையடைந்தார். ஸோலா. தம் புகழைக் கண்டு இறுமாப்படைந்தார்.

''வாழ்க்கையில் எண்ணற்ற கஷ்டங்களை அனுபவித்தேன். இப்பொழுது போதிய செல்வம் கிடைத்திருக்கிறது. உண்மையை அஞ்சாது கூறுவதில் என் வாழ்க்கையின் பெரும்பகுதியைச் செலவிட்டேன்.

''சிறிது காலமாவது நான் அமைதியாக - சுகமாக - வாழக்கூடாதா?''

''யார் எப்படியானால் எனக்கென்ன, நான் வேண்டுவது அமைதி - அமைதி. என் வேலை ஒருவாறு முடிந்தது'' என்று சில சமயம் கூறுவார்.

ஸோலா போன்றவர்களின் வேலை ஒருகாலத்திலும் முடியாது.

ஒருவேலை முடிந்தால் மறுவேலை தயாராக இருக்கும்.

அமைதி! இந்த வார்த்தையைக் கேட்க நன்றாகத்தான் இருக்கிறது. ஸோலா போன்ற சுதந்திரமான இலட்சியஎழுத்தாளர்களுக்கு இவ்வுலகில் அமைதி ஏது?

கொடுமை! அதற்கும் ஓர் அளவுண்டு. ஆனால் பிரெஞ்சு ராணுவத்தின் கொடுமைகள் எல்லாம் 'யுத்த தர்மம்', 'நாட்டுச்சேவை', 'தேசபக்தி', 'வீரத்தனம்' என்ற போர்வைகளால் மூடப்பட்டு வந்தன,

அறிவின்றி ஒருவரை ஒருவர் கொல்லுதல், மிருகத்தனம் வாய்ந்த இப்பித்தர்களுக்கு 'வீரர்கள்' என்று பெயர்.

மனித உணர்ச்சிக்கும், இவ் வீரர்கட்கும் வெகு தூரம்.

பிரெஞ்சு இராணுவம் கட்டுப்பாடுடையது. என்றாலும் அவற்றின் ஊழல்கள் பல.

இந்த ஊழல்களைப் பொதுமக்கள் கண்ணிலிருந்து மறைப்பது இராணுவத்தின் கட்டுப்பாடு.

என்ன கட்டுப்பாடு?

உண்மையை வெளியில் சொல்வதில்லை என்ற கட்டுப்பாடு!

பணம், ஒரு பொல்லாத பொருள். 'பணம் வந்தால் பத்தும் பறந்து போய்விடும்.' தேசபக்தியும் கூடச் சில சமயங்களில் பறந்துபோய்விடும்.

வெளி நாட்டிலுள்ள இந்தியர்களில் சிலர் சிறந்த தேச பக்தர்கள். இவர்களில் பலர் வறுமை வந்துள்ள பொழுது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சிறந்த உளவாளிகள் ஆகிவிட்டதை நமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் படித்திருக்கின்றோம் அல்லவா?

இந்நிலை எந்தக் காலத்திலும் எந்த நாட்டிலும் இருந்து வருகிறது

பிரெஞ்சு ராணுவத்தைச் சேர்ந்த ஒரு கேர்ணல் ஜேர்மனிக்கு உளவாளியானான்.

சில பீரங்கிகளை ரகசியமாக ஜேர்மனிக்கு அனுப்புவதாக ஜேர்மன் ஸ்தானிகருக்குக் கடிதம் எழுதினான்.

அந்தக் கடிதம் எவ்விதமாகவோ பிரெஞ்சு ராணுவ அதிகாரிகளிடம் சிக்கி விட்டது.

ராணுவ அதிகாரிகளின் அந்தரங்கக்கூட்டம். இந்தக் கேர்னல், தான் கடிதத்தை எழுதவில்லை என்றும், ராணுவக் குழுவைச் சேர்ந்த பொறுப்புள்ள ஒருவன் தான் இதை எழுதியிருக்க வேண்டுமென்றும் சாதித்தான்.

(அடுத்தவாரம் முடியும்)

## உலைக்களம்

> நேற்றைய சந்ததி நீதிகேட்க மறந்ததால் இன்றைய சந்ததி இரத்தத்தில் தோய்தந்து என்ற கதை நாளைய சந்ததியைச் சென்றடையக்கூடாது என்பதற்காக இன்று நாம் ஆயிரக்கணக்கான இளைஞர்களின் தியாகங்களுக்கு மத்தியில் புரட்சிகரமான ஒரு சமுதாயத்தை உருவாக்கப் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

# சிறுவர்களின் எதிர்காலம்

கல்வியில் சமவுரிமை கேட்டுப் போர்க்கொடி பிடித்தோம். இன்று கல்வியின் தரம் எங்கே? நாமெங்கே? விடுதலைப் போராட்டங்களை அடக்குவதற்கு அடக்குமுறையாளனால் பிரயோகிக்கப்படும் ஆயுதங்களில் ஒன்று போராட்டத்தில் ஈடுபடும் மக்களின் கல்வியைச் சீர்குலைப்பதாகும். கல்வியறிவற்ற, ஒரு சிந்தனைத் தெளிவற்ற சமுதாயத்தினால் தேசவிடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்படும். ஆண்டுகள் பலவாய் மாண்டுபோனவர் மத்தியில் கட்டியெழுப்பப்பட்ட எமது இலட்சியக் கோட்டை இடைநடுவில் இடிந்து போகாது காக்கவேண்டியது நமது கடமையாகும்.

இன்றைய சிறுவர்களே நாளைய சிந்தனையாளர்கள். நாளைய போராட்டத்தை நடத்திச் செல்வதென்று இன்றே கல்விமான்களையும், சிந்தனையாளர்களையும் சேர்த்து வைப்பதில்லைச் சமுதாயம். இன்று இத்தகைய அறிவாளிகளும், அறிவுழைப்பினரும் அடக்குமுறையாளனாலும், இனத்துரோகிகளினாலும் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்படுகின்றார்கள். இன்று அந்நிய ஆக்கிரமிப்பினால் சிதைந்துபோன பிரதேசங்களிலிருந்தும், பறிபோன பகுதிகளிலிருந்தும் புறப்பட்ட மக்கள் உண்ண உணவும்' உடுக்க உடையும், தற்காலிகமாகத் தங்குவதற்கு இடமும் இருந்தாற் போதும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். வறுமையும், துன்பமுமே இவர்களுக்கு வாழ்க்கைத்துணை என்ற கதையாகிவிட்டது இத்தகைய சம்பவங்களினால்பாதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதையே முற்றாக நிறுத்திவிட்டார்கள். இச்சிறுவர்கள் நகர்ப்புறங்கள், ஆலயங்கள் போன்றவற்றில் பிச்சையெடுத்தும், எடுபிடி வேலை செய்தும் தமது வயிற்றுப்பசியைப் போக்கடிக்கும் பரிதாப நிலையை நாம் காணக் கூடியதாக உள்ளது.

அந்நிய ஆக்கிரமிப்புக்கள் ஒருபுறம் இருக்க, எமது சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் சிறார்களின் எதிர்காலத்தைச் சூனியமயமாக்குகின்றன. எம் சமுதாயத்தில் காணப்படும் முதலாளித்துவப் போக்கினால் நாட்டின் செல்வம் ஒருசிலரின் கைகளிலேயே குவிந்துள்ளது. தொழிலாளர் வர்க்கமே தொடர்ச்சியாகச் சுரண்டலுக்குட்பட்டுள்ளது. இந்நிலையில் வசதிபடைத்த ஒருசில தனியாரின் பிள்ளைகள்தான் தொடர்ச்சியாகக் கல்வியைக் கற்று மேற்படிப்பைத் தொடர்ந்து தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதனையும், வறிய குடும்பத்துப் பிள்ளைகள் கல்வி கற்கமுடியாத நிலையில் வசதி படைத்தவர்களின் வீடுகளில் கூலிவேலை செய்தும் வாழ்க்கை நடாத்துவதையும் காணக்கூடியதாகவுள்ளது. இச்சிறுவர்களின் எதிர்காலத்திற்கு எஞ்சியிருக்கப் போவது வறுமையும், விரக்தியுமே என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இத்தகைய அந்நிய நிகழ்வுகளினாலும், சமுதாய அமைப்பினாலும், சின்னாபின்னப்பட்டுப் போன எமது சிறார்களின் எதிர்காலம் பற்றியும் அவர்கள் கல்வியில் எதிர்நோக்கும் பிரச்சினை ஆராய்ந்து செயற்பட வேண்டியது எமது கடமையாகும். நாளைய தேசத்தை நிர்வகிக்கப் போகும் எமது இன்றைய சிறார்கள் சீரிய முறையில் அறிவு, ஒழுக்கம், கட்டுப்பாடு என்பவற்றோடு வளர்க்கப்பட வேண்டும். இந்நிகழ்வுளின் முதற்கட்டமாக சிறுவர்களுக்கான அடிப்படைக் கல்வி தகுந்த முறையில் போதிக்கப்பட வேண்டும். அடிப்படைக் கல்வி எனும்போது பாலர் கல்வியே இங்கு குறிப்பிடப்படுகின்றது. உலகைப்பற்றிய உணர்வும், பல்வேறு பகுதிகளிலுள்ள எல்லாச் சிறுவர்களுடன் பழக ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனோநிலையை வளர்த்துக் கொள்ளவும், புரிந்துணர்வு, ஒருவருக்கொருவர் உதவிசெய்யும் மனப்பாங்கு முதலியவற்றை உருவாக்கிக் கொள்ளவும் இங்குதான் பயிற்றப்படுகின்றது. எனவே குழந்தையின் எதிர்காலத்திற்கு அத்திவாரமாக பாலர் கல்விப் பருவமே கொள்ளப்படுகின்றது.

சமூகசேமை நிறுவனங்களும், தனியாரும் நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் இன்று பாலர் கல்வி நிலையங்களை நிறுவி கல்வி போதித்துவருகின்றார்கள். நகர்ப்புறங்களில் இக் கல்வி நிலையங்கள் ஓரளவு வசதிகளுடனும், எண்ணிக்கையினில் போதுமானதாகக் காணப்பட்டாலும், கிராமப்புறங்களில் இக் கல்வி மிகவும் குறைவாகவே காணப்படுகிறது ஒருசில கல்வி நிறுவனங்களில் கூட கரும்பலகை, கதிரை, மேசை மற்றும் சிறுவர்களுக்குப் போதிப்பதற்கான உபகரணங்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. சில இடங்களில் இவ்வுபகரணங்கள், வசதிகள் எதுவும் இல்லாமலே கல்வி கற்பிக்கும் நிலையையும் காணக் கூடியதாக உள்ளது. இத்தகைய கல்விமுறையில் குழந்தை எதுவும் கிரகித்துக்கொள்ள முடியாத நிலையில் தனது கல்வியினைத் தொடர்கின்றது. இதற்குக்கிராம மக்களிடையே காணப்படும் பொருளாதார நெருக்கடியே முக்கிய காரணமாகும்.

பெரும்பாலான குழந்தைகட்கு கல்வி நிலையங்களுக்குச் செல்வதோ அங்கே ஒரேயடியாக அமர்ந்திருந்து பாடங்களைக் கிரகிப்பதோ பெரும் சிரமத்திற்குரிய விடயமாகவே இருக்கும். பாடசாலைக்குப் போவதாகக் கூறிவிட்டு வேறு எங்காவது விளையாட்டுக்களில் ஈடுபட்டு மனம்போன போக்கில் தமது பொழுதைக் கழிக்கும் சிறுவர்களையும் நாம் நடைமுலையில் காணக் கூடியதாகவுள்ளது. இவர்களுக்கு சிறார் உலகத்திற்குத் தக்கவாறும், விளையாட்டுத் துறையோடு கூடியதுமான கல்வி முறைகளையே பயன் படுத்தவேண்டும். அதனை விடுத்து அடி' உதை போட்டுவலுக்கட்டாயமாக பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவது தவறாகும். அவ்வாறு அனுப்புவோமாயின் பிள்ளைகளுக்குப் பெற்றோர், பாடசாலை ஆகிய இரு இடங்களிலும் வெறுப்பே ஏற்படும்.

> வறிய குடும்பத்துப் பிள்ளைகள் கல்வி கற்க முடியாதநிலையில் வசதி படைத்தவர்களின் வீடுகளில் கூலிவேலை செய்தும்வாழ்க்கை நடாத்துவதையும் காணக்கூடிய தாகவுள்ளது. இச்சிறுவர்களின் எதிர்காலத்திற்கு எஞ்சியிருக்கப் போவது வறுமையும், விரக்தியுமே என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சில வீடுகளில் பெற்றோர் தாம் வேலைக்கு செல்லும்போது, வீட்டிலுள்ள தமது கைக்குழந்தையைப் பராமரிப்பதற்காகவும், வீட்டைப் பார்த்துக் கொள்வதற்காகவும் பள்ளி செல்ல வேண்டிய தமது சிறார்களையே வீட்டில் விட்டுச் செல்கிறார்கள். சில சமயங்களில் தாம் கூலித் தொழில் புரியச் செல்லும் இடங்களிலுள்ள சிறு வேலைகளைச் செய்வதற்காகவும், தமது பிள்ளைகளையே அழைத்துச் செல்கின்றார்கள். வறுமையின் நிமித்தமாக சிறுவர்களாக இருந்த போதிலும் அவர்களின் செலவுக்கு வேண்டிய பணத்தை அவர்களே உழைக்க வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். இது மட்டுமன்றித் தொழில் புரியும் இடங்களில் சமுதாய அடக்குமுறையான சாதிப் பிரிவினைக்கு ஆளாகும் பல சிறுவர்கள்தொடர்ந்தும்தாழ்வு மனப்பான்மையுடனேயே வளர்க்கப்படுகின்றார்கள்.

> இன்றைய சிறுவர்களே நாளைய சிந்தனையாளர்கள். நாளைய போராட்டத்தை நடத்திச் செல்வதற்கென்று இன்றே கல்விமான களையும், சிந்தனையாளர்களையும் சேர்த்து வைப்பதில்லைச் சமுதாயம்.

இன்று கிராமப்புறங்களில் தனியாரினால் பாலர் கல்வி பற்பல இடங்களில் போதிக்கப்படுகின்றது. பாலர்கல்வி புகட்டுவோர் விசேட பயிற்சி பெற்றிருப்பது அவசியம். ஆனால் இன்று தொழில் வாய்ப்பு என்ற அடிப்படையில் தான் கல்வி கற்போர் இணைந்து கொள்கின்றார்கள். முறையாகப் பயிற்சி பெறாதவர்களும் தமது செல்வாக்குகளைப் பாவித்து தனியார் கல்வி நிலையங்களில் இடமெடுத்துத் தமக்கு வசதியான முறையில், தமக்கு இலகுவான முறையில் மேலோட்டமாகக் கல்வியைக் கற்பிக்கின்றார்கள். பாலர் கல்வி கற்பிற்போர் சிறுவர்களின் தேவைகள், நடைமுறை நிகழ்வுகளோடு அவர்கள் கொண்டுள்ளவிருப்பு வெறுப்பு எல்லாவற்றையும் மனோதத்துவ ரீதியாகப் புரிந்துகொண்டு சிறார்களை அணைத்து வழிநடத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

பாலர் கல்விமுறை இன்று எதிர்நோக்கும் பொதுவான ஒரு பிரச்சினை பாலருக்கான போதனை முறையில் ஒழுங்கான படிமுறைகள் எமது நாட்டில் இன்னும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படாமை ஆகும். நாம் நினைப்பவற்றையும், எமக்குச் சரியெனப்படுவற்றையும் புத்தகங்களில் பொறித்துவைத்துப் பிள்ளைகளின் விருப்பு, வெறுப்பு, ஆசாபாசங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் போதித்து வருகின்றோம். பிள்ளைகளும் விரும்பியோ, விரும்பாமலோ, விளங்கியோ, விளங்காமலோ அழுதழுது நாம் சொல்வதையே திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இது குழந்தையின் மூளைவளர்ச்சியையும், மனோவளர்ச்சியையும், கூட வெகுவாகப் பாதிக்கின்றது. பாலருக்குப் போதிப்பதற்கெற்றே ''மொண்டேசாறி'க் கல்விகற்பிப்பதை நாம் அரிதாகவே காணக் கூடியதாகவுள்ளது. உலக நாடுகள் பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்து பாலர் கல்வியை முன்னேற்றியுள்ளன.

இந்த உலக நாடுகளால் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்ற பாலர் கல்வி நாட்டில் மிகவும் பின்தங்கியநிலையில் காணப்படுவது மிகவும் வேதனைக்குரியது ஆகும். சமுதாய நலனில் அக்கறைகொண்டு பணியாற்றிவரும் சமூக சேவை நிறுவனங்கள், மற்றும் ஆசிரியர்கள், அறிவுழைப்பினரும் இன்றைய காலகட்டத்தில் தமது பங்களிப்பை இத்துறையில் திசைதிருப்பி சிறுவர்களின் எதிர்காலத்தைச்சிறந்தமுறையில் உருவாக்கி நாட்டை நல்வழிப்படுத்துதல் வேண்டும்.

நேற்றைய சந்ததி நீதிகேட்க மறந்ததால் இன்றைய சந்ததி இரத்தத்தில் தோய்ந்தது என்ற கதை நாளைய சந்ததியைச் சென்றடையக் கூடாது என்பதற்காக இன்று நாம் ஆயிரக்கணக்கான இளைஞர்களின் தியாகங்களுக்கு மத்தியில் புரட்சிகரமான ஒரு சமுதாயத்தை உருவாக்கப் போராடிக் கொண்டிருக்கின்றோம், இத்தகைய புரட்சிகரமான ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதனூடே சிறுவர்கட்கான கல்வி முறையையும் சீரிய முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியும். □

நன்றி சுதந்திரப்பறவைகள்




முன்னணித் தலைவர் அஜித் மாத்தயா அவர்களது நெறிப்படுத்தலிலும் அரவணைப்பிலும் வளர்ந்தவன் இவன். அண்ணன் பால் இவனுக்கு பெருமதிப்பு. அண்ணனுக்கும் இவன மீது அலாதி அன்பு.

**களத்தில் லோலோ**

முறையாக இராணுவப் பயிற்சி பெற்றுக்கொண்ட லோலோ சிறீலங்கா இராணுவத்துடனான பல மோதல்களில் பங்கேற்றான். குடா நாட்டிற்குள் இருந்த பெரிய இராணுவ-விமானப்படைக் கூட்டுமுகாமிலிருந்து இராணுவம் பல தடவைகள் வானூர்திகளின் உதவியுடன் குடியிருப்புகளை நோக்கி வெளியேற முற்பட்ட போது எல்லாம் இவன் அவர்களைத் தடுத்து போர் தொடுத்தது. தோப்பாய், ஊரெழு, உரும்பிராய், இராஜ வீதி, நீர்வேலி போன்ற பல இடங்களில் இடம் பெற்ற யுத்தங்களில் எல்லாம் லோலோ பங்கேற்றான் இடைக்கிடை இரவில் வந்து எம்மைச் சந்திக்கும் லோலோ முற்றிலும் தமக்குப் பழக்கப்படாத பிரதேச பொறில் கெரில்லாப் போர்முனையில் பயிற்சி பெறாத இந்தியபடையின் பலவீனங்களையெல்லாம் தா புரிந்து கொண்டு மிகவும் தந்திரமாக ஆயுதங்களைக் கைப்பற்றியமையைப் பற்றி எடுத்துரைத்தான். அங்கிருந்தோர்களுக்கெல்லாம் நம்பிக்கை ஊட்டினான்.

**கிளிநொச்சியில் தப்புதல்**

ஒருமுறை கிளி பாச்சா காட்டிவிட்டுத் தப்பி வந்தார். அங்கிருந்து தப்புவதற்கு அவன் கையாண்ட தந்திரோபாயங்கள் அவனை ஒரு முழுமையான கெரில்லா வீரனாகவே எமக்கு இனம் காட்டியது.

**வலிகாமத்தில் லோலோ**

இந்திய இராணுவம் எது தாய பூமியை ஆக்கிரமித்த நாட் தொடக்கம் லோலோ இறக்கும்வரை வலிகாமம் பிரதேசத்தில் இவனது பெயரைக் கேட்டாலே இந்திய இராணுவம் அஞ்சி நடுங்கியது. இவன் அடிக்கடி உலாவிய பகுதிகள் பல தடவைகள் பெரும் தொகையான இந்திய சிப்பாய்களால் சுற்றி வளைக்கப்பட்டு சல்லடை போட்டுத் தேடப்பட்டன. ஒரு முறை ஒரு பிரதேசத்தில்

அந்த அதிகாலைப் பொழுது புலர்ந்தும் புலராத வைகறை பொழுதில்மேஜர் சுபாசும் கப்டன் நேருவும் எனது மருமகனின் மூலம் அந்த சாக செய்தியைசொல்லி அனுபினார்கள். லோலோ இறந்து விட்டார் என்ற செய்தி எம்மைக் கண்கலங்க வைத்தது. இராணுவ கெடுபிடிகள் தேடுதல் வேட்டைகள் அன்றைய தினம் மிகவும் ஜரூராகவிருந்தது. எப்படியாவது லோலோ வீட்டாரை அழைத்து வர வேண்டும் என்பதே மேஜர் சுபாசின் அன்புக் கட்டளை. அவரது ஆலோசனைப்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சன சந்தடி இல்லாத அந்தக் குக் கிராமத்தில் துரித கெதியில் நடந்தேறிய லோலோவின் மரணச் சடங்கில் யானும் பங்கு பற்றினேன். இவன் எங்கள் இல்லங்களில் நீட்டி நிமிர்ந்து துயிலும்போது எப்படி இருப்பானோ அப்படியே கண் மூடி மீளாத் துயில் கொண்டிருந்தான் அவனது மீளாத்துயில்தந்த மீளாத்துயரின் சோக ரேகைகள் என் நெஞ்சில் கோடுகளாக விழ அவனை என நெஞ்சில் நிறுத்தி என் நினைவுகளைப் பின்னோக்கிப் பார்க்கிறேன்.

**பாசறைப் பிரவேசம்**

இவன் சிறு வயது முதலே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டவனாக இருந்தான். மறைந்த லெப். வாசன், கட்டன் றொபின் போன்றோர் இவனது ஆர்வத்திற்கு ஊக்கமளித்தனர். கப்டன் றங்கன் இவனுக்கு வழிகாட்டியானார்.

வாசனின் அம்மாவும் குஞ்சி அரியும் உறுதுணையாயினர். இவனையான் 1983ல் சந்தித்தேன். 1983-84ஆம் ஆண்டுகால கட்டம் ஒரு நாள்.

''மாட்டு வண்டியைப்
பூட்டிக்கிட்டு
மாப்பிள்ளையைக்
கூட்டிக்கிட்டு
காட்டுவழி போறவளே...''

இப்படிப் பாடிக் கொண்டு ஒரு நாள் ஒரு வண்டியில் வந்தான். கட்டப்பொம்மன் பாடடைப்பாடிக் கொண்டு வந்த லோலோவுக்கு அப்போது வயது ஒரு பதின் நான்கு இருக்கும். இந்தப்பாடலை இவன் பாடக் கேட்ட மறைந்த மேஜர் சலாம் (வல்வெட்டித்துறை) நகைச்சுவையாக சொன்னார். 'இவனுக்கு அண்ணை, தான் ஒரு கட்டப்பொம்மன் என்ற நினைப்பு''.

பாஞ்சாலங் குறிஞ்சியை ஆக்கிரமித்த அந்நிய ஆக்கிரமிப்பாளனுக்கு பெரும் தலையிடியாக விளங்கிய வீர பாண்டிய கட்டப் பொம்மனைப் போல இந்திய ஆக்கிரமிப்புப் படையினருக்கு சிம்ம சொற்பனமாக லோலோ விளங்கினான் வலிகாமம் மேற்கில் மேஜர் தும்பனும் வலி-வடக்கிலும் கிழக்கிலும் லோலோவும் வடமராட்சி பகுதியில் இன்னுமொரு போராளியும் ஏக காலத்தில் குடாநாட்டையே ஒரு கலக்கு கலக்கி இந்திய ஜவான்களின் அடிவயிற்றை அடிக்கடி கலக்கிக் கொண்டிருந்தனர். வலிகாமம் வடக்கிலும் கிழக்கிலும் லோலோ ஒரு கட்டப்பொம்மன் தான்.

**உணவு உற்பத்தி**

1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின பின் எமது போராட்டம் மேலும் கூர்மையடையலாயிற்று. அந்தப் போராட்ட வேகத்திற்கு ஏற்ப சுதேச உற்பத்தியைத் துரிதப்படுத்த வேண்டிய அவசியம் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டது. உணவு தாரம் உயரத் திட்டங்கள் முடுக்கிவிடப்பட்டன. உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த தமிழரின் பாரம்பரிய வாகனங்களும் பயன்படுத்தப்பட்டன. இந்தப் பணியில் லோலோவும் முன்னணியில் நின்றான். விடுதலைப் புலிகளின் ஒவ்வொரு பணியிலும் பங்கேற்றான். மக்கள்

'இந்திய இராணுவசிப்பாய்கள் மட்டுமல்ல இந்திய இராணுவ உயர் அதிகாரிகளும் லோலோவின் பெயரைக் கேட்டு கிலேசமடைந்து இருந்தனர். ''லோலோவை யான் ஒருக்கால் பார்க்க வேண்டும்' என்பது மேஜர் ஒப்றோயின் ஆசை 'லோலோ எப்படியான தோற்றமுடையவன்' இது ஜேமர் கே. பி. தாஸின் ஆதங்கம். ''லோலோ இந்தப் பிராந்தியம் எங்கும் ஒரே தொல்லையாய் இருக்கிறான்' இது பிரிகேடியர் மனோரஞ்ன்சிங் ஆத்திரம். ''லோலோ போட்டதுதான் எங்கும் சட்டமாகவிருக்கிறது'' இது இராணுவ அதிகாரி ரவி நாயரின் ஏக்கப் பெரு மூச்சு.

ஒரு வீட்டில் தங்கியிருந்த லோலோ அந்த வீட்டிற்கு திடீரென வந்த கேணல் பர்பார்சிங் கிடம் தானே அந்த வீட்டு வேலைக்காரன் என்று சொல்லி தப்பிக்கொண்டான். பாடசாலைப் பிள்ளைகள் தமது மதிய உணவை எடுத்துச் செல்வதைக் கண்ட மேஜர் ஜெனரல் சர்தேஷ்பாண்டே பாடசாலை சிறுவர்களிடம் 'என்ன லோலோவுக்கு சாப்பாடு கொண்டு போகிறீர்களா?' என்று கேட்டு மிரட்டினார்.

நிறுத்தி திருப்பி அனுப்புவதில் மும்முரமாக ஈடுபட்டார். கப்டன் றங்கன் இவனுக்கு வலக்கரமாக நின்று பல களங்களில் போரிட்டான்.

1987 ஜூலை மாதம் ஆறாம் திகதி நெல்லியடி சென்றல் கல்லூரி முகாம் மீது கப்டன் மில்லர் மேற்கொண்ட தாக்குதலில் தன்னையே முழுமையாக அர்ப்பணித்து தியாக மரணமடைந்தான். அந்தத் தாக்குதலிலும் லோலோ பங்கேற்றான். அங்கிருந்த சிங்கள சிப்பாய் ஒருவர் தனதுகாதலிக்கு எழுதிய கடிதம் ஒன்றைக் கைப்பற்றிய லோலோ அதனை ஈழமுரசில் ஒப்படைத்து பிரசுரிக்கச் செய்தான். அந்த சிங்களச் சிப்பாய் யாழ்ப்பாணத்தில் மனம் புழுங்கியபடி வாழும் தனது அவல வாழ்வை அதில் சித்தரித்து இருந்தான். ஒவ்வொரு சிங்களச் சிப்பாயினதும் மனோ நிலையை அக்கடிதம் படம்பிடித்துக் காட்டியது.

**இந்திய ஜவான்களுடன் நடந்த யுத்தம்**

1987 ஒக்டோபரில் அமைதி காக்கும் படை என்ற புனை பெயரில் ஈழத்திற்குள் நுழைந்த இந்திய இராணுவம் விடுதலைப் புலிகள் மீது



கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக சிறைக்குள்ளே இருந்த ஒரு போராளி தனது மனக்கண்முன் தான் கண்ட கப்டன் லோலோவின் தோற்றத்தை சிறைக்குள்ளேயே வைத்து சித்திரமாகத் தீட்டினார். அதனையே இங்கே காண்கிறீர்கள்.

நொச்சிக்கு சென்ற லோலோவை கிளிநொச்சி பொலிசாருக்கு தேசத்துரோகிகள் காட்டிக்கொடுத்தனர். கைதான லோலோ தேசத்துரோகிகளுக்கும் இந்திய இராணுவத்துக்கும் லோலோ தங்கியிருந்த செய்தியைக் கேள்விப்பட்ட இந்திய இராணுவம் அப்பகுதியைச் சுற்றி வளைத்துக்கொண்டது. லோலோவைக் குறிவைத்தே அந்த சுற்றி வளைப்பு. ஒவ்வொரு

வீடாக லோலோவின் பெயரைக் குறிப்பிட்டு இந்திய ஜவான்கள் தேடிக்கொண்டு இருந்தனர். சுண்ணாகத்திலிருந்து மல்லாகம் ஊடாக தெல்லிப்பழை வரை கே. கே. எஸ் வீதியிலும் மறுபகுதி அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் நீர்வேலி வரையான பருத்தித்துறைவீதிவரை ஒரு பெரிய பிரதேசம். ஒருநாள் அதிகாலை தொடக்கம் மாலை வரை தேடப்பட்டது. ஒரு ''ரீ'' சேர்ட்டும் கட்டைக் காற்சட்டையும் கையில் ஒரு புத்தகக்கட்டுடன துவிச்சக்கர வண்டி ஒன்றில் ரியூசன் மாணவனைப் போல ஒழுங்கைகளினூடாக சென்று கொண்டிருந்தான். அந்த முற்றுகையை சாதுரியமாக முறியடித்து வெளியேறுவதே அவனது நோக்கம். பிரதான



கப்டன் லோலோ

வீதியை வந்தடைந்த சிப்பாய்களை நெருங்கிய லோலோ ''நமஸ்தேஜி'' என்று இந்திமொழியில் சொன்னான். பதிலுக்கு நமஸ்தேஜி சொன்ன ஜவான்கள் ''சலோ சலோ'' (விரைந்து போ) என்று கூறி அவனை வழி அனுப்பி வைத்தனர். அன்று லோலோவைப் பார்த்தபோது அவன் அசல் பள்ளிக்கூட மாணவனைப் போலவே இருந்தான். இந்தியத் துருப்புக்களை அவன் ஏமாற்றியது எல்லோருக்கும் வியப்பைக் கொடுத்தது.

**பகிஸ்கரிப்பு பிரசாரம்**

மட்டக்களப்பில் ஒரு மாதகாலமாக உண்ணாநோன்புஇருந்த அன்னை பூபதி கணபதிப்பிள்ளை 1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி தியாக மரணமடைந்தார். இதனால் விடுதலைப் புலிகள் மக்களுக்காக மரணித்த அந்த மாபெரும் அன்னைக்காகதமிழ் ஈழத்தில் துக்கதினம், ஹர்த்தால், பாடசாலை பகிஸ்கரிப்பு, கடையடைப்பு என பல்முனைப் போராட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அன்னை பூபதியின் மரணத்தால் கிலேசமடைந்த இந்திய இராணுவம் பகிஸ்கரிப்பையும் ஹர்த்தாலையும் முறியடிக்கமுனைந்து நின்றது. ஒவ்வொரு முகாலுமிமிருந்த இராணுவக் கொமாண்டர்கள் அந்தந்தப் பகுதி பாடசாலைகளுக்குச் சென்று பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளைப் பகிஸ்கரிக்கக்கூடாது என மிரட்டிக் கொண்டு திரிந்தனர்.

வலிகாமம் பகுதியில் ஒரு பாடசாலைக்குள் அப்போது தான் பகிஸ்கரிப்புக்காக ஆதரவு திரட்டச் சென்ற லோலோ வகுப்பறை ஒன்றுக்குள் நுழைந்து பாடசாலைச் சிறுவன் போல் நின்று கொண்டிருந்தான். லோலோ இருந்த அதே வகுப்பறைகுள் இராணுவ அதிகாரியான மேஜர் டே. பி. தாஸ் நுழைந்து மாணவர்களுக்கு போதனைகள் புரிந்தார். மாணவர்கள் ஒருவனாக வாங்கில் இருந்து யாவற்றையும் செவி மடுத்த லோலோ அவர்கள் போன பின் பகிஸ்கரிப்பின் அவசியத்தை வலியுறுத்தி ஒரு குட்டி பிரசங்கமே ஆற்றிவிட்டு அடுத்த பாடசாலையை நோக்கி தனது துவிச்சக்கர வண்டியில் ஏறி நகர்ந்தான் அவன் சென்ற பாடசாலைகள் எல்லாம் ஹர்த்தால் தினத்தன்று மாணவர்களால் பகிஸ்கரிக்கப்பட்டு வெறிச்சோடிக் கிடந்தன.

**கே. கே. எஸ் தாக்குதல்.**

ஒரு நாள் காங்கேசன் துறை நகரத்தில் நின்ற லோலோ ஒரு கடைக்கு முன்னால் நின்ற மூன்று ஜவான்கள் மீது தாக்குதல் ஒன்றைத் தொடுத்தான். ஒரு ஜவான் அந்த இடத்திலேயே இறந்தான். காயப்பட்டு நிலத்தில் விழுந்த இன்னொரு ஜவான் தனது துப்பாக்கியில் இருந்த தோட்டாக்கள் தீரும் வரை கிழக்கு நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தான். அவனுக்கு மேற்குப் பக்கத்தில் நின்ற லோலோ ஒரு மதிலுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு நிலைமையை அவதானித்துக் கொண்டிருந்தான். இதற்கிடையில் இந்தச் சூடுச்சத்தம் அமளி துமளியில் தூரத்தில் தென்னம் தோட்டம் ஒன்றில் சென்றிக்குநின்றசிப்பாய்கள் தமது முகாம்களுக்குள் ஓடி ஒளிந்து கொண்டனர்.

ஜவான்கள் மீதான தாக்குதல்கள் யுத்தம் போல் மின்னல் வேகத்தில் இடம்பெற்ற போது ஒரு கடை முதலாளி கடையைப் பூட்டாமல் தலை தப்பினால் தம்பிரான் புண்ணியம் என்ற நிலையில் தப்பியோடிவிட்டார். சிறிது நேரம் அமளிக்குப் பின் அமைதி. அமைதியைப் பயன்படுத்திக் கொண்டு இறந்த சிப்பாய்களது கையில் கிடந்த ஆயுதங்களைக் கைபற்றும் நோக்குடன் கொஞ்சமேனும் பதட்டமில்லாமல் அந்த இடத்திற்கு மீண்டும் லோலோ வந்து பார்த்தான். கடைமுதலாளி ஒருவர் ஓடித்தப்பிய கடைக்குள் இருந்த மேசை லாச்சியைத் திறந்து அங்கிருந்த பணநோட்டுகளை மிக அமைதியாக ஒரு சீக்கிய சிப்பாய் எண்ணிக் கொண்டிருந்தான். லோலோவைக் கண்ட அவன் லோலோ மீது தாக்குதல் தொடுக்க முனைத்தான் அதற்குள் மின்னல் வேகத்தில் லோலோவின் துப்பாக்கி அவனைக் குறிபார்த்து ரவைக

# நேதாஜி

ளைப் பொழிந்து தள்ளியது. எல்லோருடைய ஆயுதங்களையும் கைப்பற்றிக் கொண்ட லோலோ தனது துவிச்சக்கரவண்டியில் ஏறி அந்த இடத்தை விட்டு மறைந்தான்.

**மீட்டு எடுத்த துவிச்சக்கர வண்டி**

ஒரு நாள் வீதிவழியே வந்து கொண்டிருந்த லோலோவை அடையாளம் கண்டு கொண்ட சில தேசத்துரோகிகள் கொடுத்த தகவலின் பேரில் லோலோ சென்று கொண்டிருந்த துவிச்சக்கர வண்டியைச் இந்திய



கப்டன் மில்லர்

இராணுவத்தின் கவச வாகனங்கள் பின்தொடர்ந்தன. ஒரு கெரில்லாப் போராளி எதிரியிடமிருந்து தப்பிக்கொள்ள புவியியல் ரீதியாக அவனுக்கு அனுகூலமான இடம் எங்கே கிடைக்கின்றதோ அந்த சந்தர்ப்பத்தை அவன்பயன்படுத்திக் கொள்ளவேண்டும். லோலோவுக்கு இப்படியான ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அடுத்த கணமே அவன் துவிச்சக்கர வண்டியை அந்த



அன்னை பூபதி

இடத்தில போட்டுவிட்டு றோட்டின் அருகில் இருந்த மதிலைத்தாண்டி தப்பிக் கொண்டான். கவச வாகனங்களில் வந்தவர்கள் லோலோவை துரத்திக்கொண்டு பின்னால் ஓடினாராயினும் அவன் பல தந்திரோபாயங்களைக் கையாண்டு வெகு சாதுரியமாகத் தப்பிக் கொண்டான். ஆத்திரம் கொண்ட ஜவான்கள் சயிக்கிளை தமது வாகனத்தில் ஏற்றிக் கொண்டு முகாமுக்குச் சென்றனர்.

உடனே லோலோ ஒரு பிரசைகள் குழுத் தலைவரின் வீட்டுக்குச் சென்றான். அவரிடம், 'பெரியவரே! எனது சயிக்கிளை இராணுவச் சிப்பாய்கள் எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். அதை முகாம் அதிகாரியுடன் கதைத்து மீட்டுத்தர வேண்டும்'' என்றான். அந்தப் பிரசைகள் குழுத் தலைவர் ''தம்பி நீ போட்ட சயிக்கிளை நான் போய்க் கேட்டால் அவர்கள் தருவார்களோ? என்றார். பிரசைகள் குழு என்று இருக்கும் நீங்கள் மாலை நேரத்தில் இராணுவ கொமாண்டரோடு கூடியிருந்து ரீ குடித்து உல்லாசமாகப் பொழுது போக்கவும் அவர்கள் உங்களிடமிருந்து பேச்சோடு பேச்சாக எங்களைப்பற்றிக் ''கறந்து'' எடுத்து எங்களைத் தேடித் திரியவுமோ இருக்கிறீர்கள்? நான் ஒரு பிளான் தருகிறேன். அதன் படி செய்யுங்கள்'' என்றான். பெரியவரும் உடன்பட்டார்.

நீங்கள் போய் உங்கள் சைக்கிள் உங்கள் வீட்டு முன்னால் நிறுத்தப்பட்டு இருந்தது என்றும் அதனை லோலோ எடுத்துக் கொண்டு போய்விட்டான் என்றும், போகும் வழியில் அதனைப் பிடித்து உங்கள் முகாமில் வைத்திருப்பதாக அறிகிறேன் என்றும் கூறி அவர்களிடம் வாங்கி வாருங்கள் என்றான். லோலோ கொடுத்த திட்டப்படி அந்தப் பெரியவர் செயல்பட்டார். ஒருசில மணித்துளிகளில் லோலோவின் கைகளுக்கு அவனது சைக்கிள் வந்து சேர்ந்தது.

**சுண்ணாகம் தாக்குதல்**

விடுதலைப் புலிகள் 1988ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ஆம் திகதி சுண்ணாகம் ஜெட்மோட்டேர்ஸ் அருகில் முகாமிட்டிருந்த இந்திய இராணுவத்தினதும் தேசத்துரோகிகளதும் முகாம்மீது தாக்குதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் பங்குபற்றிய லோலோவுக்கு காலில் காயம் ஏற்பட்டது. காயப்பட்ட லோலோவை காப்பாற்றிவிட வேண்டும் என்று துடியாய்த் துடித்த நண்பர்கள் தமது உயிரைப் பொருட்படுத்தாது மிக மோசமான இராணுவச் செடுபிடிக்கு மத்தியில் ஒரு இரவில் இராணுவ சென்றி முகாம்களையும் ஊடறுத்துக் கொண்டு மோட்டார் வாகனம் ஒன்றில் பிரதான பாதைகளினூடாக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். ஆனால் சரியான வைத்திய வசதிகள் கிடையாமையால் விதி அவனையும் அவனது நண்பர்களையும் பிரித்துவிட்டது.

லோலோவின் மரணச் சடங்கு ஒரு ஒதுக்குப் புறக் கிராமத்தில் ஒரு வீட்டில் நடந்துகொண்டிருந்த அதே வேளையில் சுமார் இரண்டாயிரத்துக்கு அதிகமான இராணுவ சிப்பாய்கள் இன்னொரு அயற்கிராமத்தைச் சுற்றிவளைத்து வீடுவீடாக லோலோவைத் தேடிக்கொண்டு இருந்தனர். அவனோ தனது நண்பர்களின் இராணுவ மரியாதைகளுக்கு மத்தியில் இராணுவ அணிவகுப்புடன் இறுதிப் பயணத்தைப் பெற்றுக்கொண்டிருந்தான்.

இவன் மரணித்த
இடமும்
யாருக்கும் தெரியாது
இவனை அடக்கம்
செய்த
இடத்தையும்
அவர்கள்
சொல்லவில்லை
- ஆனால்
இவனோ ஒவ்வொரு
அங்குல நிலத்திலும்
வாழ்கிறான்.
வீசும் காற்றிலும்
வீரர்கள் நெஞ்சிலும்
இவனது
நினைவாலயம்,
நிமிர்ந்து நிற்கின்றது.

□

# இலக்கியத்தடம்

சமீபத்தில் இரண்டு இலக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றன. முதலாவது நந்தியின் ''நம்பிக்கைகள்'' நாவல் வெளியீடு. இரண்டாவது மல்லிகையின் வெள்ளிவிழா மலர் வெளியீட்டு நிகழ்வு

புத்தக வெளியீட்டுத் துறை எவ்வளவு நவீனத்துவம் பெற்றுள்ள நிலையில் நம்பிக்கைகள் நாவலின் புத்தக அமைப்பு ஆச்சரியத்தைத் தந்தது.

முதன் முதலாக அந்த நூலைப் பார்த்தவுடன் எங்கேயோ பார்த்த ஒரு மலைப்பைக் கொடுத்தது. பின்னர் தான் காரணத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது. ஈழத்துச் சோமு அவர்களின 'விடிவெள்ளி பூத்தது' நாவலின் அட்டைப் படத்தினைப் பார்த்தபாதிப்பே அது.

அட்டைப்படம் இராசையா அவர்களால் வரையப்பட்டு இருக்க நத்தியின் மகள் அவர்கள் முகவுரைக் குறிப்பில் அட்டைப்படத்தினை வரைந்தவர் ராஜேஸ் எனக் குறிப்பிட்டுள்ளது.

□ **மல்லிகை**

மல்லிகையின் வெள்ளிவிழா உண்மையில் வரவேற்கப்பட வேண்டிய ஒரு நிகழ்வு. ஈழத்து இலக்கியத் துறையில் மல்லிகைக்கும், அதன் ஆசிரியர் டொமினிக் ஜிவாவுக்கும் ஒரு தனி இடம் உண்டு.

சில அலுவல்களை ''ஜீவா'' தான் செய்கின்றார். அவரால் தான் செய்ய முடியும், ஆனால் செய்கின்ற அலுவல்களை திரும்பத் திரும்ப மேடைகளில் சொல்வது அவ்வளவு ஆரோக்கியமானதல்ல. அப்படிச் சொல்லுவதற்காகவே சிலவற்றினைச் செய்வது போல ஆகிவிடும்.

சிலரைப் போல அரை வேக்காட்டுத்தனம் ஜீவாவுக்கு இல்லை. எல்லோரையும் அணைத்துக் கொடு போகும் பண்பு ஜீவாவுக்குஉண்டு. எனவே இதனை அவர் கருத்திற் கொள்வார் என நம்புகின்றேன்.

அன்றைய விழாவில் ''இன்றைய நவீன இலக்கிய கர்த்தாக்கள் தம் சமூகக் கடமையினின்றும் வழுவி விட்டனரா'' என்ற விவாதம் (?) இடம் பெற்றது.

புலவர் ஈழத்துச் சிவானந்தன், செங்கை ஆழியான், கம்பன் கழக இ. ஜெயராஜ் போன்றோர் அதில் பங்கு பற்றினர்.

அந்த விவாதம் உருப்படியானதா? காத்திரமான கருத்துக்கள் வெளிப்பட்டனவா? என்பதும் ஒரு விவாதத்திற்குரிய விடயமே.

ஆனால் இலக்கிய கர்த்தாக்களின் சமூகக் கடமை என்ன? நமது இலக்கிய வாதிகள தத தமது சமூகக் கடமைகளை உணர்ந்து தான் உள்ளனரா? இவ்வாறு சமூகக் கடமையைப் பற்றிக் கதைப்பதுகூட அபத்தமானது என்று சிலர் சொல்வார்களே?

இலக்கிய வாதிகளுக்கு கடமையாவது. கத்தரிக்காயாவது. தன் மன உணர்வுகளை அனுபவ வெளிப்பாடுகளை எழுத்தாளன் வெளிப்படுத்தினால் போதுமானது என்று கூறுபவர்கள் இது பற்றி என்ன கூறுவார்கள்?

அன்றுதென்னிலங்கையில் இருந்தும் மலைநாட்டில் இருந்தும் வந்த இலக்கிய அன்பர்கள் தமது பிரயாணத்தைப் பற்றியே கதையளந்தார்களே தவிர உருப்படியாக எதுவுமே கூறவில்லை. இது போன்ற விழாக்களில் இப்படியான கதையளப்புக்கள் தவிர்க்கப் பட்டால் நன்றாக இருக்கும்.

□ □ □

□ **சிறுகதையாளர்களின் முன்னோடியான கு. ப. ரா. பற்றி ந.பிச்சமூர்த்தி:**

''தமிழின் புது இலக்கிய சகாப்தத்தில் கு. ப. ரா வின் ஸ்தானத்தைப் பற்றி எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லை அவன் இடம் முன்னணியில்.

அநேகமாக அவனுடைய எழுத்துக்கு ஆண் பெண் உறவுதான் அடிப்படையான விஷயமாக இருக்கும். இவ் விஷயத்தைத் தவிர்த்து அவன் கதையோ கவிதையோ எழுதவில்லை. நிழலைப்போல பெண்ணின் சித்திரத்தை இருளாக்கும் உணர்ச்சிகளையும் கருவாக நின்றுவிட்ட வேட்கைகளையும் வெகுநுட்பமாகவும் அநாயாசமாகவும் படம் பிடிப்பதில் நிகரற்றவன் பெண்ணின் மனத்தைச் சித்தரிப்பதில் வல்லவன்.

ஆண் பெண் உறவையே முக்கியமான விஷயமாகக் கொண்டதால் அவன் எழுத்தில் ஏதோ பச்சையாக இருப்தாகச் சொல்கிறார்கள். பெண்மனம் இப்படியாக இருக்கிறது என்று நினைக்க இஷ்டப்படாதவர்கள் உண்மையை பார்க்கப் பேசப் பயந்தவர்கள் கூறும் பேச்சு இது. அவர்கள் மறுப்பதே அவன் எழுத்தின் உண்மைக்கு அத்தாட்சி பச்சையாக இருப்பதால் அது அவன குற்ற மன்று. ஆண் பெண் உறவு இப்பொழுது நிலவி வரும் முறையின் குற்றம் உண்மையை மறைப்பது கலையாகாது. கீறி ஆற்றுவதே சிறந்த வைத்யம்''

□ □ □

□ **நாவல் கலை பற்றி**
**சி. மோகன்**

வாழ்வின் உண்மை நிலையை அறிய முற்டடுபவன் நாவல் கலைஞன். நாவல் சாதனமும் அதன் இயல்பால் இதற்குப் பெரிதும் வசதி நிறைந்ததாக உள்ளது. எத்தகைய அனுபவத்தையும் அதன் இயல்பான தன்மையிலேயே சுபாவமான மொழியில் வெளியிடக் கூடிய சுதந்திரம் கொண்டது நாவல். இந்த நேரடித்தன்மை வாழ்வுக்கும் படைப்பாளிக்கும் நாவல் கலைக்கும் இடையிலான உறவை ஆழமாக்குகின்றது. அனுபவத்தின் சாராம்சத்தைத் தருவது கவிதை, இதனால் கவிதையில் அனுபவங்கள் உள்ளுறைந்து அனுபவங்களின் மூலமாகப் பெறப்பட்டமதிப்புக்கள் மேலெழுகின்றன. சிறுகதை அதன் வடிவக் குறுக்கம் காரணமாக பெரும்பாலும் கவிதையின் சாயல் கொள்கின்றது.

நாடகம் மேடையேற்ற குணத்தை முன் நிறுத்தி வெளியீட்டைத் தீர்மானிக்கிறது. இன்று எவரையும் எளிதில் கவர்ந்து விடக்கூடிய தன்மை கொண்ட திரைப்படம் கூட காட்சி ரீதியான அனுபவங்களையே அதாவது வாழ்வின் வெளித் தோற்றங்களையே முழுவதுமாக நம்ப வேண்டியிருக்கிறது. வாழ்வின் வெளித்தோற்றங்களோடு உறவு கொள்ளும் போது மனித மனத்தினுள் ஓடும் மனவோட்டங்களையோ சலனங்களையோ இதனால் பிடிக்க முடியாது இவ்வாறு பிற்கலைச் சாதனங்கள் எல்லாம் அவற்றின் தன்மைக்கேற்ப அனுபவங்களின் நேரடித் தன்மையை மாறுதல்களுக்குட்படுத்தி வெளியீட்டிற்கு ஏற்கின்றன. ஆனால் வாழ்வின் முழு ஓட்டத்தையும் இயல்பாக ஏற்கக் கூடிய தன்மை கொண்டிருப்பதால் தான் வாழ்வை அணுக முற்படும் கலைஞனுக்கு மிகவும் உகந்த சாதனமாக இருக்கிறது நாவல்.

□ □ □

□ **இலக்கியக் கொள்கை**

தமிழ்ச் சிறு கதையின் முதல் மூவர்களான வ. வே. சு, பாரதி, மாதவையா ஆகியோரது இலக்கியம் குறித்த கொள்கைகள்

**வ. வே. சு ஐயா**

தற்காலத்தில் நமது நாட்டிற்கு முக்கியமாக வேண்டிய தர்மங்கள் தேசபக்தியும் தர்மவீரமும் தியாக புத்தியும் குற்றமற்ற பிரேமையும் ஆகும். ஆகையால் இக்காலத்து நூல்களைப் படிக்கும் போது இத்தகைய தர்மங்களின் உணர்ச்சி தொனிக்க வேண்டும்.

**பாரதியார்:**

கதை என்று எடுத்தால் அதில் கற்பனைப் புனைவையே நான் முக்கியமாகக் கருதுவேன். எனினும் என்னை மீறியே கதைகளிலும் பெரும்பாலும் தர்ம போதனைகள் வந்து நுழைந்து விடுகின்றன.

**மாதவையா:**

இவற்றைப் படிப்பவருள் சிலரேனும் இவ் வழக்கங்களைப் பற்றி ஆழந்து ஆலோசனை செய்யின் அதுவே என் சிரமத்துக்குப் போதிய கையாறாகும். □

## அழலாடிக்குட்டன்

# என் மகனே

நீண்ட வெளியிடை
முகம் தழுவும் காற்று
சில்லென்ற பனித்துளி
என் அகத்தை எதுவுமே
எட்டவில்லை உண்மைதான்.
என் பிரிய மகனே
போட்டிருந்த உடுப்போடு
போனாயே சொல்லாமல்
சுதந்திரத்தை தேடுதற்காய்
சொந்த லாபம் பார்க்காமல்
துணிந்து சென்ற என்மகனே
வெய்யில் வரும் கூரையும்
கன்னி கழியாப் பெண்களும்
வெதும்பி அழும் வாழ்க்கையுமாய்
காலம்தான் கழிந்தாலும்
காத்திருப்போம் காலம்வரும்
சரித்திரங்கள் பொய்த்ததில்லை
தந்திரங்கள் வென்றதில்லை
நம்பிக்கைதான் கெட்டதில்லை
நிச்சயமாய் வெற்றி வரும்

— கண்ணன் □

## விளை நிலங்கள்

3 ஆம் பக்க தொடர்ச்சி

திருந்தன. காணும்மிடமெல்லாம் அழிவின் சின்னங்கள் அழியாத கோலங்களாய் விளங்கிக் கொண்டிருந்தன. எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென காட்சியளித்த பூமி இப்போ இருண்ட சுண்டமாய் இருப்பதைக் கண்ட வாசுதேவன் மனம் வேதனையில் ஆழ்ந்தது.

அந்த வேதனையுடன் தனது தோட்டத்தினை நோக்கி நடந்துவந்து கொண்டிருந்தான். வாசுதேவன். வழி நெடுகிலும் அந்நியபாதங்களின் அடிச்சுவடுகள் அந்த மண்ணில் பதிந்திருப்பதை அவதானித்தவன் ஒருவித திகிலுடன் சுற்று முற்றும் பார்த்தான்.

தூரத்தே ஒரு பற்றை மறைவினுள் இருந்த சில உருவங்கள் இவனை நோக்கிவந்து கொண்டிருந்தன. அவன் அவர்களினால் தீவிரமாக விசாரிக்கப்பட்டான் அடையாள அட்டையில் வசிப்பிடம் யாழ்ப்பாணம் என்றிருந்ததினால் 'இங்கே உனக்கு என்னவேல..?' என்ற கேள்வி கேட்கப்பட்டது. அவன் தான் ஒருவிவசாயி என்று எடுத்துக் கூறியும் அவர்கள் கேட்கவில்லை. துப்பாக்கிகள் அவன் நெஞ்சை நோக்கி நீண்டன. கணப்பொழுதில் அவை கடகடக்கத் தொடங்கின.

(யாவும்கற்பனை)

**வாசகர்கள்**
**எழுத்தாளர்கள்**
**கவனிக்க:**

வாசகர்களே...
ஞாயிறு மலர் பற்றிய
உங்கள்
ஆலோசனைகள்,
கருத்துக்கள்,
விமர்சனங்கள்
வரவேற்கப் படுகின்றன.
எழுத்தாளர்களே
உங்களின்
ஆற்றல்மிகு
ஆக்கங்களை
நாங்கள்
எதிர்பார்கிறோம்.
நம் சமுதாய ஏற்றத்தை
முன்னெடுக்கும்
ஏவுகணைகளாக
உங்கள் படைப்புக்கள்
அமையட்டும்.
பிரசுரிக்கபபடும்
ஆக்கங்களுக்கு
உரிய சன்மானம்
வழங்கப்படும்.

## களத்திலிருதது......

அன்புள்ள அம்மா.

நான் 1985 ஆம் ஆண்டு முதலுதவி நிலையம் என்றும், மாதர் சங்கம் என்றும் வெளியே புறப்பட்டபோது கொஞ்சமேனும் தயக்கம் இன்றிப் பலவிதமாகப் பேசியவர்கள் இன்று நாணித் தலை குனியும் நிலையில், எங்கள் நாட்டின் நிலைஉள்ளது.

அம்மா, நீங்கள் அப்போது எனக்குப் பூரண ஆதரவும், நல்ல கருத்துக்களும் தந்து அனுப்பினாலும் அடுத்தவரின் பேச்சுக்கேட்டுக் கலங்கிய காலங்களை நான் மறக்கவில்லை. நீங்களே உங்களை மீறித் தடைகள் போடும் அளவிற்குச் சமூகத்தின் பேச்சுத் திறமை. அவற்றை நான் மீறும்போது எனக்கும் உங்களுக்கும் இடையில் தேவையற்ற மனக்குழப்பங்கள். இன்று அவை தீர்ந்திருக்கும். எமது போராட்டத்தின் தேவைகளை அனைத்து மக்களும் புரிந்து கொண்டனர். வீட்டினுள் முடங்கி இருந்தோரும் வேலியின் இடையினால் வீதியைப் புதினம் பார்த்தோரும் எங்களின் அணி வகுப்பில் சேர்கின்றனர் போராட்ட எழுச்சிகள் எமது கால்களை வேகமாக நடக்க வைக்கின்றன.

அம்மா, பெரியண்ணாவை 86 ஆம் ஆண்டு நிகழ்ந்த ஊர்சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர் என்ற பெயரில் அழைத்துச் சென்றார்கள். சில நாட்களில் அவர்கள் அண்ணாவைக் கொன்ற செய்தி சந்தேகம் இன்றிக் கிடைத்தபோது நானும் குளறி அழுத சம்பவம் இன்றும் என் நெஞ்சில் பசுமையாக உள்ளது. ஆனால் 87 ஆம் ஆண்டு சின்னண்ணாவின் வீரமரணச் செய்தி கேட்ட போது அழுகை என்பது வெளிவரவில்லை. பாசத்தினால் உள்ளம் குமுறினாலும், உதடுகள் 'சின்னண்ணா' எனத் துடித்தாலும் வார்த்தைகள் வெளிவரவில்லை. கண்ணீரே மனத்தின் வேதனைகட்கு ஒத்தடம் இட்டது. இம் மாற்றங்கள் எம் இனம்பட்ட காயத்தின் வடுக்களே. சின்ண்ணாவின் இழப்பினை எமது சுதந்திர தாகம் மறைத்துவிட்டது. அவரது இழப்பு இறப்பில்லை இப்பிரிவு, அர்த்தம் உள்

# ஒரு வீராங்கனையின் கடிதம்

அம்மா, நீங்கள் கூறுவீர்கள் எங்களுக்குப் பாதுகாப்பு அப்பா, அண்ணா, கணவன் என்று. இன்று இவர்கள் முன்னிலையிலேயே எம்மைக் கொன்றும், கடித்துக் குதறியும் வருகின்றனர். இந்த அந்நிய கழுகுகளிடம் இருந்து எம்மைப் பாதுகாக்க நாம்தான் ஆயுதம் ஏந்தவேண்டும். இனியும் எங்கள் கண் முன் எங்கள் குடும்பத்தவர்கள் தாக்கப் படுவதோ அல்லது நம்மை அழிக்கும்போது இயலாது அழுது மன்றாடிக் கொண்டிருப்பதோ நீடிக்கக் கூடாது எங்கள் மக்களைத் தாக்கும் கரங்கள் துண்டாடப்படவேண்டும். எங்கள் மண்ணிலே படும் எதிரியின் கால்கள் வெட்டப்பட வேண்டும்.

அம்மா, ஏற்கெனவே நீங்கள்இருஆண்பிள்ளைகளைப் பறிகொடுத்தும், இன்று தங்கை அமுதாவையும் அனுப்பத் தயாராக இருப்பதை அறிந்தபோது எமது இனத்தின் விடிவு வெகு தூரம் இல்லை என்பது புரிகிறது. உங்களைப் போல பல தாய்மார்கள் முன்வரும் செய்திகள் எமது கரங்களை வலுப்படுத்துகின்றன. மக்களது

ளது. அவரது இறப்பு அவர் ஏற்றுக்கொண்ட சுதந்திர வாழ்வு. எம் இனத்தின் விடிவிற்காகப் போராடும்போது நேரடி மோதலில் துப்பாக்கிக் குண்டொன்றை ஏற்று அவர் தழுவிய மரணம் வீரமரணம். வாழ்ந்தால் சுதந்திரமாக எமது உரிமைகளுடன் எமது தாயகத்தில் வாழவேண்டும். அன்றேல் அந்தச் சுதந்திரத்திற்காகப் போராடி மடிவதேமேல்.

'எமக்கென' ஒரு தாயகம் அமைக்கும் வரை 'எமக்கென' ஒரு குடும்பம் அமைப்பதனை நான் விரும்பவில்லை. இனியும் நாம் அடக்கி ஒடுக்கப்படும் நிலையில் இருப்பதை என்னால் அனுபதிக்க முடியாது. இன்று நாட்டில் நிலவும் மாகாணசபை, பாராளுமன்றம் என்பவற்றை நம்பி ஆயுதப் போராட்டத்தினைக் கைவிடும் நிலையில் நானோ, எமது இயக்கமோ இல்லை இவை எமக்கு எதிரியால் ஏற்படுத்தப்படும் வழமையான தடைகளே. மக்களது எழுச்சிகளை அடக்கி போராட்டத்தினைத்திசை திரும்பச் செய்யப்படும் சதிவேலைகளே.

(10 ஆம் பக்கம் பார்க்க)



# பாரதச்சுவடுகள்

### பாப்பாளையன்

(2)

சுதந்திரத்தின் பின்னாலே தமிழர் வாழ்வை
சுரண்டுபவர் சிங்களவர் என்று ஆகி
நிதந்திரமாய் தமிழினத்தை அடிமை செய்ய
நீதியற்ற திட்டங்கள் கொண்டு வந்து
பதம்கெட்ட பண்புடைத்துத் தமிழர் வாயில்
பலவந்த மாயூட்டிச் சிங்களத்தை
இதம்கெட்டு, இரக்கத் தத் தானும் விட்டு
இன்னலுற எம்தமிழர், பண்ணலானார்.

துளியேனும் இரத்தமது சிந்தலின்றி
தூக்கியவன் சுதந்திரத்தைத் தந்ததாலே
களிப்புற்றோம் என்றாலும் நடந்ததென்ன?
கருதியது போல் விடிவு கிட்டவில்லை
எளியோரை வலியோர்கள் நசுக்கலாகி
எம்மவர்தம் குலமொழிக்க எண்ணமுற்று
ஒளிபெற்ற தமிழர் தம் உயர்வை நீக்கி
ஒவ்வொன்றாய் உரிமையெலாம் பறிக்கலானார்.

குடிமதிப்பில் தமிழர்தொகை குறைவே, ஆனால்
குடத்து விளக்காயவர்கள் வாழவில்லை
படித்தவர்கள், பணக்காரர், உயர்ந்ததான
பதவிகளில் தமிழர்களே எங்குமாகி
கொடிகட்டிப் பறந்தார்கள் அதனாற்றானே
குமைந்தார்கள் சிங்களவர் இதனையெல்லாம்
முடிவுக்கு இட்டுவரும் முயற்சியாக
முதன்முதலில் மலையகத்தில் கையை வைத்தார்.

முதுகெலும்பாய் இந்நாட்டில் இருந்துகொண்டு
முறிந்து உடல் பொருள்தேடி ஈயும் தொண்டு
அதுதானும் எண்ணாது நன்றிகொன்று
அவர்களது வாக்குரிமை தர மறுத்தார்.
''இது எங்கள் திருநாடு, நாடற்றோர் நீர்
இங்குமக்கு உரிமையென்று சொல்லுதற்கு
எதுவுமில்லை'' எனக் கழித்து வைத்தபோது
எம்மவருட் சிலபேரும் துணைப் போனார்கள்.

குன்றினிலே வாழ்ந்ததமிழ் மக்கள் தங்கள்
குரல்வளையைச் சிங்களவர் நெரித்தல் கண்டு
''இன்றிவர்க்கு நடந்த வினை இலங்கையெங்கும்
இருக்கின்ற தமிழருக்கு நடக்கும் நாளை
தொன்றுபுகழ் கொண்ட தமிழ் மக்களுக்கும்
தோண்டுகிறார் குழி இதனால மீளவேண்டும்
என்று சிலர் முன்னறிந்து எதிர்த்திட்டார்கள்
அன்றுமுதல் தொடங்கிற்று அவலவாழ்வு.

பண்டார நாயக்கா படித்த ஞானி
பதவிக்காய் மதம்விட்ட பௌத்த மதை
கொண்டார்தான் ஆளுதற்கு ஆசை நெஞ்சில்
குறுக்குவழி இனவெறியைக் கொள்கை ஆக்கி
சண்டாளச் சொல்மாரி பொழிந்து வந்தார்.
தியிதனில் சிங்களவர் வீழ்ந்துவிட்டார்
''தொண்டாள வந்த துரை பண்டா'' என்று
துதிபாடி அவர் பாதை தொடரலுற்றார்.

''இருபத்துநான்கு மணி நேரத்துள்ளே
இலங்கையிலே சிங்களமே ஆட்சிசெய்யும்
கருமத்தை நிறைவேற்றக் கட்சி கொண்டேன்
'கை'யதற்கு வாக்களியும் பௌத்த வேத
தருமத்தை வளர்க்கின்ற தொண்டு செய்வேன்
தமிழினத்தை ஒடுக்குதற்கும் வகைகள் செய்வேன்
தருமுங்கள் வாக்கெல்லாம் தருமமாகும்
தாருங்கள் எனக்கென்று கூச்சலிட்டார்.

அருமந்த சிங்களவர் நெஞ்சமெல்லாம்
அக்கினியாய் இனவெறியை மூளவைத்து
பெருமைந்த னாய்த் தன்னைப் பேணவைத்து
பேச்சினிலே விடம்கொட்டிப் பேசப் பேச
உருவந்து உளறிய வாய்ச் சொற்களாலே
உறவோடு வாழ்ந்திட்ட இலங்கைமக்கள்
ஒருநாட்டு மக்களெனும் உணர்வு கெட்டு
இருவேறு நாட்டுக்கு இட்டார் வித்து.

- (தொடரும்)




''நேற்றைக்கு புத்தகக் கடைக்கு புத்தகம் வாங் கப்போனனான்'' என்று தொடங்கினான் சவுந்த ரம்.

''அதில என்ன புதினம்'' என்று கேட்டான் விக்கி ''எஸ். பொ. வின்ரை அப்பையா எண்ட புத்த கம் ஒண்டு இருக்கு தெரி யுமே.''
''ம்''

1972ம் ஆண்டு பெப்ர வரி மாதம் 'அரசு' வெளியீடாய் வந்த அதன் விலை இரண்டு ரூபா. அதை இப்ப சும்மா ஒரு மட்டையை வைச்சு ஒட்டிப் போட்டு இருபத்தைஞ்சு ரூபாய் எண்டு விக்கிறாங்கள். எவ்வளவு அநியாயம் எண்டு பாரன். இதை எந்த ரீதியில் எடுக்க லாம். இப்படித்தான் 1978ஆம் ஆண்டுடிசம்பர் மாதம் வெளியான சாந் தனின் ஒட்டுமா என்ற புத்தகமும் இருபத்தி யேழு ரூபாய் ஐம்பது சதத்திற்கு விற்கினம்.'' ''சரியான பகற்கொள் ளைமாதிரி இல்லையே' ''இப்படி கனக்க நடக் குது. இதுக்கு மறு மொழி சொல்ல எஸ். பொ. அல்லது சாந்தன் தான் வேணும் எஸ். பொ. இஞ்சையில்லை. சாந்தன் தான் இருக்கி றார். கண்டால் கேட்க வேணும்''

★ ★

''என்ரை தம்பியின்ரை 'பேத்' சேட்பிக் கேட் டுக்கு போன வருஷம் அச்டோபர் மாதம் ஒரு அப்பிளிச்சேசன் போட் டனான. சரியான திகதி யைச் சொல்லட்டே. 26. 10. 89'' என்றான். விக்கி. ''இப்ப அதுக் கென்ன'' என்று கேட்ட தாடி மாமாவைக் கோபத்துடன் பார்த் தான் விக்கி.

''உனக்கு எதுச்கும் ஆத் திரம் தான் சொஞ்சம் பேசாமல் இரன்''

''சரிசரி விசையத்தைச் சொல்லு மச்சான்'' என்ற சவுந்திரத்தைப் பார்த்து தாடிமாமா சிரித்தான்.

''26.10.89ல் போட்ட அப்பிளிக்கேசனுக்கு 9. 1. 90இல் பேர்த் சேட்டிப்பிக்கேட் எழுதப் பட்டு இருக்கு. ஆனால் என்ரை கைக்கு வந்தது எப்ப தெரியுமே. 27.2.90 இல் எப்படி யிருக்கு எண்டு பாரன். எழுதி போஸ்ட் பண் ணைக் கிட்டத்தட்ட இர ண்டு மாதம் எண்டால் எப்படி இருக்கும்.

★ ★

''எங்கடை நாட்டுக்கு எதை வரவிட்டாலும் வரவிடலாம் உந்த தமிழ் நாட்டு சினிமாச் சங்கத்தினை வராமல் தடுக்க வேணும்'' என் றான் உரத்த குரலில் விக்கி.

''இருக்கிற ஒரே ஒரு பொழுது போக்கு அது தான் அதில ஏன் டாப்பா மண்ணை அள் ளிப் போடப்பாக்கிறாய் 'எனப் பரிதாபமாகத் தாடிமாமா கேட்டான். ''உனக்கென்ன தாடி யைத் தடவிக் கொண்டு தமிழ் நாட்டு சினிமாப் படங்களையும் சினிமாச் சங்கதிகளையும் பார்த் துப் பார்த்து ரசிப்பாய் எங்கடை சமுதாயம் சீரளியிறதுக்கு உதுதான் முக்கிய காரணம்.''

## அயக்கிரீவன்

''அதெல்லாம் உண்மை தான். முந்தித்தான் பெடியன்கள் தான் டள் ளிக் கூடங்களையும் ரியூ சன்களையும் கட்பண் ணிக் கொண்டு படம் பார்க்கப் போவான்கள் இப்ப இந்தப் பொம்பி ளைப் பிள்ளையளும் அப்பிடி ''கட்'' பண் ணிக் படம் பார்க்க வெளிக்கிட்டுஇருக்கினம் என்று சவுந்தரம் சொன் னான்.

''புத்தகக் கடை வழிய பார்த்தால் இருபது ரூபாய் முப்பது ரூபாய் எண்டு விக்கிற சினிமாக் சஞ்சிகைகளை பொம்பி ளைப் பிள்ளையள்தான் அள்ளிக் கொண்டுபோகு துகள். ஆபாசமான உடுப்புக்களோடை வாற நடிகைகளின்ரை படங்களைப் பார்த்து உந்தப் பொம்பிளைப் பிள்ளையள் என்ன செய் யப் போகுது''

''பெண் விடுதலை பற் றிக் கதைக்கிற எங்கடை பொம்புளையள் முதல் பொம்பிளையளை உந்த சினிமா மோசத்தில இரு ந்து மீட்க வேண்டும்,

''ஏதோ உன்ரை கதை யைப் பார்த்தால் ஆம் பிள்ளை ஏதோ திறம் எண்டமாதிரியெல்லே இருக்கு''

★ ★

கிளிநொச்சியில கவின் கலைக் கல்லூரி திறந்தி ருக்கினமாம் ''நல்ல அலு வல் தானே''. என்றான் சவுந்தரம்.'

''அது நல்ல அலுவல் தான். ஒரு காலத்தில நாடகம் நடிக்கிறதோ, டான்ஸ் ஆடுறதோ பாட் டுப்பாடுறதோ கேடு கெட்ட செயல் எண்டு ஆட்கள் கதைப்பினம் எண்டு என்ரை அப்பா சொல்லுவார் ஆனால் இப்ப நிலைமை மாறிப் போச்சு எல்லாப் பிள் யளும் தங்களுக்கு இருக் கிற திறமைகளை விரு த்தி செய்ய வேணும்.'' 'வ'ஓமோம் எல்லா இட ங்கலையும் உப்புடி கலை லக்கல்லூரிகள் நாடகப் பயிற்சி பட்டறைகள் தொடங்க வேணும்.'' என்றான் விக்கி.

''அண்டைக்கு கிளி நொச்சி கலைக் கல்லூரி திறப்பு விழாவில எங் கடை 'யோகி' பேசின பேச்சுத்தான் முக்கிய மாய்க் கவனிக்க வேனும்.''

''என்னடாப்பா அது.''

''இல்லை. தேர்தலை மையமாக வைச்சு நாங் கள் இந்தக் கலைக்கல் லூரியைத் திறக்கேல்லை ''ஓமோம் முந்தித்தான் வோட்டுப் போடுங்கோ அதைச் செய்யிறம். எண்டு சொல்லிச் சன த்தை வோட்டைப்போ டச் சொல்லிப் போட்டு அவனவன் அடுத்த தேர் தல் வாறவரைக்கும் தங் கடை அலுவலைப் பார் க்கப் போயிடுவான்கள். ''தேர்தலுக்சாகத்தான் ஏதாவது செய்யிறது. எண்ட எங்கடை பாரம் பரிய பண்பாட்டை நாங் கள் உடைக்க வேணும்'' என்றான் விக்கி.

## ஒரு வீராங்கனை

3 ஆம்பக்கத் தொடர்ச்சி

இங்கு தரப்படும் உரி மைகள் வெறும் வாய்ப் பேச்சுக்களே. தேசவ ழமையின் சட்டத்தில் எழுதி வைக்கலாம். ஆனால் அவை நடை முறைக்குச் சாத்தியப் படாதவை. சிங்கள மக்களிடையே மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள முதலாளித்துவ அரசுகள் தமது அரசி யல் இலாபம் கருதி இரு இன மக்களிடையேயும் பகைமையை வளர்ப் பதிலேயே முன்நின்றன சிங்கள மக்களிடையே இன வெறியினை ஏற் படுத்தி தமிழ் மக்கள் மேல் வன்முறையினைக் கட்டவிழ்த்து விட்டதன் மூலம் இனக் கலவரங் களை ஏற்படுத்தி இரு இனத்திடையேயும் சேர முடியாத விரிசலை ஏற்படுத்தி விட்டனர். இனியும் ஒற்றுமை, சகவாழ்வு என்ற போலி நாடகத்தில் நாம் நம்பிக் கைகொள்ள முடியாது' இழப்புகட்கு அஞ்சி ஆயுதங்களைக் கீழே போட முடியாது. இவர் கள் மக்களின் உழைப் பின் இலாபத்தையும் சிலரது உயிரையும் மட் டுமே அழிக்க முடியும். ஆனால் இதனைக் கருத் திற் கொண்டு எமது மக்களின் மண்ணின் வளங்களும் நிலமும் பறி போவதனை நாம் அனு மதிக்க முடியாது.

எமது உரிமைகள் உறுதிப் படுத்தப்படல் வேண்டும். இது எமது சுதந்திர தாயகத்தி லேயே உறுதிப்படுத்தப் படும் என்பதைக் கட ந்த கால வரலாறுகள் எமக்குத் தெளிவாக்கு கின்றன. நாம் போரா டுவது எமது இழந்த உரிமைகளுக்காகவே. இம்மண் எங்கள் சொந்த மண். நாம் எம்மையே ஆண்டமண் இன்று எங் கள் மண்ணிலேயே நாங் கள் ஒடுக்கப்படுகிறோம் இம் மண்ணின் மீட்பே எமது சுதந்திரத்தை நிதர்சனமாக்கும். நாளைய எமது மண் ணின் விடிவிற்காகவும் எம் இனத்தின் சுதந்தி ரத்திற்காகவும், குழந் தைகளின் மகிழ்விற்காக வும் எமதுபோராட்டத் தினை நாம் உறுதியுடன் முன்னெடுத்துச் செல் வோம்.

அம்மா, அக்காவின் சுட்டிப்பயல் குகனும், செல்ல மகள் மைதிலி யும் வளர்ந்துவிட்டார் கள் என எண்ணிப் பார்க் கும் போது மகிழ்ச்சி யினால் மனம் துள்ளு கிறது. குகன் பாலர் பாடசாலை போவதாக அறிந்தேன். அவன் பிஞ் சுக் கரங்களிலே விளை யாட்டுத் துப்பாக்கியு டன் திரிவதனை அறிந் தபோது என்கைகள் வலுவடைகின்றன. அவன் கூறும் '' ஆமிக் காரனைச் சுட்டுச் சுட் டுத் துரத்துவேன்'' என்ற வார்த்தைகள் என் செவியில் இப் போதும் ஒலிக்கின்றன. என் கண்கள் பனிக்கின் றதம்மா. மைதிலியும் தன மழலை மொழி கள் வீடு முழுக்க கேட்கக் கலகலத்து திரி வதாக அறிந்தேன- ''மாமாவையும் சித்தி யையும் போலவே தான் நானும் ..'' என்று கூறிக் கொண்டு இடுப்பிலே விளையாட்டுக் கைத் துப்பாக்கியையும் செரு க்கிக்கொண்டு ஒளித்து விளையாடுகிறார்களாம்

அம்மா, நிச்சயம் இவர்கள் களம் வர வேண்டாம் நாம் மீட் கும் எமது தாயகத்தைக் காப்பதற்கு இவர்கள் தயாராகட்டும். எங்கள் மழலைகள் களத்திற்கு வரவேண்டாம். எமது விடுதலை எங்களா லேயே மீட்கப்பட வேண்டும். இப் போராட் டம் அடுத்த சந்ததிக் கும்...வேண்டாம் எங்க ளோடு முடிவுறட்டும்.

அம்மா, உங்கள் பங்க ளிப்புகள் எம் இனத் தின் விடுதலையினை விரைவு படுத்தும்.

இப்படிக்கு
அன்பு மகள்,
நன்றி சுரபி
சுதந்திரப்பறவைகள்

# நாங்கள்... ஏந்தும்...
## ஆயுதம்!

விருட்சத்தின் வேர்களில்
புதைத்து விட்டாலும்
வெளிவருவதற்கு முடியாமல்
கைகள்
புல்லைப் பிடித்திருக்கவில்லை .....
பிடித்திருப்பது பேனை!
மண்ணின
தலைகளை அறுத்து
விண்ணேறும் ஆயுதம்!
மண்ணின் தலைகளுக்கு
வலித்தாலும்
வெட்டி சரித்துவிட்டு
விண் முட்டும்
அதன் வேகம்!
உள்ளிருப்பது மையல்ல
உண்மைகளின் இரத்தம்!
பேனையின் நாக்கு
பொய்மைகளை பிதற்றுவதற்கு!
எங்கள் பேனைகளுக்கு
போலி வாய்களில்லை
புளுகுவதற்கு!
சோதனைகள் வந்தாலும்
சோரம் போகாதவை!
இழுத்துப் போய்
எழுத வைத்தாலும் - அவை
எரித்துவிட்டு வரும்!
உழுத்துப் போனவர்களின்
எழுத்துக்களுக்கு
உருவம் கொடுக்க
கையில் இருப்பது
மண்களி அல்ல.
உணர்வுகளை உலுப்பும்
உளிகள்!
களங்களில் குதிப்பதற்கு
கையில் ஏந்தும் ஆயுதம்!
சுதந்திரமாய் பறப்பதற்கு
பூட்டி விட்ட சத்திய சிறகு
அவை
சகதிகளில் விழுந்து
அளப்பதற்கல்ல
ஈழ நாதங்களை
எழுப்பி வைப்பதற்கு!
சத்திய நெருப்புகளில் எரிந்து
சந்தோஷப்படும்
தீ நாக்குகள்
எங்கள் பேனைகளின் முனைகள்!
உறுதியின் இருதயம்!
சத்தியத்தின் உறைவிடம்!

- தமிழினி

# மௌனலயம்

## பூமரங்களுக்கு நீரூற்றுவோம்

அன்றைய அந்தக் காற்று மெல்லிய தாய் இன்று என்னை வருடிச் செல்கிறது.

அன்றைய அந்த மேகம் என் மேனியின் மீது சந்தோஷ மழை பொழிகிறது.

இடைக் கால சோகங்களையும், ஒதுக்கி வைத்துவிட்டு - அன்று நான் நடந்த பாதைகளில் மௌனமாய் நடந்து பார்க்கிறேன்.

எங்கெங்கும் மகிழ்ச்சி மரங்கள்

அவற்றின் கீழ் ஆறுதலாய் அமருகிறேன்.

என்ன இது?

இழந்தவை அத்தனையும் என் இதய அறைக்குள் நுழைகின்றன. என் கண்ணீர் உட்பட!

அட!

விழுந்த கண்ணீர் எழுந்து வருகிறதே! 83 ஆம் ஆண்டிலிருந்து வீசிய இனவெறிச் சூறாவளி இன்று சற்று ஓய்ந்து போனாலும் அதனால் ஏற்பட்ட வேதனைகள் இப்போது நெஞ்சைச் சுடுகிறதே!

ஓடித்திரிந்த எம்மை முடமாக்கினார்கள்.

'அவர்களுக்கு, இப்போதுதான் புரிகிறது எங்களால் பறக்க முடியும் என்பது.

உச்சரித்துக் கொண்டிருந்த எம் உதடுகளை பூட்டி வைத்தார்கள். 'அவர்களுக்கு' இப்போதுதான் புரிகிறது எங்களால் துப்பாக்கிகளின் மூலம் பேசமுடியுமென்று.

ஓ!

அந்தக் கருமேகங்கள் மெல்ல .... மெல்ல விலகிக் கொண்டிருக்கின்றன. புரட்சிக்குப் புறப்பட்ட புத்திரர்களால் பூமியின் இருள் விலகத் தொடங்கிவிட்டது.

நான் யார் அந்த ஞாபகங்களை தீயிட்டுக் கொளுத்த ....?

**வவுனியா — திலீபன்**

இடைக் காலத்தில் நாம் இழந்தவை வெறும் உயிர்கள் மட்டுமல்ல; உள்ளங்களும் கூட!

கனவுகள் மட்டுமல்ல, கற்புகளும் கூட!

பழைய தலைவர்கள் போல சலுகைகளை அனுபவிப்பதற்கல்லாமல்; உரிமைகளைப் பெறுவதற்காகப் போராடி வீழ்ந்த மண்ணின் மைந்தர்கள் ஆயிரம் ....

கணவனை இழந்த விதவைகள் ஆயிரம் ....

கடந்த கால கருமேகங்கள் நித்தமும் கண்களின் மூலம் ரத்த மையினால் கவிதை புனைந்து கொண்டிருக்கின்றன!

ஆட்டும் போது ஆடிய 'கிழட்டுத்' தலைவர்களின் பரதம் ஓய்ந்து விட்டது.

புதிய பூக்கள் புரட்சிக்குப் புறப்பட்ட பின்னர் பூமி புளகத்தில் மிதக்கிறது!

சத்தியாக்கிரகத்தால் விடுதலை பெறுவது சாத்தியமில்லை என்று துப்பாக்கிகள் தூக்கிய தோழர்களே!

உங்கள் எழுச்சியை வரலாறு இன்று வளமான வார்த்தைகளினால் எழுதிக் கொண்டிருக்கிறது!

உங்கள் உணர்வுகளை உணர்ந்து, உலகம் இன்று உணர்ச்சி வசப்பட்டு நிற்கிறது!

தங்கள் தேகங்களில் ஓடும் சத்துப் பொருள்களை மரத்திற்கு தியாகம் செய்து விட்டு மடிந்து போகும் இலைகளைப் போல எத்தனை ரத்தத் துளிகளை நீங்கள் மண்ணுக்கு கொட்டி இருப்பீர்கள்....

ஈழப் போராட்டம் இன்று உலகப் புத்தகத்தின் அத்தனை ஒற்றைகளிலும் எழுதப்பட்டது உங்களால் தானே....

'தமிழ வீரமுள்ளவன்' என்று வார்த்தைகளை இறைத்துத் தள்ளாமல் புனிதத் தியாகத்தால் புரியவைத்தவர்கள் நீங்கள் தானே

அடுத்த தலைமுறையின் தூக்கக் கண்களைத் திறந்து விட்ட தோழர்களே....

இங்கே—

கொட்டப்பட்ட அத்தனை படைகளும் உங்களால் தானே கொட்டுப்பட்டுக் கிடக்கின்றன!

எம்மைப் புதைக்க வந்தவர்களுக்கு புதை குழிகள் தோண்டியவர் நீங்கள் தானே

இன்று நாம் வளர்ச்சியடைந்து விட்டோம்!

அடக்கியவர்களைநோக்கி அம்புதொடுக்கத் தொடங்கி விட்டோம்!

பஞ்சுப் பொதிகளைச் சுமக்க முடியாத பருவத்தில் பாறைகளைச் சுமக்கப் பக்குவப்பட்டு விட்டோம்!

சொந்த வாய்களினால் பேசுகிறோம், சொந்தப் பாதங்களினால் யாத்திரை செய்கிறோம்.

பகல் என்பது வெளிச்சம் என்றில்லாமல் 'சுதந்திரம்' என்பதை உணர்ந்து விட்டோம்.

புத்தகத்தோடு வாழ்க்கையையும் நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம்!

மிதிக்கப்பட்டு — நசுக்கப்பட்டு அவற்றின் வேதனை தாங்கமுடியாமல் எழுந்தவர்கள் நாங்கள். அதனால் எங்கள் எழுச்சி இந்த ஈழப் பூமியின் நரம்புகளில் பூபாளமாகிவிட்டது. இடைக் கால சோகங்கள் யாவும் இனிப்பாகிக் கொண்டிருக்கின்றன!

★ ★ ★

அந்தக் காலம், அழகான வசந்தம்! ஆனால் — அர்த்த மற்ற வாழ்க்கை!

தரம்கெட்ட சினிமாவைப் பற்றி சிந்திப்போம். 'அவளொரு மோகன ராகம்' பாடலை ஆயிரம் தடவைகள் ஆராய்ச்சி செய்து கொண்டிருப்போம்.

கண் சிமிட்டி விட்டுப் போன கன்னிகளுக்காக — டைத்தியக் காரத்தனமாய் கவிதைகள் கிறுக்குவோம்.

ஓ!

இளமையை நாம் இயலாமைக்கல்லவா விற்பனை செய்து கொண்டிருந்தோம்!

உறங்கிய காலம் ஓய்ந்து விட்டது!

எமது மௌனங்கள் எல்லாம் சங்கீதமாய்ச் சஞ்சரிக்கின்றன!

கம்பங்கள் இல்லாமலேயே எமது கொடிகள் காற்றில் பறக்கின்றன!

அடடா!

வானத்தைத் தொடும் உயரம் வளர்ந்து விட்டோம்.

வாழ்க்கை எம்மை வசப்படுத்தி விட்டது.

வளரட்டும் புரட்சிப் பூமரங்கள்.

**இன்னும்...**

---

□ நூல் அறிமுகம்

# தரிசனம்

தமிழில் சட்டநூல்களை வெளியிட முடியுமா? என்ற கேள்விக்கு முடியும் என்று கூறி அதனை துரைசிங்கம் ரகு நிரூபித்துள்ளார்.

புத்தம் புதிய கலைகள் செத்த வளருது மேற்கே ...

செந்டுடிவீர் எட்டுத் திக்கும் - கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்

என்ற பாரதியின் வேண்டுகோள் துரைசிங்கம் ரகு அவர்களின் செவிகளில் ஒரு தூண்டுகோலாக விழுந்தமையால் மீண்டும் ஒரு தமிழ் சட்டவியல் நூலை அவர் ஆக்கியுள்ளார்.

பத்து அத்தியாயங்களைக் கொண்ட இந்த நூலை அவர் அழகான தமிழில் எழுதி வெளியிட்டுள்ளார். சட்டநூல்களைத் தமிழில் எழுதுவதற்குப் பரந்த அறிவும் ஆழமான புலமையும், சட்ட நுணுக்கங்களின் தெளிவும் இருத்தல் வேண்டும். இம்மூன்றும் இவரிடம் நிறைவாகவே யுள்ளன. ஆகவே சட்ட நூல்களை எழுதும் தகுதியும் ஆற்றலும் அவருக்கு அமையப் பெற்றுள்ளது.

இந்தநூல் வங்கியாளர் பரீட்சைக்குத்தயார் செய்யும் மாணவர்களது தேவைகளை அடிநாதமாகக் கொண்டு ஆக்கப்பட்டதாயினும் வங்கியியல் சட்டத்தைஒரு பாடமாகப் பயிலும் வங்கியியல் துறை சாராத மாணவாகளுக்கும் பயனுடையதாகவிருக்கின்றது.

வங்கியயில் சட்டம் சம்பந்தமான அறிவைப் பெற்றுக் கொள்ள விரும்பும் பொதுமக்களும் இந்நூலைக் கற்பதன் மூலம் தமது தேடல் முயற்சிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் தமிழில் வங்கியியல் சட்டம்சம்பந்தமாக வெளிவந்துள்ளது இந்த நூல் இத்துறையில் ஒரு மைல்சல் என்றே கூறலாம். திரு. துரைசிங்கம் ரகுவைப் பொறுத்தவரை அவரது வளர்ச்சிப்படியில் இது மற்றுமொரு படிக்கல் ஆகும்.

வங்கியியல் சட்டங்களைத்தமிழ் மொழியில் கற்பதற்குப்போதிய நூல்கள் தமிழில் இல்லாமையை நீக்கும் பாரிய பணியில் ஈடுபட்டுள்ள இந்நூலாசிரியரின் பணிகளுக்கு தமிழ் மககள் உரிய கௌரவம் அளித்து அவரை இத்துறையில் மேலும் மேலும் ஊக்குவிக்க வேண்டியது நம் அனைவரதும் கடமையாகும்.

□ நூலின் பெயர்: வங்கியியல் சட்டமும் நடைமுறைகளும் இரண்டாம் பகுதி

□ நூலை ஆக்கியோன்: துரைசிங்கம ரகு

**சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம்**

---




கவிதை

## நம்பிக்கை

சோழகக் காற்றும்
சோவென அடித்து
ஓய்ந்தது.
... ... ..
வாழப் பிறக்காது
பிறந்ததற்காக
வாழ்கின்றோம்.
பாதையிலே
நடக்கவில்லை
நடப்பதுதான்
பாதையாகும்.
இன்னும்
இருள்
விடியலைத்தான்
காணவில்லை
பனி மூட்டங்கள்
விலகி வர
தெருக்கள்
ஒளிரும்.
மானிடம்
விழித்தெழும்
புதிய வரலாறு
படைக்கும்.

- டானியல் ஜீவா




28-10-1989

இன்று தீபாவளி தினம். இரண்டு தீபாவளியை ஆக்கிரமிப்பாளரின் சிறைக்குள் சந்திப்பவர்களே இங்கு அதிகம் இருக்கிறோம். மூன்று தீபாவளிகள் தொடர்ச்சியாக இங்கே இருப்பவர்களும் உண்டு. காலையில் இருந்து இந்தக் கைதிகள் தான் எவ்வளவு குதூகலமாய் இருகிறார்கள்? இன்று பெரும்பாலும் எல்லோர் வீட்டிலிருந்தும் தங்கள் தங்கள் பிள்ளைகளைப் பார்வையிடுவதற்கு வருபவர்களாகையால் எல்லோருமே காலையில் ''I. P. K. F குளிப்பு'' குளித்திருக்கிறோம். அத்துடன் எங்கள் வீட்டுச் சாப்பாட்டை நாங்கள் சாப்பிடுவதற்கு 'இந்திய சாம்ராச்சியம்'' ''பெரிய மனது'' பண்ணி அனுமதியளித்துள்ளது.

காலையில் இருந்தே ஒவ்வொரு புளக்கிலிருந்தும் கூட்டாகவும் தனித்தனியாகவும் வாழ்த்துக்கள் வந்தன. நாமும் இங்கிருந்து பலருக்கும் வாழ்த்துக்கள் அனுப்பினோம். எல்லா வாழ்த்துக்களும் இச்சிறையிலிருந்து எமக்குச் சுதந்தரம் கிடைக்க வேண்டும் என்பதையும் எனது இனத்தின் விடுதலைக்காக நாம் தொடர்ந்து உழைக்க வேண்டும் என்பதையுமே கருப்பொருளாகக் கொண்டிருந்தன. இச்சிறை வாழ்வுதான் எத்தனை பேரை கவிஞர்களாகவும், எழுத்தாளர்களாகவும் மாற்றி விட்டது. சிறைச்சாலை ஒரு பல்கலைக் கழகம் என்பதை புத்தகங்களில் படித்ததை விட அனுபவ பூர்வமாக உணர்கையிலேதான் இந்த உண்மை தெரிகிறது. ஒன்று மட்டும் நிட்சயம். இந்தச் சிறைச்சாலை விடுதலைப் போராட்டத்தை விட்டு அணுவளவேனும் விலத்த முடியாதளவுக்கு அனைவரையும் மாற்றி விட்டது.

நீண்ட நாட்களாக தமது பிள்ளைகளுக்கு, தமது கணவன்மாருக்கு தமது கையால் சமைத்த உணவை வழங்கும் சந்தர்ப்பம் இல்லாத படியால் இன்று எல்லாப் பெண்களும் தாய்மாரும் ஏராளமான சாப்பாட்டைக் கொண்டு வந்துள்ளனர். குறிப்பாக பிறகும் வைத்துச் சாப்பிடக் கூடிய சாப்பாடுகளையே எல்லா வீட்டாரும் கொண்டு வந்துள்ளனர். நாங்கள் மட்டுமல்ல எமது வீட்டுக்காரர்களும் சூழ்நிலைக்கேற்ப புத்திசாலித்தனமாக நடந்து கொள்கிறார்கள். இவ்வளவும் ஒரு ஆளுக்கா?'' என்று ஒவ்வொரு இந்திய ஜவான்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தபடியே ஒவ்வொருவரும் வந்தனர். என்ன செய்வது ஒவ்வொரு சிப்பாய்க்கும் தன்னுடைய நாட்டு மக்களின பொருளாதார நிலையை நினைக்கையில் இந்தக் கேள்வி கேட்பது தவிர்க்கமுடியாது தான். இந்த லட்சணத்தில் நாடுபிடிக்க வந்துவிட்டார்கள் இங்கே. ஆனால் எங்களுக்குத்தான் தெரியும் வருடக்கணக்காக உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு எம்மைப் பார்ப்பதற்காக

**ஒரு கைதியின் சிறைக் குறிப்புகள்**

எமது குடும்பத்தவர் அலைந்த அலைச்சல் இந்தச் சாமான்களை வாங்குவதற்காக எதை எதைவிற்றிருப்பார்கள். எங்கே கடன வாங்கியிருப்பார்கள். என்பதைத் தான் எமது உள்ளம் நினைக்கிறது.

கவிஞர்ஒருவர் விசிற்றுக்குச் சென்று வந்ததும் சந்தோஷமாக வரவேற்றோம், எமது நிலையில் அவர் இல்லை என்பதை காட்டியது. என்ன என்று கேட்டோம், தம்பி சொன்னான். ''அப்பாவுக்கு ஆமிக்காரன் அச்சுபோட்டான்'' என்று, இந்திய இராணுவத்திடம் அடி வாங்குவது ஒன்றும் புதிய விடயமில்லைத் தான். என்றாலும் எங்களைப் பார்ப்பதற்கென்றுவந்த இடத்தில் அதுவும் ஒரு நல்ல நாளில் இவங்களிடம் அடிவாங்கியதை நினைத்தால்... என்று கண்ணீர் மல்கக் கூறினார். ஏன் அடித்தாய் என்று கேட்கவா முடியும்? ''நேசக்கரங்கள்'' ''அன்புவழி'' ''வெற்றிமாலை'' வாழ்க!

அனைவரும் பரஸ்பரம் உணவு வகைகளைப் பரிமாறிக் கொண்டோம். எங்களுக்குள் நாங்கள் சிருஷ்டித்துக் கொண்ட உலகில் அதிகபட்ச சந்தோஷம் இவையும் எங்கள் குடும்பத்தினர் பார்வையிட வருவதும் தானே!

காலை 7 மணியிலிருந்து மாலை 6 மணி வரை எல்லோருக்கும் விசிற்வந்து கொண்டேயிருந்தது. இன்று சாமான்களை வாங்கும போது அவர்கள் சொல்வது தான் ஆகக் கூடியகதை. அதற்குமேல் இன்று பேசமுடியாது. மற்றநாளில் மட்டும் என்ன வாழ்கிறது? எங்கள் இலக்கத்தைக் கூப்பிடமாட்டார்களா? என்று இருக்கும். இலக்கம் வந்து அங்கே வீட்டுக்காரரைப் பார்த்ததும் ஏன் தான் இன்று வந்தார்களோ? என்று இருக்கும். ஏனெனில் காலை 6 மணியிலிருந்து எங்கள் ஒவ்வொருவரின் குடும்பத்தினரும் சாப்பாடு இல்லாமல் இங்கே வரிசையாகக் காத்துக் கொண்டிருக்கின்றனர். அப்படியாயின் எத்தனை மணிக்குச் சமைத்திருப்பார்கள் எவ்வளவு சிரமப்பட்டு இங்கே வந்திருப்பார்கள் பட்டினியால் காய்ந்த முகத்துடன் சிரித்துக் கொண்டே சாமான்களைஎங்களுக்கு தருகின்றார்கள். விருந்தினர்களைநான் பார்க்கும் சந்தர்ப்பம்பிற்பகல்3மணிக்குத்தான் கிட்டியது. மகளின் கோலத்தைக் கண்டு இதயம் வேதனையில் ஆழ்ந்தது.

முன்பெல்லாம் எமது நாட்டில் புதுவருடம், தீபாவளி, பொங்கல் தினங்களில் ஊருக்கு ஊர் விளையாட்டுப் போட்டிகள் திருவிழாக்கள் கலைநிகழ்ச்சிகள் நடக்கும். மக்களெல்லாம் மகிழ்ச்சியுடன் கூட்டங்கூட்டமாக அங்கு கூடுவார்கள் ஆனால் இன்று எல்லாத்தாய் தந்தையரும் தங்கள் பிள்ளைகளின் முகத்தை இன்று பார்க்கமாட்டோமா? என்று இந்த நல்ல நாள் பெரு நாட்களில் காலையிலிருந்து மாலை வரை இங்கே தவங் கிடக்கின்றார்கள். ராஜீவின் ''அமைதி''யின் பெயரால்.

அடுத்த புளொக்கில் இருக்கும் உன்னதமான நண்பர் ஒருவரோடு இன்று இரண்டு நிமிடம் பேச சந்தர்ப்பம் கிடைத்தது இதயம் மகிழ்ச்சியால் பூரித்தது.எவ்வளவுஇலட்சியப் பற்றுள்ள மனிதர்களை சிறைச்சாலையில் காண முடிகிறது. இந்த விடயத்தில் இந்திய அரசின் எதிர்பார்ப்பு தலைகீழாக மாறிவிட்டது. இந்தச் சிறைச்சாலை சிறைவாழ்வு எம்மைப் பாதிக்கவில்லை. பாதிக்கவும் முடியாது என்பதை இவர்களுக்கு உணர்த்தவேண்டும் என்பார் நண்பர் அவ்வாறே இங்குள்ள நிலைமையும் இருக்கிறது அடுத்த தீபாவளி இந்திய நரகாசுரர்கள் இல்லாத தீபாவளியாக இருக்குமென நான் திடமாக நம்புகிறேன். □

## நாமிருக்கும்

2ம் பக்கத் தொடர்ச்சி

**த. சங்கரப்பிள்ளை -வியாபாரி, வர்த்தகர்கள் சங்கத்தலைவர்**

எங்களுடைய இந்த அமைப்பு வியாபாரிகளின் ஒற்றுமைக்காக எழுபதுகளின் ஆரம்பத்தில்ஸ்தாபித்தோம். ஆரம்பத்தில் எமது பிரச்சினைகளை சுலபமாக தீர்த்துகொள்ள இது பெரிதும்உதவியது.பிறகு பிறகு ஏற்பட்ட அரசியல் பிரச்சினையால் நாங்கள் பெரும் அவஸ்தைகளுக்குள்ளானோம். இலங்கை ஆமி இருக்கேக்கை ஷெல்லடி எப்ப எப்ப கடை பூட்டுவம் என்டு சொல்லேலாது. அதோட அந்த நேரத்தில சனம் ரவுணுக்கு வரவே பயப்பட்டது. அதால வியாபாரமே இல்லை. சும்மா கடையை சுத்தி மண் மூட்டை அடுக்கிப் போட்டு இருக்கவேண்டியத தான்.

பேந்து எங்கட ஜவானுங்கள் வந்தாங்கள். பிரச்சினையும் வந்திச்சுது, நாங்கள் துப்பாக்கி முனையில எங்கட கடையையும் சங்கத்தையும் நடத்தவேண்டிய நிலை இந்த ஈ.என்.டி.எல்.எப். காரங்கள் தான் எங்களைப்போட்டுப் படாதபாடு படுத்தினான்கள். கடையில நிண்ட பொடியனை பிடிச்சாங்கள், றோட்டுல போறவன் வாறவன் எல்லாரையும் பிடிச்சாங்கள், கடையில் வியாபாரம் இல்லை. ஆனா வேலைசெய்யிற ஊழியர் எல்லாருக்கும் 1500 ரூபா சம்பளம் வை எண்டாங்கள்.இதுக்கெண்டு ஒரு கூட்டம் வைச்சு 1500 ரூபா கொடுக்க உடன்பட்டவங்கள் கையை உயர்த்துங்கோ எண்டாங்கள், நாங்கள் உயர்த்தேல்ல, உயர்தாதவங்களை உயர்த்த வைப்போம் எண்டாங்கள், எல்லாரும் உயர்த்திட்டோம்.

ஆனால் இப்ப ஒரு பிரச்சினையில்லை. எங்கட வியாபாரத்திலயோ அல்லது சங்கத்திலயோ ஒரு கட்டுப்பாடும் இல்ல. நாங்கள் எங்கட பாட்டில சுதந்திரமா தொழிலாளருடைய திருப்திக்கேற்ப சம்பளம் கொடுக்கிறோம், அதோட மேலதிகப்படியும் கொடுக்கிறோம், ஒண்ணர நாள் லீவு கொடுக்கிறோம். இப்படியே நாடு ஒரு நல்ல நிலைக்கு வரவேணும் அதுதான் எங்கட விருப்பம்.

**த. பரமலிங்கம் பத்திரிகையாளர்**

பத்திரிகைகள் எப்பொழுதும் சுதந்திரமாக இயங்கவேண்டும். நான் ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் நான் கொடுக்கும் செய்திகள் மக்கள் குறைகளை தீர்ப்பதற்காகவோ, நியாய, அநியாயங்களை எடுத்து சொல்வதாகவே இருக்கும்பொழுது அவற்றை பிரசுரிக்க வேண்டியது பத்திரிகையின் கடமை. ஆனால் இந்த மாதிரியான சுதந்திரம் கடந்த இரண்டு வருடங்களில் என்றுமே இருந்ததில்லை.

ஐ.பி.கே.எவ். இந்த பிரதேசத்தை ஆக்கிரமித்திருந்த வேளையில் நான் ஒரு செய்தியை பெற்று அதனை பத்திரிகைக்கு அனுப்புவதில் பெரும் சிரமங்கள் இருந்தன. நினைத்த உடன் நினைத்த ஒரு இடத்துக்கு போய் செய்தி எடுக்க முடியாது. ஒரு நல்லது தீயதை மக்களுக்கு எடுத்துச்சொல்ல இயலாது.உதாரணமாக இந்தியஇராணுவம் ஒரு முறை எல்லா கடற்தொழிலாளருக்கும் ஒரு சட்டம் போட்டது. அதாவது எவரும் கடலுக்கு மீன்பிடிக்கப் போகக்கூடாது.

இதனை நான் செய்தியாக தயாரித்து பத்திரிகைக்கு கொடுத்ததற்காக என்னை சுற்றி வளைத்து தேடினர்.

அவர்களை தொடர்ந்து வந்த இரண்டுஇயக்கங்களும் பத்திரிகைகளையே இயங்கவிடவில்லை. இதனால் எனது தொழிலை நான் இடைநிறுத்த வேண்டி வந்தது. தாங்கள் ''விடுதலை'' என்று ஒரு பத்திரிகையை நடாத்தி அதையும் மக்கள் வாங்க விரும்பாததால் பலவந்தமாக மக்கள் கைகளில் திணித்து அதற்கான பணத்தையும் பறித்து கொண்டனர். எல்லோரும் துப்பாக்கிக்குப் பயந்து பத்திரிகைகளை பெற்று அதற்கான பணத்தையும் கொடுத்தனரே தவிர விரும்பி எவரும் வாங்கவில்லை.

இப்பொழுதுஎன்னால் மட்டுமல்ல அனைத்து பத்திரிகையாளராலும் சுதந்திரமாக இயங்க முடிகிறது. பத்திரிகையாளர் மீது எந்தவித சந்தேகங்களும் எவரும் கொள்ளவில்லை. மக்களின் தீர்ப்புக்கு விடக்கூடிய செய்திகளை நாம் அனுப்பும்போது அந்தந்தப்படியே பிரசுரிக்கப்படுகிறது. இது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. □